
# வடக்கின் வசந்தங்கள்



கலாநிதி செ.சந்திரசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வசந்தங்கள்

(சிறு கதைகளின் தொகுப்பு)

ஆக்கம்

கலாநிதி செ.சந்திரசேகரம்

அபி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 07

தலைப்பு : வடக்கின் வசந்தங்கள்
(சிறு கதைகளின் தொகுப்பு)

ஆக்கம் : செ. சந்திரசேகரம்

பதிப்புரிமை : ச.அபிசேகன்

பதிப்பு : 2015
அபி பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது.
196/23 தலுவில் லேன் நவாலி வடக்கு
மானிப்பாய், யாழ்ப்பாணம்.

Title : Vadakkin Vasanthankal

Author : S.Santhirasegaram

Copy right © : S.Apishegan

First Edition : 2015

Published by : API Publisher
No 196/23 Thaluvil Lane, Navaly North
Manipay, Jaffna

Designed by : Maruyugam, 42 Sir.Pon.Ramanthan Road,
Van-east, Jaffna.

Printed by : Gaggai Printer , No K.K.S Road, Jaffna

ISBN 978-955-44890-3-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்


என்னுரை

அணிந்துரை

1. வசந்தத்தை தேடி

2. ஸாரும் அண்ணையும்

3. ரெக்னோலொஜி

4. டெத் சேர்ரிபிக்கற்

5. இயம வீடு

6. லீசிங்7.பச்சோந்திகள்

8. பட்டத்தின் வலிகள்

9. வேலியும் பயிரும்

10. அஞ்சலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இலக்கியம் காலத்தின் கண்ணாடி ஆகும். சிறுகதைகள் மற்றும் நாவல்கள் வெறுமனே கற்பனைகளையும் இலக்கிய இரசனைகளையும் கொண்டிருப்பனவாக மட்டும் அமையக் கூடாது. மாறாக இவை மக்களின் சமகால பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் எடுத்து இயம்புவனவாக அமைய வேண்டும். இலங்கையில் குறிப்பாக வடக்கில் தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை எடுத்து இயம்புவதே இவ் வெளியீட்டின் நோக்கமாகும். யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் வடக்கின் வசந்தம் நிஜமாகவே இங்கு வீசுகின்றதா? என்பதை சிறுகதைகள் ஊடாக வெளிக் கொண்டுவர இவ் வெளியீடு முனைகின்றது. குறிப்பாக பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை சிறுகதைகள் ஊடாக வெளிக்கொண்டு வருவது இவ் வெளியீட்டின் நோக்கமாகும்.

முதலாவது கதையானது வடக்கின் வசந்தம் வடபகுதியில் வெளிநாட்டு உழைப்பினால் மட்டுமே நடைபெறுகின்றது என்பதையும் அவ்வாறான வசந்தத்தை தேடும் முயற்சியில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் வேதனைகளையும் சோதனைகளையும் எடுத்து இயம்ப முற்படுகின்றது. குறிப்பாக அகதி அந்தஸ்த்தை ஐரோப்பாவில் பெறுவதற்க்கு சட்டரீதியற்ற கடல் பயணங்களில் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை எடுத்துக் கூறுகின்றது.

இரண்டாவது கதையானது பொதுத்துறையை விட தனியார்துறை எப்படி வினைத்திறைமையாக தொழிற்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. பொதுத்துறையில் 'மதியுரைஞர்கள்' என்ற உழைப்பானது எவ்வாறு வினைத்திறமையற்று செயற்படுகின்றது என்பதை இக் கதை எடுத்துக் காட்டுகின்றது.

மூன்றாவது கதையானது தொழில்நுட்பம் குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் எவ்வாறு மனிதனின் செயற்பாடுகளை விரைவுபடுத்தி நேரத்தை மீதப்படுத்துகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

நான்காவது கதையானது வன்னிப் பிரதேசத்தில் பல யுத்த விதவைகள் எவ்வாறு பொருளாதார மற்றும் சமூக காரணிகளால் விபச்சாரிகளாக மாற்றப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச் சான்றிதழ்கள் யுத்தத்தில் இறந்தவர்களுக்கு இன்று வலிய அழைத்து இலகுவாக வழங்கப்படுகின்றன. ஆனால் ஆரம்பத்தில் இது மறுக்கப்பட்டது. ஒரு கடதாசியில் கொடுக்கப்பட வேண்டிய ஆவணம் எப்படி ஒரு யுத்த விதவையை சமூக சீர்கேட்டுக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கின்றது என்பது இக் கதையின் மையமாகும்.

ஐந்தாவது கதை யுத்தத்தின் பின்னர் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் எவ்வாறு அவர்களின் எஞ்சிய சொத்துக்களையும் அழித்து அவர்களின் குடும்பத்தில் தீராத கடன் சுமையை ஏற்படுத்தி அவர்களை அழித்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஆறாவது கதை யுத்தத்திற்குப் பின்னர் லீசிங் கம்பனிகள் எப்படி, வடக்கின் மக்கள் பல இன்னல்களைக் கடந்தும் பொத்தி பொத்தி பாதுகாத்து வந்த எஞ்சிய சொத்துக்களையும் சுரண்டி எடுத்து அவர்களை கடனாளியாக்கியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இறுதி நான்கு கதைகளும் அறிவுச்சாலை ஒன்றில் நடைபெறும் பிரச்சினைகளை எடுத்துக் கூறி அவைகளை சீர்திருத்த முனைகின்றது. தமிழர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட தீர்க்கக் கூடிய பிரச்சினைகளையும் நாங்கள் சரிப்படுத்தவில்லை என்பது இக்கதைகளின் சாராம்சங்கள் ஆகும்.

ஏழாவது கதையானது மிகப் பெரிய உயர்கல்வி நிறுவனத்தில் மாணவர்களின் உரிமைகளை அடக்கி ஒடுக்கி அவர்களை போராடத் தூண்டுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலான காலத்தில் மாணவிகள் மீது பாலியல் தொந்தரவுகளை பிரயோகித்து அவர்களின் பரீட்சை புள்ளிகளை திட்டமிட்ட முறையில் அறுத்த ஆசிரியர் மீது பலமுறை குற்றம் நிரூபிக்கப்பட்டும், நிர்வாகம் தொடர்புபட்ட மாணவர்கள் வெளியேறும் வரை குறித்த ஆசிரியரை இடைநிறுத்திவிட்டு மீண்டும் அவரை உள்ளீர்த்து இடைநிறுத்தப்பட்ட சம்பளத்தை வழங்கி சமூகத்தால் வேண்டப்படாத குற்றத்தை செய்தவரை காப்பாற்றும் அளவுக்கு அரசியல் தலையீடு உள்ள, தலைமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்க முடியாத மிக மோசமான நிர்வாகப் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது கதை பல்கலைக்கழக பட்டதாரி ஒருவர் அப் பட்டத்தை பெற்று அதன் வழி சமூகத்தில் பெறுகின்ற மன வேதனைகளையும் மன உழைச்சல்களையும் எடுத்துக் காட்டுகின்றது. வாழ்க்கைக்கு பொருத்தமற்ற மற்றும் பட்டதாரிகளின் சுய ஆற்றலை வெளிக்கொண்டு வராத பட்டப் படிப்பு ஏற்படுத்தும் அவமானங்களை இது எடுத்துக் காட்டுகின்றது.

ஒன்பதாவது கதை பெரிய அறிவுச்சாலையில் மாணவர்களை பாதுகாக்கின்ற ஆசிரியர்களே தங்களுடைய பரீட்சை அதிகாரத்தை பயன்படுத்தி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவிகள் மீது பாலியல் தொந்தரவுகளை மேற்கொள்ள முனைவதை எடுத்துக் காட்டுகின்றது. கல்வி கற்ற சமூகம் தமிழ் மாணவர்களுக்கு அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி பாதுகாப்பை வழங்க தவறியுள்ளமையை இக் கதை எடுத்துக் கூறுகின்றது.

இறுதியான கதையானது வடபகுதியிலுள்ள உயர்கல்வி நிறுவனத்தில் உள்ள ஒடுக்குமுறையை விட அரசாங்கம் வடக்கில் மக்களின் அடிப்படை உரிமைகளை எவ்வாறு அடக்குகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. சுயநலத்தில் தொழிற்படுகின்ற சில புத்திஜீவிகள் இப்பிரதேசத்தின் மீதான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்காமல் விட்டாலும் பரவாயில்லை, இவ் ஒடுக்குமுறைக்கு சார்பாக பதவியைப் பெறுவதற்காக துணை போவதை எடுத்துக் காட்டுகின்றது.

இக்கதைகளில் வரும் கதாபாத்திரங்களும் மற்றும் சம்பவங்களும் வெறும் கற்பனையே ஆகும். இக் கதைகள் எவரையும் தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதை நோக்கமாகக் கொண்டவை அல்ல. மாறாக எமது சமூகத்தின் சமூக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டவை ஆகும்.

அன்புடன்,

கலாநிதி செ.சந்திரசேகரம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
சித்திரை 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

ஒரு உண்மையான கலை இலக்கிய கர்த்தா என்பவன் சுதந்திரமானவன். கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சரித்து புதிய உலகின் பிறப்பை யாசிப்பவன். தான் வாழும் உலகோடு எப்போதும் இடையறாத தொடர்பை பேணுபவன் அதன் மீது தனது கூர்மையான பார்வையை செலுத்துபவன். தன்னோடு வாழும் சக மனிதர்களைக் காட்டிலும் உலகை வித்தியாசமாகக் காண்பவன். இவன் தன் "மனக்கண்" கொண்டு உலகைக் காண்பதால் இது நடக்கிறது.

உலகில் நடக்கும் இழிசெயல்களைக் கண்டு வெகுண்டெழுபவன்., நல்ல செயல்களைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுபவன்.

உலகில் தான் கண்டவற்றையும், கண்டதன் பயனான தன் உள்ளக் கிளர்ச்சியையும் இவன் கலை, இலக்கிய படைப்பாக்கம் செய்கிறபோது, அப் படைப்பாக்கம் ஏனைய மனிதர்கள்-வாசகர்கள்-பார்வையாளர்கள்மீது தாக்க விளைவை உண்டுபண்ணுகிறது. அவர்களை கிளர்த்துகிறது. உணர்ச்சிக் கடலில் திளைக்கச் செய்கிறது.

இந் நிலையானது கலை, இலக்கிய கர்த்தாக்கள் - வாசகர்கள்,பார்வையாளர்கள் இடையே ஒரு உணர்ச்சிக் சங்கம நிலை தோன்றும் வாய்ப்பை ஏற்படுத்திவிடுகிறது.

இத்தகைய கலை, இலக்கிய அனுபவம் அவர்களை புதிய உலகை உருவாக்கும் பணியில் முன்னோக்கி வழிப்படுத்துகிறது.

கலாநிதி சந்திரசேகரம் ஒரு பொருளியலாளன். எனினும் 'கலைமனம்' கைவரப் பெற்றவர். தான் வாழும் உலகில் 'சொரணை' அற்று வாழ்பவர் அல்ல. கலை உணர்வு மிக்கவர். அதனால் இழிசெயல்களைச் சகிக்காதவர். வெகுண்டெழுபவர்.

2009இல் தொன்மை மிக்க தமிழ் இனத்துக்கு ஏற்பட்ட அழிவு இவர் மனதைப் பாதித்துவிட்டது. இனம் ஆக்கிரமிக்கப்பட்டது மட்டுமன்றி அபிவிருத்தி என்ற பெயரில் அவர்கள் 'ஒட்டாண்டி' ஆக்கப்பட்டதும், அவர்கள் மத்தியிலேயே 2009இன் பின்னரான நிலைமையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகமாக்கி ஒரு புதிய அதிகார வர்க்கம் மேற்கிளம்பி சூறையாடலில் - இளம் பெண்களைச் சூறையாடுவது உட்பட ஈடுபட்டமையும் இவர் மனதை வெகுவாகப் பாதித்துவிட்டன. தன் உள்ளத்தில் கிளர்ந்த உணர்வுகளை கதைகளாக வடித்து 'வடக்கின் வசந்தங்கள்' என்ற நூலாக வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

இவர் தனது நூலை சிறுகதைத் தொகுப்பு என்று கூறுகிறார். 'சிறுகதை' என்றவுடன் வாசகர்கள் மனதில் அது ஒரு 'புனைவு (fiction) என்ற பதிவையே ஏற்படுத்தும். புனைவு என்பது வெறும் கற்பனையானது. உண்மையற்ற சம்பவங்களுடன் 'deal' பண்ணுவது. அச் சம்பவங்களைக் கற்பனை பண்ணி கதை பண்ணுவது. ஆனால் இவரது கதைகள் வாழ்வின் உண்மையான சம்பவங்களை அடியொற்றி எழுந்தவை. புனைவு அல்லாதது (non-fiction) தன்னைச் சூழ நடந்த சம்பவங்கள் தன்னைத் தூண்டியதாக இவர் கூறுகிறார். அச் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்தபோது தன் மனக் கண்ணில் 'தோன்றிய' அல்லது தான் கண்ட கற்பனைகளை கதைகளாக வடித்துள்ளார். இது ஒரு தன்னெழுச்சியான (Spontaneous) செயற்பாடு.

தனது கதைகள் ஒரு நல்ல சமூகத்தைத் தோற்றுவிக்க தூண்டுகோலாக அமைய வேண்டும் என்பது இவர் எதிர்பார்ப்பு. சாதாரணமாகக் கதைக்கப்படாத விடயங்களை இவர் கதைக்கிறார்.

இன்று நிறுவனங்கள் மக்கள் விரோத அரசியலின் மயப்பட்டுள்ளது. பதவி மோகம் தலைவிரித்தாடுகிறது. பதவிகளுக்காக எதையும் இழந்து விலைபோய் பலர் சீவிக்கிறார்கள். சாதாரணர்கள் ஒடுக்கப்பட்டுள்ளார்கள். பயத்தில் உறைந்து போயுள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர்களில் பலர் வேண்டா வெறுப்பாக வாழ்கின்றனர். அவர்கள் கதைகளில் சோர்வு தெரிகிறது. 'இருக்க வேண்டும்., ஏதோ சமாளித்துப் போவோம்' என்கின்றனர்.

மாணவர்கள் ஏனோ தானோ மனநிலையில் உள்ளனர். 'ஏதோ வந்துவிட்டோம் முடித்துவிட்டுப் போய்விடுவோம்" என்கின்றனர். 'பயம்' என்கின்றனர். கதைத்தால் தமது வாழ்வு சின்னாபின்னப் பட்டுவிடும் என அஞ்சுகின்றனர்.

பண்பாடு சீரழிந்து நமது சமூகம் ஒரு நோயுள்ள சமூகமாகிவிட்டது. இத்தகைய நிலைமையில், 'பேசாப் பொருளை பேசத் துணிந்த'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரனின் கதைகளுக்கு ஒரு 'ஆற்றுப்படுத்தும்' வலு உண்டு.

தமது மனங்களுக்குள் புழுங்கிக்கொண்டு ஆனால் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் தவித்தவர்களுக்கு இக்கதைகள் ஒத்தடம் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

தாம் பேச விரும்பினாலும் பேச முடியாத விடயங்களை ஒரு துணிவுள்ள இலக்கியகாரன் பேசுகிறானே என்பது ஒடுக்கப்பட்டவர்களின் மனதுக்கு இதமாக இருக்கும்.

இதுதான் இச் சிறுநூலின் வலு.

ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கும் பணியில் தனது இத்தகைய 'கதை சொல்லும்' (narrative) முயற்சியை தொடரப் போவதாக இவர் கூறுகிறார்.

பொருளியலாளனாக இவர் செயற்பட்டாலும் கலை, இலக்கிய செயற்பாட்டிலும் இவர் ஈடுபடுவதன் மூலம் பெறும் பயிற்சி சமூகம் பற்றிய இவரது பார்வையை மேலும் கூர்மைப்படுத்தி ஆழமான தரிசனங்களை இவருக்கு கொடுத்து மேலும் ஆழமான கதைகளைப் படைக்கும் ஒரு படைப்பாளியாக சந்திரசேகரனை நிமிர்த்தும் என்பது திண்ணம்.

கலாநிதி சந்திரசேகரனுக்கு எனது வாழ்த்துக்கள்.

அவரது இச்சிறுநூலை பலர் படிக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

கலாநிதி கே.சிதம்பரநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலை துறை
யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதைகளில் வரும் கதாபாத்திரங்களும்
சம்பவங்களும்
வெறும் கற்பனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தத்தை தேடி

ஐரோப்பாவின் மார்கழி மாதக் குளிர்.

தோலைத் துளைக்கின்றது.

மூடிய இருள்,

அலைகளின் ஓசையின் மத்தியிலும் அழுகுரல்கள்,

பனித்தூறல்களை உள்வாங்கும் கடல் நீர்,

பனிப்புயல், இடையிலே டோச்லைற்றின் வெளிச்சம்,

இவைகளின் மத்தியில் ஓர் றோலரில் இருந்து பிஸ்ஸிங் ஸிப்புக்குள் தாவினான் குமார். நாற்பது நாள் கால்பாதி ரொட்டியுடன் பட்டினியில் இருந்து உடல் பலத்தையும் உள பலத்தையும் இழந்தவனுக்கு இந்த தாவல் ஓர் திருப்பு முனை.

கண் திறக்கவே முடியவில்லை. முயற்சிக்கிறான்.

"நீர் பயணம் செய்த கப்பல் கடலில் மூழ்கிறது., கற்பனை சித்திரம் வரைக".

இது எங்கேயோ ஓலெவல் பரீட்சைக்கு எழுதிய ஞாபகம், ஆனால் இன்று அவனுக்கு கற்பனை நிஜமாகின்றது.

பனிக்கட்டிகளை உள்ளெடுக்கும் கடலுக்கும் அலைகளை உறங்க வைக்க முடியவில்லை. நீண்ட உயர்ந்த அலைகள் கப்பலுடன் மோதுகின்றன. பல உடல்கள் தாங்கிய உயிர்கள் குமுறுகின்ற சத்தம் கூட இல்லை. அவர்களால் அழுவதற்கு கூட சக்தி இல்லை. முப்பத்து நான்கு நாட்கள் பட்டினி, மாரி வெள்ளத்தில் அகப்பட்டு இழுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் கோழிக்குஞ்சுகள் போன்று அலைகளின் இடையில் உயிர்தாங்கிய உடல்கள் மிதக்கின்றன.

"என்னை காப்பாற்று"

என ஓசை இல்லை.

கைகள் உயர்கின்றன. சைகை செய்கின்றனர். சிலர் கப்பலின் மேல் தட்டில் இருந்த வெற்றுப் பரல்கள் மிதக்கும் மரங்கள் எல்லாம் அசைவற்ற ஆனால் உயிர் உள்ள உடல்களை நோக்கி வீசப்படுகின்றன. அவை குறி தவறாமல் அவர்களைத் தொடுகின்றன. ஆனால் அவைகளை கரம் பிடிப்பதற்கு அவர்களுக்கு வலு ஏது. கப்பலின் சுவருடன் மோதி மோதி பின்னுக்கும், முன்னுக்கும் செல்லும் உடல்கள்.

பல கயிறுகள் கப்பல் ஓரத்தில் கடலுக்குள் விடப்படுகின்றன. கயிற்றை பற்றிக் கொள்வதற்கு வலு இல்லை. ஆனால் உயிர் இருக்கு. உருவுதடம் இட்டு தலையூடாக உடலின் நடுப்பகுதியில் சுருக்கிட்டு தூக்கப்படுகின்றது. பல வருடங்கள் கடல் காற்றில் இருந்த கயிறு அறுந்து தூக்கப்பட்ட உடல் மீண்டும் கடலுக்குள் வீழ்கின்றது. மரண ஒலிகள் ஒன்றா, இரண்டா? பத்தா? நூறா? முன்னூறு பேரை காவு கொண்டது சிலித்தீவு அமைந்துள்ள மத்திய தரைக் கடல்.

1996 மார்ச் பல்கலைக்கழகத்தின் இறுதிப் பரீட்சையை அகதிகளுக்கு நடுவே சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எழுதினான் குமார். நான்கு வருட பட்டப்படிப்பு, அவனின் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு, அக்காக்களின் பெருமூச்சு, அறா வட்டிக்கு எடுத்து படிப்பித்த அம்மாவின் அன்பு வடுக்கள், ஆங்காங்கு நண்பர்களின் அன்புத் தொல்லைகள் எல்லாமே அவனுக்கு எரிச்சலை ஊட்டியது. தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு செல்கிறார்கள்

"குமார் நீர் நல்லாய் பரீட்சை செய்தனீர்தானே. கொஞ்சக் காலம் பொறு பல்கலைக்கழகம் மீண்டும் தொடங்கும் போல இருக்கு. உமக்கு தற்காலிக விரிவுரையாளர் பதவி கிடைக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அவனின் நண்பனின் அறிவுரை. பொறுத்திருந்தான் அவனால் ஜீரணிக்க முடியவில்லை இந்த சமூகத்தை. யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட இரண்டாவது கப்பலில் கொழும்புக்கு பயணமானான் அவனின் நண்பன் ஜெயாவுடன்.

கொழும்பு அவனுக்கு புதிது. ஆனால் அவனின் நண்பனுக்கு இது பழசு. கொழும்பில் சீமா படிப்பம் இதுதான் அவர்களின் அன்றைய நோக்கம். உடனடியாக வீடு வாடகைக்கு இல்லை. ஒருவரை கெஞ்சி மன்றாடி வெள்ளவத்தையில் ஓர் லொட்ஜில் முதல் வாரம்.

அது அர்த்த ராத்திரி சீருடையினர் சூழ பொலிஸ் அந்த விடுதியை பரிசோதித்தது. குமாருக்கும் ஜெயாவுக்கும் உறவினர் யாரும் இல்லை. ஏன் கொழும்பில் தங்கியிருக்கிறார்கள்? இது முகாமையாளர்களிடம் ஓ.ஐ.சி.யின் கேள்வி ஏதோ சிங்களத்தில் கேட்டார்கள். பதில் சொன்னார்கள் இறுதியில் இருவரும் ஜீப்பில் ஏற்றப்பட்டனர். அண்மையில்தான் சென்றல் பாங்கில் குண்டு வெடித்தது. குண்டு வெடிப்பின் பிரதான சந்தேக நபர்களை பிடித்து விட்டதாக அவர்களின் நினைப்பு.

விடியற்காலை மூன்று மணிக்கு வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றம் தொடங்கி கொலை செய்த குற்றவாளிகளுடன் இரண்டு பட்டதாரிகளும் அடைக்கப் பட்டனர்.

ரொயிலற் கழித்து தண்ணீர் ஊற்றாமல் வருகின்ற நாற்றம். சிறுநீர் கழித்து தேங்கிக் கிடக்கும் நாற்றம். குறை பீடிகள், இலையான்கள், அரைகுறை சாப்பாட்டு பார்சல்கள் இவைகளை சுற்றி கம்பிக் கட்டு. கம்பிக் கூட்டுக்குள் இரண்டு பேர் படுக்க முடியாது. பதினேழு பேர் அடைக்கப்பட்டனர். இதில் தமிழர்கள் அதிலும் அரசியல் கைதிகள் தான் அதிகம். பாரிய குற்றச் செயல்கள் செய்த சகோதர இன முரடர்கள். இங்கு முரடர்களின் கைதான் ஓங்கியது. சாப்பாட்டு பார்சல் வந்த பேப்பரை நிலத்தில் போட்டுவிட்டு விடிய விடிய சிவாராத்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்றூம் கதவு உடைந்து இருந்தாலே காலைக்கடன் முடிக்க முடியாத குமாருக்கு திறந்த வெளி தண்ணீர் இன்றி கக்கூஸ். இதற்கு எல்லாம் பழக்கப்பட்ட முரட்டு கைதிகள் பேப்பரில் மலசலம் கழித்து அதை பாசல் செய்து கூட்டின் மூலையில் வைத்திருக்கிறார்கள். அதற்கு பக்கத்தில் இருந்து வயிறு நிறைய சாப்பாடும் உண்ணுகிறார்கள். குமாருக்கும் ஜெயாவுக்கும் சாப்பாடு இல்லை. பச்சைத்தண்ணீர் குடித்தாலும் அடிவயிற்றில் இருந்து வாந்தி வெளியில் வர எப்ப எப்ப எனக் காத்துக் கிடக்கின்றது.

பொழுது விடிந்தது. உறவினர் என வந்து பதிந்து பலரை விடுவித்துச் சென்றார்கள். ஜெயாவுக்கு அவனுடைய தூரத்து மாமியார் வந்து எடுத்துச் சென்றார். குமாருக்கு யாரும் இல்லை. பல நண்பர்கள் முயன்றும் பலன் கிடைக்கவில்லை. ஜெயா யாழ்ப்பாணத்தில் கொஞ்சம் ரவுண். குமார் கொஞ்சம் கிராமம். பொலிசுக்கு சற்று சந்தேகம், விசாரணை தொடர்ந்தது. நாலாம் மாடியில் இருந்து சீ.ஐ.டீ.யினர் வந்து ஒசாமா பின்லேடனை பிடித்த மாதிரி விசாரணை. இறுதியில் பதின்மூன்று நாட்கள் டீ.ஓ போட்டு பாணந்துறையில் உள்ள தற்காலிக சிறையில் ஓர் இரவு கழிந்தது.

மறுநாள் விடியற்காலை கை கால்களுக்கு விலங்கு பூட்டப்பட்டு இரும்பு கம்பிகளால் சுற்றி கட்டப்பட்ட சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றி எங்கேயோ அனுப்பினார்கள். குமாருக்கு ஒன்றும் தெரியாது. ஏதோ ஓரிரு நாட்களில் விடுவார்கள் என்ற நினைப்பில் தருகின்ற சாப்பாட்டையும் சாப்பிட மறுத்தான்.

கடன்காரன் வீட்டுக்கு வந்தாலே அவமானம் தாங்காமல் விசம் அருந்தி தற்கொலை செய்கின்ற கிராமத்தில பிறந்தவனுக்கு சிறைச்சாலை வாகனத்தில் அதுவும் மிகவும் அடிமட்ட கைதிகளுடன், வாகனம் நீண்ட பயணத்தின் பின்னர் பல நகரங்களை கடந்து சென்றது. சிக்னல்களுக்கு காத்திருக்கும்போது பொதுமக்களின் ஏளனப்பார்வை, சக குற்றவாளிகளின் இம்சைகள் அடி, உதைகள் என மாலை ஐந்து மணிக்கு ஓர் பிரமாண்டமான தடுப்பு சுவரை தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுக்கு போனபோதுதான் இது களுத்துறை சிறைச்சாலை என அவனுக்கு தெரிய வந்தது. ஒரே பதிவுகள் விசாரணைகள் இரவு ஏழு மணியளவில் ஓர் பெரிய கதவை திறந்து உள்ளுக்கு அழைத்துச் சென்றார்கள். வரிசை வரிசையாக நீண்ட பல மண்டபங்கள் போன்ற பெறல்களில் பல நூற்றுக் கணக்கான கைதிகளுக்குள் சீ வாட்டில் குமார் தள்ளப்பட்டான். டோச் வெளிச்சத்தில் கதவை திறந்து சிறைக் காவலர்கள் குமாரை உள்ளுக்கு தள்ளிவிட்டு அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

"கொட்டியா கொட்டியா............" என பலர் சத்தமிட்டதுதான் தெரியும். இடை இடை யாப்பனேய கொட்டியா என சத்தமிட்டவாறு கால்களினாலும் கைகளினாலும் பலர் அடி உதை. வாழ்க்கையில் அனுபவிக்காத சித்திரவதைகள் தொடர்ந்தன. ஒருவர் விட மற்றவர், அவர் விட மற்றவர் என எல்லாரும் அடி உதை இறுதியில் குமார் மயக்கமானான். இரவு 10.00 மணிக்கு நினைவுக்கு வந்தவன் இரத்த கறைகளுடன் சற்று கண்களை திறந்து பார்க்கிறான்.

இருட்டில் பல இயமன்கள் நீண்டு நிமிர்ந்து படுத்து இருக்கிறார்கள். மறுபுறத்தில் சிலர் படுப்பதற்கு இடம் இல்லாமல் கூனி குறுகி ஒடுங்கி படுத்து இருக்கிறார்கள். ஒரு புறத்தில் இவர்கள் எல்லாவற்றுக்கும் தலைவன் ஒருவனை பலர் சுற்றி இருந்து கால் கை உடம்பை மசாஜ் செய்கிறார்கள். கண்விழித்த குமார் எதுவும் தெரியாதவன் போல எல்லாவற்றையும் நித்திரை போல பாசாங்கு செய்து பார்க்கிறான்.

இரவு 12.00 மணி இருக்கும் கைதிகளுக்குள் இளமையான நல்ல சிவந்த இளம் கைதிகளை தலைவன் அழைக்கிறான். அவர்களை அவனுக்கு மசாஜ் செய்த ஒவ்வொருவரும் பிரித்து ஒவ்வொருவராக அனுப்புகிறான். சிவந்த இளமையான கைதிகள் தங்களுடைய உடைகளை களைந்து அவர்களுடன் படுத்து அனுங்குகின்ற சத்தம் கேட்கிறது. தலைவனும் இன்னொரு சிவந்த இளமையான ஒருவனுடன் கட்டிப்பிடித்து புரள்வதை அந்த இருட்டிலும் குமார் உணர்ந்து கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியற்காலை குமாரை நோக்கி இவர்கள் எல்லோரும் விசாரணை செய்கிறார்கள் சாப்பாட்டுக்கு வைத்திருந்த பண்டங்களை சாப்பிடக் கொடுக்கிறார்கள். சிலர் ஓர் சில நாட்களில் நண்பர்களானார்கள். பாணும் பருப்பும் சாப்பாடு. சிங்கள கைதிகள் ரொயிலற் இருக்க முன்பும் பின்பும் குமார் தான் ரொயிலற்றை சுத்தம் செய்வது. செங்கற்களால் மாபிளை எல்லாம் மினுக்கி கிளீனாக வைத்திருக்க வேண்டும். எங்கையாவது அழுக்கு இருந்தால் தலைவனால் காலால் உதையும் அடியும் விழும். தலைவன் தாடி வளர்த்து தலைமுடி பெண்கள் போல் நீண்டு வளர்த்து அவர்களுக்கு ஏவல் செய்ய பலர் என உள்ளுக்கு ஒரு அரசாங்கமே நடக்கிறது. படிப்பும் தானும் என நான்கு ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் படித்ததை விட இது நல்ல பாடம்.

நூறு ரூபா கட்ட முடியாமல் சாப்பாட்டுக்கு சிறையில் இருக்கும் கைதி. மாணவியை பலாத்காரம் செய்த ஆசிரியர், மகளை கற்பழித்த தகப்பன், தந்தையை கொன்ற மகன், விகாரையை துப்பரவு செய்ய வந்த பெண்ணை பாலியல் வல்லுறவு கொண்ட புத்த பிக்கு, கள்ளக் காதலனுடன் இருந்த மனைவியை கொலை செய்த கணவன், தேங்காய் கள்ளன், மாங்காய் கள்ளன் என பல்வேறு பெரிய சிறிய குற்றங்கள் புரிந்தவர்க்கு இடையே குமார் என்ன குற்றம் செய்தான்? அவனுக்கே தெரியாது. விதி அவனை பயங்கரவாத சட்டத்தின் கீழ் அங்கே அடைத்து வைத்திருக்கின்றது. தமிழன் அதுவும் யாழ்ப்பாணத்து தமிழன் அவ்வளவுதான்.

மத்தியானம் குமாரை பார்க்க அவனின் நண்பன் ஜெயா வந்தான். அப்பிள் ஒரேஞ்சு, மிக்சர், உடுப்பு,.. என சில பொருட்கள் மகிழ்ச்சியில் வாங்கிக் கொண்டு சென்ற குமாருக்கு மிஞ்சியது அவன் மாற்றுவதற்கு ஓர் உடை மட்டும்தான்.

இரவு வந்தது, குமாரை இன்று பலர் படுக்க அணைக்கிறார்கள். அன்பா? பாசமா? ஓர் இடத்தில் படுக்கிறான். அருகில் படுத்தவனின் கை குமாரின் மர்ம உறுப்பை நோக்கி.. திருப்புகிறான். மறுபுறம் அந்தப்பக்கத்தில் படுத்தவன் குமாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப் பிடித்து அவனின் மர்ம உறுப்பை நோக்கி................... இறுதியில் அன்று இரவு இருவரையும் சந்தோஷப்படுத்தினான். சிறிது நேரம் உறங்கினான் குமார்.

பதின்மூன்று நாட்கள் பதின்மூன்று ஆண்டுகளாக கழிந்து கல்கிசை நீதிமன்றத்துக்கு கைதிகளுடன் பிணைக்கப்பட்டு குமார் அழைத்து வரப்பட்டான். பொலிஸ் ஏதோ சிங்களத்தில் கூற நீதிபதி ஐயாயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்தார்.

என்ன வழி என்றாலும் இந்த நாட்டை விட்டு ஓட ஏஜென்சி இந்தோனேசியா, தாய்லாந்து காட்டி சில மாதம் சென்றன. மறு ஏஜென்சி துருக்கி, நைஜீரியா என நாடுகளை காட்டி பல மாதங்கள். இன்னொரு ஏஜென்சி ஹொங்கொங், சீனா, என பல காலம் இப்பிடி பல இலட்சங்களும் பல மாதங்களும் கரைந்தன.

இறுதியில் செலவழிப்பதற்கு பணம் இல்லாமல் ஆயிரம் டொலர் கொடுத்தால் இத்தாலியில் இறக்குவேன். மிகுதியை இறக்கியவுடன் தரக் கூற, குமார் தனது உறவினர்களிடம் கெஞ்சி மன்றாடி இறுதியாக பணம் வாங்கி சீமென் விசாவில் கெய்ரோ சென்று அங்கிருந்து உல்லாசக் கப்பல் ஒன்றில் ஏறி அது மத்தியதரைக் கடலில் ஓர் சிறிய மீன்பிடிக் கப்பலில் ஏற்கனவே இருந்த முன்னூறு பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஸ் நாட்டவர்களுடன் நூற்றைம்பது இலங்கையர்களையும் சேர்த்து கப்பலுக்கு அனுப்பப்பட்டனர்.

கப்பலில் ஏறும் வரை தனது பயணம் கடல் வழி என அவனுக்கு தெரியாது.

அது டிசம்பர் 1996 கிறிஸ்மஸ்க்கு இருபது நாட்கள் இருந்தன. சிறிய கப்பல் டிசம்பர் 25ஐ பார்த்து நின்றது.

ஏறத்தாழ நானூற்று ஐம்பது தென்னாசியர்கள் இத்தாலிக்கு சொந்தமான சிலித் தீவில் தரை இறங்குவதற்காக மத்திய தரைக் கடலில் அரைகுறை உயிரில் தவம் இருக்கிறார்கள். ஐந்து லட்சம் கொடுத்தவன், மூன்று லட்சம் கொடுத்தவன் கம்பஸ்ல படிச்சவன், கொழும்பில படித்தவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச வேலை செய்தவர்கள், சிறு முதலாளி முதல் பெரும் முதலாளிகளாக இருந்தவர்கள், ஏற்கனவே மத்திய கிழக்கு நாட்டில் மூன்று நான்கு வருடம் கருகி உழைத்து சேர்த்த பணத்தை கொண்டு சொந்த மண்ணில் வாழ முடியாத அரசியல் காரணத்தால் ஐரோப்பாவை நாடிச் செல்பவர்கள், விமான நிலையங்கள் ஊடாக அனுப்ப தகுதி இல்லாதவர்கள், வாய் பேசத் தெரியாத ஊமைகள், அங்கவீனர்கள், குருடர்கள், குழந்தைப் பருவத்தினர், வயது முதிர்ந்தவர்கள் என பல்வேறுபட்ட இன, மத, மொழி பண்புகளைக் கொண்ட மக்களை சுமந்து நின்றது அந்த சிறிய கப்பல்.

பத்து பதினைந்து மாலுமிகள் சில நாட்கள் கடலில் தரித்து நின்று மீன் பிடிப்பதற்கு கட்டப்பட்டது தான் அந்தக் கப்பல். இன்று நானூற்று ஐம்பது பேரை தாங்கி நிற்கின்றது. அது அடையும் வேதனையை சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

உறங்குவது படிக்கட்டுகள், எஞ்சின் றூம், களஞ்சிய பகுதி என எங்கு பார்த்தாலும் வாடும் முகங்கள். ரொயிலற்றுக்கு கியூ. கால் பாதி ரொட்டி மட்டுந்தான் ஒரு நாள் சாப்பாடு. இது இரண்டு மாதங்களுக்கு முன் சுட்டது. பூஞ்சணம் பிடித்து துர்நாற்றம். கடல் நீரை சுத்திகரித்து இரசாயன மணத்துடன் குடி தண்ணீர். ஒரு நாளா? இரண்டு நாளா? ஏறத்தாழ நாற்பது நாட்கள் இந்த சிறிய கப்பலில் வாழ்க்கை. காய்ச்சல், அம்மாள் வருத்தம், முட்டு, ஓவ்வாமை, சொறி சிரங்கு, என எல்லாவிதமான நோய்கள் பீடித்த மனித உடல்கள் உயிரைத் தாங்கி அசைவதற்கு வலுவின்றி அல்ல கதைப்பதற்கு கூட வலுவின்றி இருக்க சிலர் தங்கள் உயிரையும் விட்டனர். இது பலருக்கு தெரியாது. ஓர் மூலையில் ஒரு தட்டில் நடக்கும் சம்பவங்கள் மறு மூலையில் மறு தட்டில் இருப்பவர்களுக்கு தெரியாது. அது ஓர் நரக வாழ்க்கை.

அது டிசம்பர் பதினேழு குமார் இன்னொருவனுடன் சேர்ந்து கடலில் குதித்தான். இதைப் பார்த்தவர்கள் ஒருவாறு அவர்களை காப்பாற்றி கப்டனிடம் ஒப்படைத்தார்கள். அதன் முடிவு அன்று இரவு ஓர் சிறிய றோலரில் இத்தாலியில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சில நாட்களில் தயாரிக்கப்பட்ட ரொட்டியும், பருப்பும் அரிசியும் வந்தது. இவர்களின் இப் போராட்டம் சிலரை சில காலம் உயிர் பிழைக்க செய்தது.

அது டிசம்பர் இருபத்தைந்து இயமன் பலரின் உயிரைப் பறிக்க தயாராகின்றான் என்பது குமாருக்கு தெரியாது. பல நாட்கள் ரொயிலற் பக்கம் செல்லாத குமாருக்கு அன்று வயிற்றைக் கலக்கியது. அது அவனின் முன்னோர்கள் செய்த தர்மம். புகுந்தவன் சில நிமிடங்கள் மயக்கமானான். கண் விழித்து வெளியில் வந்து பார்த்த போது எல்லோரும் தங்கள் பயணப் பைகளுடன் முண்டியடித்துக் கொண்டு ஓடி ஒரு சிறிய றோலரில் இறங்குவதைப் பார்த்தான். அவனால் இறங்க முடியவில்லை. ஒருமாதிரி முட்டி மோதி இறங்கி றோலரின் மேற்பகுதியில் ஓர் இடத்தை பிடித்துக் கொண்டான். கடைசித் தட்டிலாவது இடம் கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி சொன்னான்.

நூறு பேரை தாங்கக்கூடிய றோலரில் முன்னூறு பேர் இறங்கி விட்டார்கள். ஆக அடித்தட்டில் நோயில் பீடிக்கப்பட்டு அரைகுறை உயிருடன் இருந்தவர்கள், பின்னர் சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என மூன்று தட்டும் நிரம்பிய பின்னரும் மேல்பகுதியில் அணியத்தில் ஒரு இருபத்தைந்து பேர் இருந்தும் உள்ளுக்கு இறங்கும் ஏணியிலும் பத்து பதினைந்து பேர். இதையெல்லாம் கட்டுப்படுத்த ஓட்டிக்கு முடியவில்லை.

வந்தவர்கள் போதைப் பொருள் கடத்தலின் மாபியா கும்பல். அதைவிட நன்றாக மது போதையில் இருந்தார்கள்.

கப்பலில் அணைக்கும் போதே றயரில் அகப்படாமல் றோலர் கப்பலுடன் மோதி அடித்தட்டு உடைந்து விட்டது. தண்ணீர் உள்ளுக்கு வந்தது. அவுட் மோட்டார் தண்ணீரை வெளியேற்றிக் கொண்டு இருந்தது. றோலர் இத்தாலி நோக்கி புறப்பட்டது.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மலைகளின் உச்சிகளில் உள்ள வீடுகளின் வெளிச்சங்கள் தெரிந்தன. குமாருக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை சில மணித்தியாலங்களில் இத்தாலியின் சிலி தீவை அடைந்து விடுவோம். வசந்தத்தை அனுபவிப்போம் என நம்பினான்.

ரோலரின் அடித்தட்டில் சிறிது சிறிதாக கேட்ட அழுகுரல்கள் பெரிதாக ஒலிக்க ஆரம்பமானது. சிறிது நேரத்தில் அது அமைதியானது. கீழ்தட்டை தண்ணீர் ஆக்கிரமித்து விட்டது. அரைகுறை உயிர்கள் முடியத் தொடங்கியது. வலு இல்லாதோர் தண்ணீருக்குள் கீழ் தட்டில் மூழ்கிறார்கள். நிலமையை விளங்கிய ஓட்டிகள் இறக்கிய கப்பலுக்கு தகவல் கொடுத்தார்கள். ஏறத்தாழ ரோலரும் கப்பலும் வேறுபட்ட திசையில் பயணித்து அரை மணி கடந்து விட்டது. இனி கப்பல் ரோலர் இடத்துக்கு திரும்பி வர ஒரு மணித்தியாலம் தேவைப்பட்டது. முதலாவது தட்டில் இருந்தவர்கள் இரண்டாவது தட்டுக்கு வந்தார்கள். முதல் தட்டில் இருந்தவர்கள் பலர் தங்கள் உயிர்களை நீரில் மூழ்கி மாய்த்துக் கொண்டனர். அவலக் குரல்கள் வானைப் பிழந்தது.

தற்போது அணியத்தில் நின்றவர்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டியது. இதுதான் அந்த ரோலரின் ஆக உச்சியான இடம். அணியத்தில் நிற்பதற்கு இடம் இல்லாமல் ஒருவரை ஒருவர் கைகோர்த்து மிக சிறிய பகுதியில் ஓலமிட்டபடி தங்களை நோக்கி திரும்பி வரும் தங்களை இறக்கிய கப்பலை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

தற்போது கப்பல் ரோலரை நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ரோலரின் இரண்டாம் மூன்றாம் தட்டுக்களை நீர் ஆக்கிரமித்து விட்டது. கப்பல் கப்டனுக்கு மூழ்கிக் கொண்டிருக்கின்ற ரோலரை மீட்க முடியவில்லை. கப்பலின் அணியப் பகுதியை ரோலரின் அணியப் பகுதியுடன் இணைக்க முயற்சிக்கும் போது பெரிய சத்தம் இரு அணியப் பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று மோதி தாண்டு கொண்டிருக்கும் ரோலர் முழுமையாக கடலில் மூழ்கிறது.

ரோலரின் அணியத்தின் கப்பலின் அணியப்பகுதி முட்டப்பட்ட பகுதியில் இருந்த நான்கு ஐந்து பேர் நீரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாமல் கப்பலில் இறங்காமல் இருந்த மற்றவர்கள் இவர்களை பிடித்து மீட்டனர். அதில் குமாரும் ஒருவன்.

கப்பல் தற்போது நிற்பது இத்தாலியின் நேவிப் பிரதேசம். நீண்ட நேரம் நின்றிருந்தால் பலரை காப்பாற்றலாம். உடல்கள் அலையில் மிதக்க அவர்களை அப்படியே விட்டு விட்டு கப்பல் நடுக் கடலை நோக்கி செல்கிறது. எஞ்சியவர்கள் கப்பலை முற்றுகை அரைகுறை ஆங்கிலத்தில் சைகையில் மீட்கும்படி மன்றாடுகிறார்கள். தனது அறைக்குள் சென்ற கப்டன் கைதுப்பாக்கியுடன் வந்து வானத்தை நோக்கி நான்கு ஐந்து தடைவைகள் சுடுகிறான்.

“எனக்கு தொந்தரவு தந்தால் உங்களையும் இந்த இரவில் இக்கடலில் சுட்டு வீசி விட்டு நாங்கள் சென்று விடுவோம். என்னுடைய கடமை எஞ்சிய உங்களையும் எப்பிடி காப்பாற்றுவது என்பதுதான்” என்றான்

கப்பல் பனிப் புயலில் தள்ளாடி தள்ளாடி மனித நாகரீக தோற்றத்தின் ஒன்றான கிறிஸ் நாட்டை நோக்கி மிஞ்சிய துன்பங்களை சுமந்து செல்கின்றது.

நடு இரவு. கப்பலில் இருந்து இறக்கப்பட்டவர்கள் மூடிய வாகனத்தில் அடைக்கப்பட்டு வேறு ஒரு நாட்டுக்கு மாற்றப்படுகின்றார்கள்.

சிலர் மூச்சுத் திணறி இறக்கிறார்கள். எஞ்சியவர்கள் கூச்சலிட வாகனம் இடைமறிக்கப்படுகின்றது. இறந்த உடல்களை காட்டுக்குள் வீசுகிறார்கள். பயணம் தொடர்கின்றது. பொழுது விடிவதற்கு முன்னர் எல்லையைக் கடக்க வேண்டும். முடியவில்லை. மீண்டும் மூச்சு திணறி சிலர் மரணம். செய்வறியாத றைவர் ஒரு ஒறேன்ஜ் தோட்டத்துக்குள் எங்களுடன் நுழைகின்றான். அவசரமாக எங்களை இறக்கிவிட்டு ஒரு சிறிய கண்ணாடியால் மூடப்பட்ட அறைக்குள் எஞ்சியவர்களை தள்ளிவிட்டு சென்றுவிடுகின்றனர். ஒருவருக்கு மேல் இன்னொருவர். அசைய முடியவில்லை. கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு வெளியில் வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது விடிகின்றது. மரங்கள் நிறைய ஒரெஞ்ஜ்கள். சுவைக்கிறார்கள். வீதியில் செல்கின்றவர்களுக்கு வேடிக்கை. கார்களை நிறுத்திவிட்டு எங்களைப் பார்க்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு காட்சிப் பொம்மைகள்.

சில மணித்தியாலங்களில் கிறீஸ் நாட்டுப் பொலிஸ் எங்களை கைது செய்கிறது. சிலர் இதில் தப்பியும் விட்டார்கள். அவர்களுக்கு ஐரோப்பா வசந்தத்தை கொடுத்து விட்டது. ஏதென்சில் சிறையில் சில மாதங்கள். பின்னர் கொழும்புக்கு திருப்பி அனுப்பினார்கள். இலங்கைச் சட்டம் எங்களை விடவில்லை. மிரிகான தடுப்பு சிறையில் சில மாதங்கள். சட்டச் சிக்கல்கள் முடிந்து விட்டன.

மீண்டும் மீண்டும் கைதுகள், சிறைகள், விடுதலைகள் என சில மாதங்கள் கரைந்தன.

குமார் வசந்தத்தை நோக்கி மீண்டும் மீண்டும் பயணிக்க முயற்சிக்கின்றான்.

அவனை வடக்கின் வசந்தம் பிணைக்கின்றது.

--------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாரும் அண்ணையும்

கார்பெற் றோட் கலகலவென விரிந்து சென்றது. நிஸான் மார்ச் மாதம் இலங்கைக்கு வந்து, வெளிநாட்டு உதவியிலான வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு சவாரி செய்கின்றது.

காலை ஒன்பது மணி. அது முகமாலை.

தலைகள் அறுக்கப்பட்ட பனைகளும், தென்னைகளும் நிமிர்ந்து நின்று யுத்தத்தின் கொடுமையை பறைசாற்றுகின்றன. பிரித்தானியர் காலத்தில் நாட்டப்பட்ட கிழட்டு தென்னைகள் கூட தலை இன்றி முண்டமாக. எல்லாவற்றுக்கும் மத்தியில் புதிய கார்பெற் றோட். கிழவிக்கு பட்டுச்சாறி. வடக்கிற்கு வசந்தம் வீசுவதற்கு தெற்கில் இருந்து மதியுரைப்பதற்காக அழைக்கப்பட்ட பலரில் நான் ஒருவன் மட்டுந்தான் வடக்கில் இருந்து.

"ஸார் வெளிக்கிட்டியளோ" மீற்றிங் ஏற்பாட்டாளர்களின் அழைப்பு.

"ஓம் பளையில வாரன்" அவர்களுக்கு நான் ஸேர்.

எங்களுடைய தொழிற்சாலையில் இருந்து அழைப்பு.

"அண்ணை கதைக்கலாமோ?" இவர்களுக்கு நான் அண்ணை.

கார்பெற் விபத்தை தடுக்க வழியில் போக்குவரத்து பொலிஸ். காரின் வேகம் குறைகிறது.

"என்ன பிரச்சினை?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைரோலிக் பம் வேலை செய்யுது இல்லை. மெக்கானிக்குக்கு கோல் எடுத்தால் அவர் போனை எடுக்கிறார் இல்லை. நீங்கள் ஒருக்கால் கதையுங்கோ"

அழைக்கிறேன்.

"சொல்லுங்கோ ஸார்"

"போன் எடுக்கிறியில்லையாம்"

"இல்லை ஸார் சரியான பிஸி. உங்களுடைய நம்பர் என்றபடியால்தான் எடுத்தனான். சொல்லுங்கோ"

மெக்கானிக் தொழிற்சாலைக்கு உதவியாளர்களை அனுப்புவதாகக் கூறுகிறான்.

கார் ஆனையிறவைக் கடக்கிறது. புத்தரின் போதனைகளின் வழி தோன்றிய புனித வீரர்கள் இலங்கையை கையில் ஏந்தியவாறு இலங்கையை மீட்டு எடுக்கிறார்களாம்.

இது போர்ச்சின்னக் குறியீடு. இலங்கையில் சுதந்திரப் போராட்டக்காரர்கள் மீட்க முடியாதவையை இவர்கள் மீட்டார்கள் போலும். மகாவம்ச மனப்பாங்கு இப்பாரிய அழிவுக்கு பின்னரும் மாறவில்லை. இது என்னுடைய ஏக்கம்.

"ஸார் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு தென்கிழக்கு ஆசியாபற்றி ஓர் கட்டுரை கேட்டனான். முடிச்சிட்டீங்களோ" இது என்னுடைய பீ.ஏச்.டீ. மாணவனின் அழைப்பு.

லப்ரொப் விரிகிறது. பருநிலைப்பொருளியல் முதலீடு வெளிநாட்டு நேரடி முதலீடு கோட்பாடு கட்டுரை என முடிக்கப்பட்டிருந்த கட்டுரை சரிபார்க்கப்பட்டு தெரிவு செய்யப்படுகிறது. ஈ.மெயில் மூலம் பறக்கிறது.

"தங் கியூ சேர்" மாணவனின் குறுஞ் செய்தி.

போனில் செய்தி அலேர்ட் ஒன் லைன் டிஸ்கஷன் ஸ்ராட்ரட் சிங்கப்பூரில் நடைபெறுகின்ற மாநாட்டில் நானும் இணைந்து கொள்கின்றேன். கார் இவைகளையெல்லாம் சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றது.

"அண்ணை கொன்றோல் வால்பு மாற்ற வேண்டுமாம்" தொழிற்சாலையில் இருந்து..

"வால்வ் நம்பரை சொல்லுங்கோ"

"CAT, B120, AE30421"

யாழ்ப்பாண மோட்டோஸ் ரெலிபோன் நம்பர்களை தேடி, அழைத்தேன்.

"சொறி சேர் இல்லை"

"சொறி சேர். இது இங்கு எடுக்க முடியாது"

"நீங்கள் கொழும்பில்தான் ட்ரை பண்ண வேண்டும்"

இவை யாழ்ப்பாண விற்பனையாளர்களின் பதில்கள். நான் கொழும்பு மோட்டோர்ஸ்களுடன் தொடர்பு கொள்கிறேன். ஒருவர் "சாம்பில் வேண்டும் அல்லது படம் வேண்டும்" என்கிறார்.

"படம் பெறக்கூடிய உங்களுடைய மொபைலின் நம்பர் சொல்லுங்கோ"

தொழிற்சாலைக்கு அழைப்பு "வால்பின் படத்தை நான்கு கோணத்திலும் எடுத்து இந்த நம்பருக்கு அனுப்புங்கோ".

ஒன் லைன் டிஸ்கஸன் தொடர்கிறது. இது அகடமிக் மற்றர்.

"நீங்கள் கூறும் இந்தக் கருத்துக்கு ஆதாரம் உண்டா? இதைப்பற்றி யாரும் கூறி இருக்கிறார்களா?" மறுபுறத்தில்.

எனது லப்ரொப்பிலும் இன்ரநெற்றிலும் தேடுகிறேன். முகவரியை கொப்பி செய்து பேஸ்ட் செய்து அனுப்பினேன். உரையாடல் தொடர்கின்றது.

கொழும்பில இருந்து அழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொரி ஸார். தேடிப் பார்த்தம், இந்த மொடல் எங்களிடம் இல்லை. நீங்கள் கொம்பனியில் ஒரு முறை றை பண்ணி பாருங்கோ"

"நம்பரை சொல்லுங்கோ".

"ஸார் இது பழைய மொடல். நாங்கள் புதிய மொடல் மெசின்களுக்குரிய பார்ட்ஸ் மட்டும்தான் டீல் செய்கிறோம். ஆசியா பிராந்தியத்துக்குரிய அலுவலகம் சிங்கப்பூரில் இருக்கு. அங்கு கேட்டுப் பாருங்கள்" கொம்பனியிலிருந்து ஆங்கிலத்தில் பதில் வந்தது.

கார் முறிகண்டியை அண்மிக்கின்றது.

"பிள்ளையாருக்கு தேங்காய் அடித்தால் வால்பு கிடைக்குமோ?" நம்பிக்கைதான் வாழ்க்கை.

இது எனது உள் மனத்தில் இருந்து வருகின்ற எண்ணம். பிள்ளையாருடனும் பிசினஸ். என்னதான் தொழில்நுட்பம் முன்னேறினாலும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்ற ஆற்றலை இறைவன் கொண்டிருக்கின்றான் என்பது எனது நம்பிக்கை. கார் முறிகண்டியில் நிற்கின்றது. ஒன் லைன் டிஸ்கஸினில் பத்து நிமிடம் எக்ஸ்கியூஸ் கேட்கிறேன். இது அவ்வளவு சீரியஸ்சான கலந்துரையாடல் அல்ல. இதில் உலகில் நூற்றுக்கு மேற்பட்டவரில் நானும் ஒருவன். பிள்ளையாருக்கு தேங்காய் அடித்தேன்.

"ஐயா பாலப்பழம்"

வசந்தத்தின் வாசனையை கூட முகராத ஒரு சிறுவன். வேண்டுகின்றேன். எனக்காக அல்ல. அந்த ஏழைக்காக.

கடையில் உதயன் பேப்பர் தொங்குகின்றது. தலைப்பு "13 இல் காணி பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படுமாம்". இதுவும் வடக்கின் வசந்தம் போலும். பயணம் தொடர்கின்றது.

சிங்கப்பூரில் ஹற் கம்பனி முகவரியை தேடி எடுத்து, ஒன் லைன் ஸேல் பகுதிக்கு சென்று, படம் பார்ட்ஸ் நம்பர் அனுப்பினேன். அவர்களும் கதைத்தார்கள். இறுதியாக விலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரியர் சார்ஜ் வரி எல்லாம் மொத்தமாக அறுநூற்று எழுபத்து இரண்டு சிங்கப்பூர் டொலர்.

"ஒரு மணித்தியாலத்துக்குள் பணம் அனுப்பினால் ஐந்து மணித்தியாலத்துக்கு பின்னர் கொழும்பில கலெக்ற் பண்ணலாம்". இறுதியாக சிங்கப்பூரில் இருந்து வந்த செய்தி.

இன்ரநெற்றில் பேபோல் பகுதிக்கு சென்று கிறெடிற் காட்டைக் கொடுத்து பணம் செலுத்தினேன். நேரம் நண்பகல் பதினொரு மணி. கார் மாங்குளத்தைக் கடக்கின்றது.

எனது கொழும்பு மாமனாரை அழைக்கிறேன். "அங்கிள் யாழ்ப்பாணத்துக்கு கடைசிப் பிளைற் எத்தனை மணிக்கு?"

"ஐந்து மணிக்காக இருக்க வேணும், சில நேரம் இருக்காது. எதற்கும் செக் பண்ணி சொல்லுறன்".

கொழும்புக்கு வருகின்ற பார்சலை இன்றைக்கே யாழ்ப்பாணத்துக்கு எடுத்தால் நல்லது. ஒருநாள் மிசின் இயங்காவிட்டால் அனைத்துப் பகுதிகளும் செயலிழக்கும். முழுத் தொழிலாளர்களுக்கும் வேலை இல்லை. மொத்த இழப்பு ரூபா ஐம்பதாயிரத்துக்கு மேல்.

கொழும்பில் இருந்து அங்கிள் "பிளைற் இருக்காம்".

"பிளைற்றில கொடுத்து விடுகிறேன். நீங்கள் இரவு ஏழு மணிக்குள் யாழ்ப்பாணத்தில கலெக்ற் பண்ணலாம்" தொழிற்சாலைக்கு நான்.

பயணம் தொடர்கிறது. மீண்டும் ஒன் லைன் டிஸ்கஸனில் இணைகிறேன். கொஞ்சம் தாமதம்.

மனைவியிடம் இருந்து அழைப்பு "குளிசை போட்டனீங் களோ?"

அப்பதான் ஞாபகம் வருகிறது. "ஓம் போட்டிட்டன்"

உண்மையை சொன்னால் வில்லங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"75000/= கொள்வனவுக்கு 5000/= டிஸ்கவுன்ற் கேட்கினம்" மீண்டும் தொழிற்சாலையில் இருந்து.

நாளைக்கு கிறேடிற் கார்ட் பலன்ஸ் செலுத்தினால் ஆறாயிரம் இலாபம். ஒப்பிடுகிறேன்.

"ஓகே கொடுங்கள்"

நாளைக்கும் தொழிற்சாலை இயங்காவிட்டால்? மெக்கானிக்கை அழைக்கிறேன்.

"ஏழு மணிக்கு வால்பு தருவன். இரவோடு இரவாக செய்து விடிய வேலை செய்யத் தருவியளோ?"

"இல்லை ஸார். பொடியள் பகல் பூராக வேலை செய்து விட்டு இரவு வேலை செய்ய மாட்டினமாம்"

"இரண்டு மடங்கு கூலி தருகிறேன்" என்னுடைய வேண்டுகோள்.

"சரி ஸார்"

ஆக பதினைந்தாயிரம்தான் அதிகமான கூலி.

கார் ஓமந்தையை அடைகிறது. கார் நம்பர், ஐ.சி. நம்பர் எழுதுகிறார்கள். இப்ப பயங்கரவாதிகளை பேனாக்களைக் கொண்டு தேடுகிறார்கள் போலும்.

வவுனியாவை அடைந்தேன். நல்ல ஹோட்டல். நல்ல சாப்பாடு, தண்ணீர். வடக்கின் வசந்தம் அல்லவா? அனுபவிப்போம்.

காலை 8.00 மணி

"அண்ணை! எல்லாம் சரியாக வேலை செய்யுது. நாங்கள் வேலை தொடங்கிறம்" தொழிற்சாலையில் இருந்து.

கதவு தட்டப்படுகிறது. எங்களை மீற்றிங்குக்கு அழைத்துப் போக வந்திருக்கிறார்கள் போலும். இவர்களுக்கு எது உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியென இன்றைக்கு நல்ல விளக்கம் ஒன்று கொடுக்க வேண்டும் என்ற ஆவலுடன் குளிரூட்டியின் குளிர் உள்ளுக்குள் புகாமல் இருக்க கழுத்தில் கழுத்துப் பட்டியைக் கட்டியவாறு ஏசி ரூமின் கதவைத் திறக்கிறேன்.

"சொறி சேர். இண்டைக்கு மீற்றிங் கான்சலாம். செயலாளருக்கு அமைச்சரோட முக்கியமான ஒரு மீற்றிங்காம். வேறு ஒரு நாள் அறிவிப்பம்" எனக் கூறியவாறு ஒரு என்வெலப் நீட்டப்பட்டது.

பிரித்துப் பார்த்தேன். அதற்குள் பல மயில்கள் தெரிந்தன.

எங்கள் வாழ்வு வசந்தமாகின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெக்னோலொஜி

"தம்பி...............தம்பி.......தம்பி"

அதிகாலை! அமைதிச் சூழலை ஆக்கிரமித்த அந்தக் குரல் கொம்பியுட்டரில் வேலை செய்து கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பியது. கேற்றை நோக்கினேன். புரோக்கர் கந்தையா காத்திருக்கிறார்.

"பொறுங்கோ. திறப்பு எடுத்து வாரன்"

"என்ன அண்ணை இந்த நேரம்" கேற்றைத் திறந்து கொண்டு கேட்கிறேன்.

"உங்களை பகலில் சந்திக்க முடியவில்லை. அன்று இரவு வந்து 9.00 மணிவரை வெயிற் பண்ணின்னான். பிள்ளை சொல்லிச்சுது. உவர் இப்பிடித்தான் அறிவித்தல் இல்லாமல் சந்திப்பது கஷ்டமாம்"

"ஓம் அண்ணை. அன்றைக்கு நிறைய கதைத்ததால இரவு 7.00 மணிக்கு பின்பு என்ர போனில் சார்ஜ் இல்லை. அதுதான் போன் ஓவ்வாக இருந்தது. நீங்கள் வந்ததாக மனிசி சொன்னது"

"இண்டைக்கும் நல்ல நாள். அதுதான் நல்ல விசயத்தை பிந்த விடக்கூடாதெண்டு விடியக் காலமையே வந்திட்டன்"

"கொஞ்சம் என்ர றூமில வந்து இருப்பியளோ. கதைத்து கதைத்து வேலை செய்யலாம்"

எனது அறைக்குள் அழைத்தேன். நான் ஓர் முக்கியமான ஆவணத்தை தயாரித்துக் கொண்டிருந்ததால் அவருடன் வெளியே இருந்து கதைத்தால் என் வேலை முடியாதே என்ற கவலை எனக்கு.

உள்ளுக்குள் வந்தார்.

"நான் உங்கட சித்தப்பா வீட்டுக்கு போனனான். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி முடிவை உங்களுடன் கதைத்து மாப்பிள்ளையின் விபரத்தை எடுத்து தம்பி சரி என்று சொன்னால்தான் செய்வம்.." எனத் தொடர்ந்தார்.

சித்தப்பா எனக்கு சொன்னது ஞாபகம் வந்தது. அவருடைய மூத்த மகளுக்கு கனடாவில் ஓர் மாப்பிள்ளை பொருத்தமெண்டும் பெடியனைப்பற்றி நல்லாய் விசாரிக்க வேணும்.விபரம் பிறகு தாறன் என்றும் சொல்லியிருந்தார். இப்ப புரோக்கரே நேரில் அவசிய அவசர வருமான நோக்கில்.

"மாப்பிள்ளை கனடாவில் எந்த ஊரில் என்ன செய்கிறார்" என்றவாறு கனடாவில் எனது ஒன்லைன் நண்பர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகிறேன்.

"மாப்பிள்ளை பெயர் சிவா, சொந்த இடம் வேலணை. ரொரண்டோவில் ஓர் பெரிய கடைக்கு முதலாளி. இரண்டு வீடு இருக்கு. நல்ல இடம். பத்துப் பதினைந்து பேர் அவருடைய கடையில வேலை செய்கிறார்கள்..............." எனத் தொடர்ந்தார்.

கனடாவில் மொன்றியலில் இருக்கும் நண்பன் ஒன்லைன்னில் "ஹலோ சேகர் எப்பிடி இருக்கிறாய்? எங்களுடன் படித்த சுபேசின் தாயார் இலண்டனில இறந்திட்டா" என்ற செய்தியுடன்.

நண்பனிடம் விலாசத்தைப் பெற்று, இலண்டனில் உள்ள மலர்ச்சாலைகளின் முகவரிக்குச் சென்று கிறெடிற் காட் மூலம் பணம் செலுத்தி மலர்வளையம் ஒன்றை ஓடர் செய்து அனுப்பி வைக்கிறேன். திருமணம் பற்றி கதைக்கேக்க மரணச் செய்தி.. அவனிடம் இருந்து ரொரண்டோவில் சில நண்பர்களின் ரெலிபோன் நம்பர்களைப் பெற்றேன்.

"உங்க கனடாவில் எங்கட மாப்பிள்ளைகள் எப்பிடி?"

"மச்சான் மிக மோசம். ஓர் சிலர் முழுக் குடி. பலர் பல பிரச்சினையில. நன்றாக விசாரிக்க வேண்டும்"

புறோக்கர் இடையில் "தம்பி! இப்ப கல்யாணத்துக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு வெளிநாட்டில இருந்து ஆம்பிள பிள்ளையளைவிட பொம்பிள பிள்ளையள்தான நல்லா உதவுதுகள். அதுகள் போய் சகோதரங்களையும் கூப்பிடுதுகள். காசு, நகை, சாமான் எண்டு எவ்வளவத்தை அனுப்புதுகள். உன்ர சித்தப்பாவுக்கு கஷ்டந்தானே. முதல் பிள்ளை போனால் குடும்பமே போன மாதிரி. இது நல்ல பொருத்தம்" என்றார்.

"குறிப்பு வைத்திருக்கிறியளோ?"

"ஓம்" என்றவாறு மாப்பிள்ளையின் குறிப்பினையும் எனது தங்கையின் குறிப்பினையும் தந்தார். எனக்கு தெரிந்த சோதிட அறிவில் குறிப்பு பொருத்தமாக இருந்தது.

"பிறந்த நேரம் இருக்கா"

"அது இல்லை தம்பி"

ரொரண்டோவுக்கு எனது மொபைலில் இருந்து போன் செய்தேன். மறு முனையில் எனது நண்பன்.

"மச்சான், எனக்கு ஒருவரின் விபரம் தேவை. உடனடியாக சொல்லுவீயா?, ஓம். சொல்லு. நான் வேலையில் இருக்கிறேன். முடியும் என்றால் சொல்லுறன்"

"பெயர் சிவா, சொந்த இடம் வேலணை, கடை முதலாளி.........." தொடர்ந்தேன்.

"10 நிமிடத்தில் திருப்பி எடுக்கிறேன்" என்றான்.

மொபைலில் அலேர்ட் சத்தம். இலண்டனில் இருந்து மலர்வளையத்துக்கு நன்றி தெரிவித்து சுபேஸ்சின் குறும் செய்தி அது.

புரோக்கர் தொடர்ந்தார். "மீசாலையிலும் ஒன்று பார்த்து அதுவும் நல்ல பொருத்தம். நான் உங்களுடன் பழகியபடியால் உங்களுடைய முடிவை கேட்டுவிட்டு அங்கு கதைப்பம் என்று இருக்கிறன்"

"வீட்டு சாமான்கள் எல்லாம் வாங்கவேணும்" என்றவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து ரீயை நீட்டினாள் மனைவி.

புரோக்கர் ரீ எடுத்து குடித்துக் கொண்டிருக்கும் போதே வீட்டுப் பொருட்கள் பட்டியலை மனைவியிடம் கேட்டு டோர் டெலிவரி செய்யும் கடைக்கு ஓடர் செய்கிறேன்.

மொபைல் அழைத்தது.

"சிவா என்பது வேலணை முதலாளி குமாரின் கடையில வேலை செய்யும் ஒரு கடைசி ஆள். ஏற்கனவே கலியாணம் செய்து தண்டல் சோறாக வீட்டில் இருந்தபடியால் மனுசிக்காரி டிவோஸ் எடுத்து விரட்டிப் போட்டாள். அவள் இவனுக்கு பிறந்த இரண்டு பிள்ளையளுடன் கஷ்டப்படுறாள். இவனுக்கு வீடே இல்லை. ஓர் நாளைக்கு ஒவ்வொரு வீடாக கெஞ்சி மன்றாடி பிரெண்ட்ஸ் வீடுகளில்தான் இருக்கிறான்", என்ற தகவலுடன் முதல் மனைவியின் நம்பரும் கிடைத்தது.

மனைவியிடம் விபரம் உறுதிப்படுத்தப்படுகிறது. பிறந்த நேரம் பற்றிக் கேட்டபோது

"அவருக்கு ஒழுங்கான ஜாதகமே இல்லை. புரோக்கருக்கு பணம் கொடுத்துத்தான் தனது குறிப்பும் பொருந்தியதாக ஏமாற்றியது" என்ற பதிலும் கிடைத்தது.

புரோக்கர் "தம்பி! இப்ப வெளிநாட்டில பெடியள் மட்டுமில்ல பொம்பிளயளும் கொஞ்சம் அப்படி இப்படித்தான். நாங்கள் இங்க இருந்து படுற கஸ்ரத்தையும் பாக்கவேணும். நான் வாறன். யோசித்து முடிவு சொல்லும்" என்றார்

"நீங்கள் வரத் தேவையில்லை. அவன் ஏற்கனவே ஏமாற்றி இருக்கிறான். காசுக்காக இப்பிடி பேயாய் அலையாதேயுங்கோ..."

மேற்கொண்டு கதைப்பதற்கு முன்னர் அவர் நடையைக் கட்டிவிட்டார்.

----------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெத் சேர்ரிபிக்கற்

ஆடிக் காற்றில் ஆடிப்போன தற்காலிக குடிசை.

சன வெப்பத்தில் வற்றிப் போன கிணறுகள்.

காற்றினால் அள்ளி வீசப்படுகின்ற செந்நிறப் புழுதிகள்.

வெப்பத்தின் அனலில் தகர சீற்றால் மேயப்பட்ட குடிசைக்குள் ஓர் மழலையின் ஓசை.

அது விசுவமடு..........

மீளக் குடியமர்ந்த மக்களின் குடிசைகளில் ஒன்று. ஆடு, மாடுகளுக்கே வெப்பம் என தவிர்க்கப்பட்ட ரின் சீற்றுக்களால் மேயப்பட்ட குடிசைக்குள் ஒரு குண்டுமணியின் இரண்டு முத்துக்கள். ஒன்றுக்கு ஐந்து வயது, மற்றையது பிறந்து ஒரு சில வருடங்கள். பசிக்கு அழும் ஓசை எங்களை குடிசையை நோக்கி இழுகின்றது.

உலக வங்கியின் நிதி உதவியினால் நடைமுறைப் படுத்தப்பட்ட வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்யும் குழுவில் நானும் ஒருவன். என்னுடன் மேலும் மூவர். ஏசி வாகனத்தில் பல நாட்கள் வன்னியின் வசந்த கால அபிவிருத்தியை அலசுகிறோம். என்னதான் அலசினாலும் நான் ஒரு துரும்பு தான். வடக்கின் வசந்தத்தின் வாசனையை மதிப்பீடு செய்த குழுவின் தலைவர் பெரும்பான்மை ஆளும் வர்க்கந்தான்.

முத்தையன்கட்டில் மர நிழலில் மழைத் தூறல்களின் மத்தியில் வகுப்புக்கள், சிதைந்த வகுப்பறைகள், கழிப்பறை இல்லாமல் தண்ணீர் போத்தல்களுடன் காட்டுப் பகுதி செல்லும் ஆசிரியர்கள், ஒரு தெறியுடன் வெள்ளை சட்டையால் உடலை மூடி இருக்கும் மாணவர்கள், கால், கைகள் பலம் இழந்து பெஞ்சில் பிடிப்பதற்கு வலு இல்லாத குழந்தைகள், கால் கை ஊனமுற்றவர்கள், முட்புதர்கள், செடிகளால் சூழப்பட்ட வீதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்வாய்கள், வேலையற்று நிவாரணத்தை உண்டு உயிரை தாங்கிக் கொண்டிருக்கின்ற மக்கள் கூட்டம். இப்படி பல வசந்தத்தின் வாசனைகளை நுகர்ந்து திரிந்த எங்களுக்கு இது ஓர் புதிய அனுபவம்.

“பிள்ளை வணக்கம்”,

“நாங்கள் உங்களுடைய வாழ்வை மதிப்பீடு செய்ய வந்திருக்கின்றோம். கொஞ்சம் கதைக்கலாமோ?”

சோகத்தை தாங்கி இருக்கின்ற அந்த இளம் விதவையிடம் எங்களை அமரச் செய்வதற்கு பாய் என்ன உரப்பை கூட இல்லாத அந்த குடிசையில் ஓரத்தில் உள்ள மர நிழலின் கீழ் இருந்த மரக்கட்டைகளில் அமர்கின்றோம்.

2009 இறுதி யுத்தத்தில் கர்ப்பிணியாக இருந்து ICRCஇன் கப்பலில் புல்மோட்டையில் இறங்கி வவுனியா வைத்தியசாலையில் முதல் பிள்ளையை பிரசவித்து முகாமில் இருந்து 2010இல் மீளக் குடியமர்த்தப்பட்டவர்களில் ஒருத்திதான் தயா. வயது இருபத்தைந்து. நான்கு சகோதரர்களுக்கு கடைசித் தங்கை. அவர்களையும் பெற்றோர்களையும் கொடிய யுத்தம் பறித்து விட்டது.

இவள் தனித்து விட்டாள். சொந்தம் என சொல்லிக் கொண்டு உறவு கொள்ள எவரும் இல்லை. முதல் பிள்ளையை வவுனியாவில் பிரசவித்தபோது கணவன் இறந்துவிட்டதாக அவளின் நண்பி உறுதிப்படுத்தினாள்.

இனிமையான பேச்சு, மற்றவர்களைக் கவரும் கண்கள், மாநிறம், அமைதியான சிரிப்பு, துன்பத்திலும் சாந்தமான முகம், உணவு இன்றி வளர்ந்த அளவான உடம்பு என அவளின் பல அம்சங்கள்தான் அவளை இந்த நிலைக்கு இட்டுச் சென்றது.

விசுவமடுவில் ஏ லெவல் படித்தபோது அவளின் அழகில் மயங்கி சுவிஸ் மாப்பிள்ளைகள் பலர் சீதனம் இன்றி மனைவியாக்க சம்மதித்தனர். வன்னியில் பல முதலாளிகள் வரட்டுக் கௌரவத்தை விட்டுக்கூட வரன் கேட்டு வந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அரச உத்தியோகத்தர்கள் விருப்பம் தெரிவித்தார்கள். எல்லா வாய்ப்புக்களையும் புறம் தள்ளியது அந்தக் காதல்.

புலிகளின் முக்கிய பொறுப்புக்களில் இருந்தவர் இவளின் கணவன். கண்டதும் காதல் அல்ல ஐந்து வருட காதல். இருபதாவது வயதில் ஏ லெவல் பரீட்சை முடிந்தவுடன் சூழ்நிலை அவளைத் திருமணம் செய்ய வைத்தது. திருமணத்திற்கு பின்னர் கிடைத்த பல பெறுபேறுகளில் 3A யும் ஒன்று.

முகாமில் பருந்துகள், கழுகுகள், பூனைகள் என எல்லாவற்றின் கண்களிலும் இவள் கிளியாகத் தோன்றினாள். இராணுவ அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ்காரர்கள், அரச அதிகாரிகள், வன்னியில் அடங்கி இருந்து விடுதலை பெற்ற காமப் பிசாசுகள் என இந்த பட்டியல் நீண்டு கொண்டு சென்றது. இருபது தொடங்கி அறுபது வரை இந்தப் பட்டியலில் இருந்தார்கள். முகாமின் கூட்டு வாழ்க்கை அவளை பலாத்காரம் செய்ய அனுமதிக்கவில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு முகாமும் ஓர் பாதுகாப்பு. மீளக் குடியமர்வு அவளை சொந்த ஊருக்கு அழைத்துச் சென்றது. பழையவை சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. குழந்தைக்கு இப்போது மூன்று வயது. அவளும் தாயைப் போல அழகில் அரசியாக இருந்தாள்.

பழைய கிராமம் புதிய கிராமமாக மாறியது. நல்லவற்றில் அல்ல. எதை எதையெல்லாம் கலாச்சாரம் பண்பாடு என பேசி வந்தோமோ அது எல்லாம் சீரழிந்து போனது. கிராமத்தில் விதவைகள் எண்ணிக்கை அதிகம். அதுவும் இளவயதில் கணவனை இழந்தவர்கள் ஓர் சில பிள்ளைகளுடன் எத்தனை காலம்தான் சமூகத்திற்காக வாழ முடியும்? அரசாங்கத்தின் உதவிகளும் குறைக்கப்பட்டன. நாளாந்த வாழ்க்கைக்கு வழி இன்றி பலர் ஏங்கினர்கள், ஓர் வேளை உணவுடன் நித்திரைக்கு செல்கின்றனர் பலர். கடுமையான வெயில், மழை, வாழ்க்கைச் செலவு என இந்த துன்பங்களுக்கு அப்பால் இவர்களும் ஓர் சாதாரண மனிதர்கள். மனித உணர்ச்சிகளை எத்தனை நாட்களுக்கு அடக்கி வைக்க முடியும். இவ்வுணர்ச்சிகளை சமூகம், பண்பாடு அடக்குமா? ஏன் இந்த வாழ்க்கை? இதைவிட மண்ணோடு மண்ணாக அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனுடன் போய் இருக்கலாம். இது இவளுக்கு மட்டும் அல்ல பல விதவைகளின் ஏக்கம்.

காலங்கள் கடந்தன! இவர்கள் தங்களை அடக்கி கௌரவமாக வாழ்ந்தாலும் சமூகம் விட்டதா?

"அக்கா விதானையார் உங்களை வரட்டுமாம்" இது எதுவும் அறியாத சிறுவனிடம் அவர் கொடுத்த தகவல்.

"என்ன தனியா இரவில் சுகமா இருக்கிறியளா?" இது பேரப்பிள்ளைகளுடன் இருக்கும் கிருஸ்ணா அண்ணையின் லீலை.

"என்ன தயா இரவில் படுக்க கஸ்ரமா இருந்தா நான் வாரன்" இது மனைவியை விட்டு இரண்டாம் மனைவியுடன் இருக்கும் வேலனின் விளையாட்டு.

"ஹலோ நான் டொக்டர் பேசுகின்றேன்"

"யார் டொக்டர்?"

"இன்றைக்கு உங்கள் மகளைக் காட்டினியள்"

"ஓம் சேர் சொல்லுங்கோ!"

"இல்லை ஆக்கள் நின்றபடியால் கதைக்கவில்லை!"

"சொல்லுங்கோ சேர்"

"பிள்ளைக்கு ஏதாவது.."

"அது ஒன்றும் இல்ல, நான் உங்களுடன் தனியாக கதைக்க வேண்டும். நீங்கள் எந்த நேரமும் என்னுடன் கதைக்கலாம். ................ இரவு 12.00 மணி என்றாலும்..................." என தொடரும் போலி வைத்தியர்.

"நான் உங்கள் வீட்டு வாசலில் இறக்கி விடுகிறேன்" என மற்றவர்களுக்காக பஸ் தரிப்பிடத்திலேயே பஸ்சை நிறுத்தாத ரைவர்கள், நடத்துனர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நங்கி கோமதை. அத்த ராத்திரியே உயாகே கெதரட்டம என்ட புளுவாண்ட" என காவல் சிப்பாய்கள்

"பிள்ளை எப்பிடி இருக்காய், நீ படிக்கிற காலத்திலேயே எனக்கு உன்னில் விருப்பம்" என பழைய கணக்கு வாத்தியார்.

எத்தனையோ வீடுகள் இருக்க இங்கு வந்து தண்ணீர் கேட்கும் கூலித் தொழிலாளர்கள், வழிப்போக்கர்கள்............... என இந்தப் பிசாசுகளின் எண்ணிக்கை நீண்டு செல்லுகின்றது. என்ன இந்த சமூகம்? எல்லோருடைய நோக்கமும் ஒன்றுதான்.

வருடங்கள் பல கழிந்தன. திருமணம் செய்கின்ற வயதில் எவ்வளவு காலம் ஆண் தொடர்பு இன்றி தயாவால் இருக்க முடியும். இது மனித இயற்கை. இந்த கொடிய யுத்தம் இந்த விடியலற்ற இரவுகளை தந்து விட்டது.

உடல் கஷ்டத்தை விட வாழ்க்கை கஷ்டம் வேறு. தயாவின் ஏ லெவல் பெறுபேறு அவளை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் தற்காலிக வேலைக்கு அழைக்கின்றது. ஒரே நாளில் நியமனம். மேல் அதிகாரி கொழும்பில் இருக்கிறார். பெயர் மோகன். தயாவுடன் ஐந்தாம் ஆண்டில் ஒன்றாகப் படித்தவன். அவன் குடும்பம் யுத்தம் வலுவடைவதற்கு முன்னரே கொழும்பில் செற்றிலாகி விட்டது. மோகனுக்கும் தயா மீது அந்நாட்களில் ஓர் ஆசை இருந்தது. ஆனால் தயா இந்திய வம்சாவழி. இவன் உயர் சாதி யாழ்ப்பாணத்து பரம்பரையாயினும் வன்னியில் குடியேறி வாழ்ந்தவர்கள்.

தயா கிளிநொச்சியில் வாடகை வீட்டில் சில காலம் வேலைக்காக............. தயா மீது மோகனின் அதிகாரம், நட்பாக மாறி இறுதியாக காதலாக மலர்ந்தது. சமூகம் ஏற்காத உறவில் முடிந்தது. பழையவை எல்லாம் நோக்கம் தெளிவாக தெரிந்தது. இது வேறுபட்டது. சீதனத்துக்காக பெண்களை தேடி அலையும் ஆண்களில் விதவை தாயை ஓர் பெண் குழந்தையுடன் பல இலட்சங்கள் வருமானம் உழைக்கும் உயர் சாதி ஒருவர் திருமணம் செய்ய முன்வந்தால் அவளுக்கு அவன் கடவுளாக தோன்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுக்கு ஏமாந்து போக அவள் ஏமாளி அல்ல. இவர்களின் பதிவுத் திருமணத்துக்கு முதல் கணவனின் டெத் சேர்ரிபிக்கற்ருக்காக பல ஆண்டுகள் தவம் இருக்க வேண்டி இருந்தது. எட்டு வருடம் முடிந்தால்தான் இது கிடைக்கும் என அவர்கள் அப்போது தெளிவாக சொல்லிவிட்டினம். இப்போது அல்ல. இப்போது உயிருடன் இருப்பவர்களுக்கும் கூப்பிட்டு கொடுக்கினம்.

ஆடம்பரமான வாகனங்களில் பயணம், ஆடம்பரமான விடுதிகளில் உணவு, விலையுயர்ந்த ஆடைகள், உல்லாச விடுதிகளில் பொழுதுபோக்கு என ஓர் புதிய உலகம் தயாவுக்கு கற்பனை செய்து பார்க்க முடியாத வாழ்க்கை அது. மோகனின் சிசுவை கூட வயிற்றில் சுமக்க தயா உடன்பட்டாள். இது ஓர் உறுதியான பிரிக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தும் என இருவரும் நம்பினார்கள்.

மோகனுக்கு கனடாவில் பிரஜாவுரிமை விசா கிடைத்தது. பெற்றோர்கள் அவனின் சொந்தத்தில் நிலாவை பதிவு திருமணம் செய்துவிட்டு கனடாவுக்கு அனுப்ப ஆயத்தமானார்கள். தயா எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தும் சூழ்நிலைகள் தடுத்தன. பதிவுத் திருமணத்தின் பின் மோகன் ஆறு மாதத்துக்குப் பின் மீண்டும் இலங்கை வந்து நிலாவை திருமணம் செய்து மீண்டும் கனடாவுக்கு திரும்பினார்கள்.

தயாவின் ஒப்பந்த காலம் முடிவடைந்தது. பதிவில்லா இரண்டாவது ஆண் குழந்தையுடன், இரண்டு குழந்தைகளையும் கொண்டு பழைய வீட்டில் பழைய வாழ்க்கையில் பயணித்துக் கொண்டிருக்கின்றாள். தற்போது அவள் மீதான கழுகுகள் கூட்டம் அதிகம். இராகங்கள் பல விதம் பாடல் ஒன்று தான் என்பதை உணர்கிறாள்.

எங்களுக்கு ரெலிபோன் அழைப்பு

"சேர் நாங்கள் கொழும்பில் இருந்து பேசுகின்றோம் உங்களுடைய ரிப்போட் அரசாங்கத்துக்கு சார்பாக இருக்க வேண்டும். உங்களுடைய ரிப்போட்டை உலக வங்கி மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. எங்களுக்கு கிடைக்கின்ற அடுத்த வாய்ப்பை நழுவ விடாமல் இருக்கக்கூடிய வகையில் ரிப்போட் அமைய வேண்டும். வன்னியில் பெண்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை வங்கி கவனமாக எதிர்பார்க்கின்றது".

"சரி பிள்ளை நன்றி நாங்கள் போட்டு வாறம்" ஆய்வுக்குழு இரவு கனகராயன்குளத்தில் அவசர மீள் எழுச்சித் திட்டத்தின் நிதியில் கட்டப்பட்ட விடுதியில் ஏ.சீ. றூமில். எனக்கு நித்திரை வரவில்லை. வடக்கின் வசந்தம் என்னை பீடித்து விட்டது.

அரசை விடுங்கள். நாம் என்னத்தை செய்ய முடியும்? ஒரு சராசரி மனிதனாக என்ன செய்யலாம்? நாம் செய்வதை எனது குடும்பம் சமூகம் எப்படி பார்க்கும்? என்னால் இந்த மக்களுக்கு என்ன செய்ய முடியும்? ஆகக் குறைந்தது ஒரு குடும்பத்துக்கு ஏதாவது என்னால் முடிந்தது. ஏன் இரண்டு குடும்பத்தை ஒருவன் வைத்துக் கொள்ளக் கூடாது. அதுவும் ஒரு சமூக நோக்கத்துக்காக...?

காலை ஏழு மணி சாப்பாட்டுக்கு முன்னர் "தயா நான் நேற்று உங்களுடைய வீட்டுக்கு வந்த கம்பஸ் மாஸ்ரர் பேசுகின்றேன். நான் உங்களுடன் கொஞ்சம் தனிப்பட்ட முறையில் கதைக்க விரும்புகிறேன்"

"ஓம் சேர். தெரியுது சேர். இப்படித்தான் பலர் எனக்கு ரெலிபோன் எடுக்கிறார்கள். நீங்கள் ஏன் சேர்"

"இல்லை பிள்ளை என்னை நீங்கள் தவறாக பார்க்கிறீர்கள். தமிழ் கலாச்சாரம் என்றால் என்ன என்று உலகுக்கு உணர்த்திய நீங்கள் இன்று............இப்படி..."

"நீர் ஏன் ஓர் குடும்ப வாழ்க்கைக்கு போகக் கூடாது".

மறுமுனையில் இருந்து ஏளனமான சிரிப்பு.

"என்ன சேர் ஜோக் விடுகிறீர்கள். நான் பதிவு இல்லா பிள்ளைக்கும் ஒரு தாய். சாதாரண பெண்களையே திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வைப்பது கஷ்டமாக இருக்கின்ற இந்தக் காலத்தில் என்னை யார் திருமணம் செய்வார்கள். எல்லோரும் திருமணம் செய்வதாக கூறித்தான் உறவை ஏற்படுத்த முனைகிறார்கள். இப்ப நான் என் உடலை விற்கும் தொழிலை தேர்ந்து எடுக்க தள்ளப்பட்டு விட்டேன். எனது பிள்ளைகளை வளர்க்க எனக்கு இதைவிட்டால் வேறு வழி தெரியவில்லை" என்றாள்.

"நீர் சமூகத்தில் எல்லோரையும் ஒன்றாக பார்க்கிறீர். சமூகத்தில் சில நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள்" என்றேன்.

"என்ன நல்ல மனிதர் சேர். இப்ப நீங்கள் என்னை திருமணம் செய்து கொண்டால் உங்களுடைய கம்பஸ் சமூகம் உங்களை என்ன நினைக்கும். சமூகத்தில் உங்கள் மதிப்பு என்னவாகும். யதார்த்தத்தை பாருங்கோ. பலருக்கு ஆசிரியராக இருக்கும் உங்களுக்கே நான் அறிவுரை சொல்கிறதோ. எங்கட சமூகத்தில பெரிய மனிதர்கள் என்னிடம் என் உடலை விரும்பித்தான் என்னை தொந்தரவு செய்கிறார்கள். நீங்களும் அதைத்தான் விரும்புகிறீர்கள். நான் பல்கலை பேராசிரியர்களைப் பற்றி பேப்பரில் படித்து இருக்கிறேன். பிரச்சினை இல்லை. நான் அழைக்கும் போது வாங்கோ. நேரம் போகுது பிள்ளையை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். நான் வைக்கிறன் சேர்".

கதவு தட்டப்படுகிறது.

"சேர் நெடுங்கேணியில் 192 மில்லியன் செலவில் கட்டப்பட்ட இன்னொரு துரித மீள் எழுச்சி திட்டத்தை பார்க்கச் செல்ல வேண்டும்" இது எங்கள் உதவியாளரின் நிகழ்ச்சித்திட்டம்.

நகர அரச அலுவலகங்களுக்கு சுற்றுமதில்.

அலுவலர்களுக்கு ஏசி விடுதி.

ஆடம்பர கேட்போர் கூடம்.

ஆடம்பர வாகனங்கள்.

ஏ.சீ. வாகனங்களுக்கு கராஜ் வசதிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகங்களுக்கு மீன் தொட்டிகள்.

கிணற்றில் தண்ணீருடன் வீட்டில் பலர் வேலையற்று இருக்க ஓட்டை கூரையைக் கொண்ட வீட்டு முற்றத்துக்கு குழாய் நீர்.

உயர் அதிகாரிகளின் பிள்ளைகளின் பாடசாலைகளுக்கு ஆடம்பர கேட்போர்கூடம். புதிய வகுப்பறைகள்.

ஐந்து குடும்பங்கள் குடியேறிய கிராமத்துக்கு கிணறுகளின் நீர் மட்டத்தை பேண 5 மில்லியன் செலவில் குளத்தின் புனரமைப்பு.

இதுதான் துரித மீள்எழுச்சித் திட்டம். இந்த துரித மீள் எழுச்சி திட்டங்கள் பல மில்லியன்கள் செலவில் தேவைதானா? ஏன் இந்த மில்லியன் ரூபா திட்டங்கள்? அவைகளை மதிப்பீடு செய்ய இன்னொரு மில்லியனில் ஏன் இந்தக் குழு? என எண்ணியவாறு வாகனத்தில் அமர்கின்றேன். எங்கள் பயணம் கார்பெற் றோட்டில் தொடர்கிறது.

-----------------------





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயம வீடு

கனகம்மாவின் வீட்டின் வேப்பமர நிழலில் சனக் கூட்டம். சாவீட்டில் சிலரின் அவலக் குரல்கள். இடையிடையே ஒப்பாரிகள்

"ஏன் இவள் இப்பிடி செய்தவள்? என்னைக் கேட்டால் நான் கொஞ்சப் பணம் மாறிக் கொடுத்து இருப்பன்" கனகம்மாவின் மூத்தண்ணை.

"எங்களை எல்லாம் விட்டு ஏன் அம்மா இந்த முடிவுக்கு வந்தனீங்க" அவளின் மூத்தவளின் குமுறல்.

"எங்களை எல்லாம் தெருவில் விட்டு விட்டு ஏன் போனனீங்கள்? இந்தக் கடன் எல்லாம் நான் உழைத்து தருவன் அம்மா. எங்களை தவிக்கவிட்டு ஏன் இப்பிடிச் செய்தனீங்கள?" இது அவளின் கடைக்குட்டியின் வாயில் இருந்து அடிக்கடி வந்து போனது.

கடற்கரை மண் ஆடி மாத வெயிலில் வெந்து கொண்டிருக்கின்றது. ஒன்றரைப் பரப்பு காணியில் உள்ள சிறிய வீட்டில் கனகம்மாவின் மூன்று பெண்பிள்ளைகளும் ஓர் ஆண்பிள்ளையும் கதறிக் கொண்டிருக்க அமைதியாக நிரந்தரமாக உறங்கி விட்டாள் கனகம்மா.

கனகம்மாவின் குடும்பம் சிறியது. ஆனால் இவ்வளவு காலமும் மருதங்கேணியில் கண்ணியமாகத்தான் வாழ்ந்தது. அவளுடைய கணவன் மாரிமுத்து ஓர் கடற்தொழிலாளி. சிறிது சிறிதாக தொழில் நடாத்தி வந்தவன். நான்கு ஐந்து பேரை வைத்து கடல் தொழில் செய்து கொள்ளும் அளவுக்கு வாழ்ந்தான். அவர்களுக்கு என்று சொந்தமாக நிலம் வாங்கி இரண்டாயிரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றில் ஓர் அழகான வீட்டையும் கட்டி, பிள்ளைகளை பருத்தித்துறையில் வட இந்துவில் சேர்த்து படிப்பித்து வந்தான். ஊரில் எல்லோரும் பொறாமை கொள்ளக்கூடிய வகையில் வாழ்ந்ததுதான் அந்தக் குடும்பம்.

ஊரார்களின் கண்ணோ என்னவோ இரண்டாயிரத்து நாலில் தொழிலுக்கு போன முத்து திரும்பி வரவில்லை. சுனாமிப் பேரலை அவனைக் கொண்டு சென்றது மட்டுமல்ல அவர்களின் வீட்டையும் கொண்டு சென்றது. கனகம்மாவை அவளின் வீட்டில் இருந்து நூறு மீற்றர் தூரத்தில் உள்ள பனை வட்டில் இருந்துதான் மீட்டு எடுத்தது. பிள்ளைகள் கோயிலுக்குச் சென்றபடியால் தப்பி விட்டார்கள்.

உயிர் தப்பிய அனைவருக்கும் சுனாமி வீட்டுத்திட்டம் பழைய மாதிரி இல்லை என்றாலும் புதிய வீடு ஒன்றைக் கொடுத்தது. முத்து இறக்கும் போது கனகம்மாவிடம் நாற்பது பவுண் நகை இருந்தது. இதில் பத்து பவுண் மட்டுந்தான் அவளுடைய அப்பா சீதனமாகக் கொடுத்தது. அதைவிட மிகுதி எல்லாம் முத்து தான் கடற்தொழில் செய்து சம்பாதித்தது. ஊரில் பலரிடம் கொஞ்சம் கொஞ்சம் வட்டிக்கு கொடுத்து மூன்று நான்கு இலட்சம் பணம் ஊரில் இருந்தது. முத்து இறந்த பின்னர் வட்டிக்கு வேண்டியவர்களும் குமர் பிள்ளைகளின் நிலையை உணர்ந்து திருப்பிக் கொடுத்தனர். இதைக் கொண்டு அவள் தனது வாழ்வை நடாத்தினாள். சில நாட்களுக்கு சிறிய சிறிய கூலி வேலைகளும் செய்து வந்தாள்.

இரண்டாயிரத்து ஆறில் யுத்தம் அவர்களை மீண்டும் இடம்பெயரச் செய்தது. மருதங்கேணியில் இருந்து கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தார்கள். இது பரந்தன், விசுவமடு, உடையார்கட்டு, இறுதியாக முள்ளிவாய்க்கால் என உடுத்த உடுப்பும் ஒரு இருபத்தைந்து பவுண் நகையுமாக செட்டிக்குளத்தில் அகதி முகாமில் இருந்து இரண்டாயிரத்து பதினொன்றில் மருதங்கேணியில் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள். இக்காலத்தில் அவர்கள் பட்ட துன்பம் சொல்லில் அடங்காது. மீளக் குடியமர்ந்தவர்களுக்கு சிறு சிறு உதவிகளை செய்தார்கள். தகர சீற்றால் அமைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய தற்காலிக வீட்டில் அவர்களுடைய வாழ்க்கை ஓடியது.

அவளுடைய கடைசி மகன் தற்போது ஓலெவல் படிக்கிறான். மூத்தவள் அட்வான்ஸ் லெவல் முடித்துவிட்டு கம்பஸ் கிடைக்காததால் வீட்டுடன் இருந்து விட்டாள். இரண்டாவது மகள் மாலாவுக்கு கம்பஸ் கிடைத்து படிக்க வசதி இல்லாமல் இருந்து ஊர் பெரியவர்களின் தயவால் இரண்டு வருடத்துக்கு பின்பு இப்பத்தான் முதலாவது வருடத்தில் இருக்கிறாள். கடைசி மகள் இந்த வருடந்தான் அற்வான்ஸ் லெவல் எடுக்கப்போகிறாள். இவர்களுடைய குடும்பத்துக்கு சிலர் வெளிநாடுகளில் இருந்து சிறிய சிறிய உதவிகளும் செய்கிறார்கள். கம்பஸில் படிக்கும் மகள் பல அமைப்புக்களில் இருந்து பல உதவிகளைப் பெற்று இருக்கிறாள்.

இந்தியன் வீட்டுத்திட்டம், சுவிஸ் வீட்டுத்திட்டம், அவுஸ்ரேலியா வீட்டுத்திட்டம், என அவர்களது கிராமத்தில் பல அமைப்புக்கள் பலருக்கு வீடு கட்ட உதவி வழங்கியது. பத்திரிகைகளும் இதை பெரிதாக பறை சாற்றின. இவர்களுக்கும் வீட்டின் நிலமைகளை கவனத்தில் எடுத்து இந்திய வீட்டுத் திட்டத்தில் உதவி கிடைத்தது.

அந்த மணற்காட்டில் ரின்சீற் தகர வெப்பத்தில் அவர்கள் எத்தனை காலம்தான் வாழமுடியும். சுனாமி வீட்டுத்திட்ட வீடும் யுத்தத்தால் இடிந்து அழிந்துவிட்டது. இதை எல்லாம் பார்த்துதான் இத்திட்டத்தில் வீடு கட்ட தெரிவு செய்யப்பட்டார்கள்.

வீட்டுத்திட்டத்திற்கு தெரிவான பெயர் பட்டியலை பார்த்துவிட்டு அவளின் மகன் சந்தோஷப்பட்டு "அம்மா! அம்மா! நாங்கள் லக்கி ஆக்கள் எங்களுக்கு முதலாவது கட்டத்திலேயே வீட்டுத்திட்டம் கிடைத்து விட்டது" என ஆனந்தக் கடலில் மூழ்கினான்.

மூத்த மகள் வேலை செய்யக்கூடிய வயதில் இருந்தும் அவளுக்கு ஒரு வேலையும் இல்லை. சிறு சிறு கூலி வேலை செய்த கனகம்மாவுக்கு மீளக் குடியமர்ந்த பின்னர் அங்கு தற்போது எந்த வேலையும் இல்லை. பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் பகுதி பெண்கள் கூட அங்கு வேலை செய்தார்கள். கனகம்மா முயன்றும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியாக நிவாரணமும் நின்ற போது குமர்களை கரைசேர்ப்பதற்கென பொத்திப் பொத்தி தேட்டமாக எடுத்து வந்த நகைகளில்தான் கைவைக்க நேர்ந்தது. அதுவும் ஒன்று, இரண்டாக இழந்து இப்ப பத்துப் பவுண் நகை மட்டுந்தான் கையில இருக்கு. வீட்டுத்திட்டம் அவர்களைச் சற்று தேற்றி சந்தோசப்படுத்தியது.

"அம்மா.......அம்மா........."

யாரோ கேற்றில கூப்பிடுகிற சத்தம்.

"யாரோ கூப்பிடுறாங்கள் பிள்ளை. போய் பார்" அடுப்படியில இருந்து கனகம்மா.

"கனகம்மா மாரிமுத்து வீடு இது தானே" கேற்றில் நின்றவர்கள்.

"ஓம் உள்ளுக்கு வாங்கோ"

"அம்மா உங்களைத்தான் கூப்பிடுகினம்" கூறிக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள் மூத்தவள்.

"நாங்கள் கச்சேரியில் இருந்து வருகிறோம். ஜீ.எஸ் எல்லாம் சொல்லியிருப்பார். அத்திவாரத்தை ஒரு மாதத்தில போடுங்கோ. ஓர் லட்சம் தருவம். மிகுதிக் காசு வேலை செய்யச் செய்யத்தான் தருவம். மொத்தமாக வீடு கட்டி முடியும் போது ஐந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் தருவம்"

இது வந்தவர்களின் விளக்கம்.

"தம்பி எங்களிடம் இப்ப இந்தக் காணி மட்டுந்தான் இருக்கு. எப்பிடி அத்திவாரத்துக்கு காசு புரட்டுறது" கனகம்மா.

"இது அரசாங்கத்தின் வீட்டு திட்ட பொலிசி. நாங்கள் தாற பணத்துடன் மிகுதியை நீங்கள் போட்டுத்தான் கட்ட வேண்டும். முடியாவிட்டால் எத்தனையோ பேர் வீட்டுத்திட்டத்துக்கு தவம் இருக்கிறார்கள். அவர்களுக்கு உங்களிடம் இருந்து எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்போம். பின்பு உங்களுக்கு வசதி வரும் போது ஏதும் திட்டம் இருந்தால் தருவம்" வந்தவர்களின் பதில்.

"வீட்டில வேலையில்லாமல் இரண்டு மூன்று பேர் இருக்கினம். எங்களுக்கு என்று ஓர் வாழ்வாதாரம் இல்லை. ஒழுங்கான தொழில் இல்லை. நிவாரணமும் நின்று விட்டுது. சமைப்பதற்கு கூட வசதி இல்லை. அப்பிடி இருக்கேக்க எங்கள பணத்தைப் போட்டு வேலையை தொடங்கச் சொன்னால் எப்பிடி தொடங்கிறது...?" தொடர்ந்தாள் கனகம்மா.

"அம்மா உங்களுடைய புராணத்தை கேட்க எங்களுக்கு நேரம் இல்லை. இந்த வீட்டுத்திட்டம் பெரிய பெரிய கொன்சல்ரன்களைக் கொண்டுதான் திட்டமிட்டது. இது வடக்கின் வசந்தம். நீங்கள் வீட்டை தொடங்கிப் போட்டு ஜீ.எஸ் ஊடாக எங்களுக்கு அறியத்தந்தால் முதல் கட்ட பேமன்ற் எடுக்கலாம். உங்களுக்கு வேலை இல்லை, வருமானம் இல்லை என்பதைவிட வீடு அவசியமல்லோ. எனவே வேலையை தொடங்குங்கள்" எனக் கூறிவிட்டு அவர்கள் அடுத்த வீட்டுக்கு சென்றார்கள்.

இரவு கம்பசில படிக்கிற மகளும் சனி, ஞாயிறு லீவு என்றபடியால் வெள்ளிக்கிழமை பின்னேரம் வந்து விட்டாள்.

"அம்மா இந்த தகர கூரையில் எப்பிடி இருக்கிறது. வந்த வாய்ப்பை விடக் கூடாது. எப்படியோ வேலையைத் தொடங்குவோம்." மூத்தவள்.

"அம்மா கம்பஸ்சில இருந்து யாரும் பிரண்ட்ஸ் வந்தால் இந்த தகர வீட்டுக்குள் எப்பிடி கூட்டிக் கொண்டு வாறது. அக்காவுக்கு என வைத்திருந்த நகையை அடைவு வைச்சு தொடங்குவம்"

"அந்தரம் ஆபத்துக்கு எண்டு இருக்கிறத வைச்சிட்டு.." வைக்க மனமில்லை கனகம்மாவுக்கு.

"பிறகு அரசாங்கம் பணம் தர மீட்பம். ஒரு இரு மாத வட்டி கட்ட வேண்டும். இப்ப நிறைய கம்பனிகள், வங்கிகள் எங்களுக்கு லோன் தருவதற்காக என்றே இங்கு பல கிளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறக்கினமாம். எங்கட விரிவுரையாளர்களும் இந்த அபிவிருத்தியை கம்பசில பாராட்டி இருக்கினம்" என்றாள் கம்பஸ்காரி.

"அம்மா மூத்தக்காவுக்கு திருமணம் பேசுவது என்றால் நகையை விட இருக்கிறதுக்கு வீடுதானே முக்கியம். இந்த குடிசை வீட்டை யாரும் பார்த்தால் மாப்பிள்ளையை கொடுப்பினமோ? வீட்டில் உலை வைக்காவிட்டாலும் வெளியில மற்றவர்கள் பார்க்கும்படி வீடு ஒண்டு வேணும்" ஏலெவல்காரி.

"அம்மா ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ. நான் வளர்ந்து உழைத்து அக்காக்களுக்கு நகை செய்வன். இப்ப வீடுதான் முக்கியம். வீட்டைக் கட்டுவம்" என்றான் கடைக்குட்டி.

பிள்ளைகளின் விளக்கங்களைக் கேட்டு எது சரி எது பிழை என ஆராய்வதற்கு படிப்பு அறிவு இல்லை கனகம்மாவுக்கு. வடக்கின் வசந்தம் பல நிபுணர்களைக் கொண்டுதான் திட்டமிடப்பட்டதாம். அவைகளை விட நாங்கள் என்ன அறிவாளிகளா? வசந்தம் வீசும் என்ற நம்பிக்கையில் வீடு கட்ட முடிவு செய்தாள்.

ஏதோ பிள்ளைகள் ஆசைப்படுதுகள் என எஞ்சி இருக்கின்ற பத்து பவுண் நகையுடன் பருத்தித்துறைக்குச் சென்றாள். நகைகளை பரிசோதித்துவிட்டு பவுணுக்கு 35000 படி தரலாம் என மக்கள் வங்கி அதிகாரி கூறினார். ஐந்து பவுண் நகையை வைத்து ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரத்துடன் வீடு வந்தாள் கனகம்மா.

கல்லு, சீமெந்து, கம்பி என திட்டம் கூறிய பிரமாணத்தைவிட வீடு கொஞ்சம் விசாலமாகியது. அக்கிராமத்தில் வீட்டுத்திட்டம் கிடைத்தவர்களில் ஒருவர் கூட அவர்கள் கூறிய பிரமாணத்துக்குக் கட்டவில்லை. அப்படி தங்கள் அளவை விட பிரமாணம் மீறக் கூடாது என எந்த விதியையும் அதிகாரிகள் சொல்லவில்லை. தங்கள் தகுதிக்கு ஏற்ற வீடு கட்டுகிறார்களா? என அதிகாரிகள் கண்டு கொள்ளவும் இல்லை. பெரிதோ சிறிதோ திட்டத்தின்படி கிடைப்பது ஐந்தரை இலட்சம்தான்.

ஒன்றரை இலட்சத்துடன் வீட்டு அத்திவாரம் பூர்த்தியானது. ஆனால் முதல் கட்டப் பணமாக ஒரு இலட்சம்தான் கிடைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் அறுத்து சுவர் கட்டி கோப்பிசத்து மட்டத்தில் விட்டால் அடுத்த இரண்டு லட்சம் தருவார்கள் என்றனர். கிடைத்த ஒரு லட்சத்துக்கு கல்லு அறுத்து ஐந்து ஆறு வரி வைத்தார்கள். மிகுதியைத் தொடர்வதற்கு பணம் இல்லை. கனகம்மா எஞ்சிய மிகுதி நகையை மீண்டும் அடைவு வைத்து மேலும் ஒன்றரை லட்சம் பெற்று கோப்பிச மட்டத்துக்கு வீடு சென்றது.

அதிகாரிகள் வந்தார்கள். பார்வையிட்டார்கள். இரண்டு லட்சம் கொடுத்தார்கள். கோப்பிசம் போட்டு ஓடு கவுட்டால் அடுத்த கட்டப் பணம் தருவதாக உறுதியளித்துச் சென்றார்கள். கிடைத்த இரண்டு இலட்சத்தைக் கொண்டு மரம் அடித்து கோப்பிசம் போட்டதுடன் அது முடிந்துவிட்டது. ஓடு வாங்க ஒரு லட்சம் வேண்டும். என்ன செய்யலாம் என ஏங்கி நின்றாள் கனகம்மா.

"கனகம்மா அறாவட்டி ஆறுமுகத்தாரிடம் வீட்டுக்காணி உறுதியை ஈடு வைத்து ஒரு லட்சம் வாங்கி ஓட்டை போட்டால் அடுத்த கட்டப் பணத்தை எடுக்கலாம். பின் அந்த பணத்தைக் கொண்டு காணியை மீட்கலாம்" இது மனோன்மணி அக்காவின் அறிவுரை.

வீட்டில் இருந்த நகையும் முடிந்து விட்டது. கல்வீடும் குறை. எப்பிடியாவது கட்டி முடித்தால்தான் பிள்ளைகளின் ஆசை நிறைவேறும் என சிந்தித்து வீட்டுக் காணி உறுதியுடன் ஆறுமுகம் வீட்டுக்கு விரைந்தாள் கனகம்மா.

"பிரச்சினை இல்லைப்பிள்ளை. நீர் இப்ப எழுத வேண்டாம். ஓர் கைத்துண்டை உறுதியுடன் எழுதித் தாரும். ஆறு மாதந்தான் விடுவன். இப்ப வட்டி அதிகம். எனக்கு மாதத்துக்கு ஐம்பது வீதம் தரவேணும். அதுவும் மாதத்தின் முதலிலேயே வட்டி தர வேணும்" எனக் கூறிக் கொண்டு உள்ளுக்கு போனவர் ரூபா 95,000 பணத்தை கொண்டு வந்து நீட்டினார்.

கனகம்மாவுக்கு மகிழ்ச்சி கலந்த பீதி. வாங்கிக் கொண்டு வந்தாள். சில வாரங்களில் அவர்களுடைய வீட்டுக்கு ஓடு கவுக்கப்பட்டது.

அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டு இரண்டு லட்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சு செய்தார்கள். எல்லா வேலையையும் முடித்துவிட்டு மிகுதி ஐம்பதாயிரம் தருவம் என்றார்கள்.

வீட்டுக்கு நிலம் போட வேண்டும், பூச்சுப் பூச வேண்டும், கதவு யன்னல், வெள்ளை, பெயின்ட், என சாதாரணமாக முழுமையாக்க இன்னும் நான்கு ஐந்து லட்சம் வேண்டும். என்ன செய்வது? எடுத்த காவடி இறக்கத்தானே வேண்டும் என தனக்குள்ளே பெருமூச்சு விட்டாள் கனகம்மா. கிடைத்த இரண்டு லட்சம் முடிந்தது.

வீட்டு வாசலில் தபால்காரன் சத்தம்.

கடிதத்தை உடைத்து வாசித்தாள். அடைவு வைத்த நகைக்கு இறுதி எச்சரிக்கைக் கடிதம் வந்திருந்தது. இதற்கு மேல் அறிவித்தல் வரமாட்டுதாம். நகை ஏலத்தில் விற்கப்படுமாம்.

"கனகம்மா இப்பிடி இருந்தால் என்ன செய்யப் போகிறாய்? உன்ரை மூத்தண்ணையின் பொடியன் லண்டனில் நல்லாய் உழைக்கிறானாம். போய் அவரிடம் ஒன்றரை, இரண்டரை மாறி இந்த வீட்டை முடிக்கப் பாரன்" பக்கத்து வீட்டு இராசாத்தி.

மாரிமுத்து உயிருடன் இருக்கும்போது நல்ல கொண்டாட்டமாக இருந்தவன்தான் கனகம்மாவின் அண்ணன். என்னவோ நாட்டு நிலமை மாறி கனகம்மாவின் நிலமை மாற அண்ணனும் எட்டத்தில போட்டான். ஏதாவது நன்மை தீமை என்றால் அந்த நாள் மட்டும்தான் அவனை கனகம்மா வீட்டில காணலாம். தூரத்து உறவுகளைப் பார்க்க பல மைல்கள் எல்லாம் செல்பவனுக்கு கூப்பிடு தூரத்தில இருக்கும் அவளின் வீட்டை அவனின் கண்கள் மறைத்து இருந்தன.

குமர்களையும் வைச்சுக் கொண்டு ரோசம் பார்த்தால் வீட்டை முடிக்க இயலாது.

"என்ன தங்கச்சி கன காலத்துக்கு பிறகு" அண்ணன்.

"வீட்ட தொடக்கிப் போட்டன். முழுசா முடிப்பம் எண்டு..... விபரம் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கட மகன திருப்பி அனுப்ப போறாங்களாம். அவன் அங்கு லோயரை வைக்கக்கூட பணம் இல்லாமல் திண்டாடுறான். நாங்கள் இந்த வீட்டை ஈடு வைத்து கொஞ்சம் பணம் அனுப்புவம் என்று இருக்கிறம்....." தொடர்ந்தான்.

"அப்ப நான் போட்டு வாறன்" தனது வீட்டை நோக்கி பயணித்தாள்.

அருகருகே எல்லாம் வீட்டுத்திட்ட வீடுகள் அரைகுறையாக இருக்க சில வீடுகள் திட்டம் போட்டதை விட பிரமாண்டமாக நிலத்துக்கு ரைல்ஸ், தண்ணீர் தொட்டி, வீட்டுத் தோட்டம் என பிரமாண்டமாக வளர்ந்து இருந்தது. ஆனால் இவை ஊரில் ஒன்று இரண்டுதான். அனேகமானவை குறையாகத்தான் இருக்கின்றன.

கனகம்மா பல படிகள் ஏறி ஐந்து, பத்து, ஐம்பது, நூறு, ஆயிரங்கள் என ஊரெல்லாம் கடன் பெற்று வீடு கட்டி முடிந்தது. குடியும் புகுந்தார்கள்.

"அம்மா நீங்கள் அழகான வீட்டைக் கட்டி முடித்து விட்டீர்கள். மிகுதி ஐம்பது ஆயிரத்தை எடுக்கலாம்" என்றார் அங்கு வந்த பார்த்த அதிகாரி.

மொத்தமாக பதினொரு லட்சம் முடிந்தது. ஊரெல்லாம் கடன்.

காலை. புது வீட்டின் வாசல் படியில் நாடியில் கை வைத்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள் கனகம்மா. அவளின் சிந்தனையை குலைத்தது ஆறுமுகத்தாரின் வருகை.

"கனகம்மா உன்ர வீட்டுக்கு வாரது இன்றைக்குத்தான் கடைசி நாள். நீர் முதல் வாங்கிய ஒரு லட்சம், அதற்கு வட்டி பின்பு ஐம்பது அதற்கு வட்டி, பின்பு ஒன்று அதற்கு வட்டி இப்ப எல்லாமாக உன்ர கணக்கில நாலு இலட்சத்து முப்பது ஆயிரம் இருக்கு. அதற்கு நான்கு கடிதம் தந்து இருக்கிறாய். இன்றைக்கு பின்னேரம் வாறன். உன்ர கடைசி தேவை இல்லை. அவனுக்கு பதினெட்டு வயதுக்கு குறைவுதானே? மிகுதி மூன்று பிள்ளைகளும் நீரும் சையின் பண்ண வேண்டும்" கூறிக்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வேகத்தில் சென்றார்.

பின்னேரம் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு போகும் போது,

"ஒரு மாதந்தான் தருவன். அதற்கிடையில வேறு வீடு பாருங்கோ" என்றார் ஆறுமுகத்தார்.

அன்று இரவு நித்திரைக்கு சென்ற கனகம்மாவை அந்த வீடு நிரந்தரமாகவே உறங்கச் செய்து விட்டது.

--------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீசிங்

முகம் நிறைய நரைத்த மயிர்கள். நீண்டு குழி விழுந்த கண்கள் அசைவின்றி இருக்க, கறுத்த முகத்துடன் மூன்று நாட்களாக சீரான உணவின்றி நாளைக்கு என்னவென்று தெரியாது வானத்தைப் பார்த்தபடி வாசலில் அமர்ந்து இருக்கிறான் ரவி.

அவன் மனைவி மீனா வேறு. பள்ளிப் பருவத்தில் பெண்கள் கூட ஆசைப்பட்ட அவளின் அழகு எல்லாம் கருகி, ஒட்டி ஒடுங்கி, கந்தல் துணியுடன் அந்தக் குடிசையில் அவள் ஒரு மனநோயாளி.

பிராணிகளுக்கு எல்லாம் வீசி வீசி மூக்கு முட்டச் சாப்பிட்ட அவர்களின் பிள்ளைகள் அயல் வீட்டாரின் ஒரு நேர உணவில் உயிர் வாழ்கிறார்கள். ஏன் இந்த சோகம்? ஏன் இந்த துன்பம்? ஏன் இந்த வாழ்க்கை?

ரவி யாழ்ப்பாணத்தில் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்தவன். பெரிதாகப் படிப்பதற்கு அவனுடைய குடும்ப நிலை இடம் கொடுக்கவில்லை. ஆனாலும் ஓ.லெவல்வரை படித்தவன்.

பக்கத்து வீட்டில் இவனைவிட உயர்ந்த சாதியில் பிறந்தவள் தான் மீனா. இருவருக்கும் இடையில் காதல் மலர்ந்தது. இது வீட்டுக்கு தெரியவர பெரிய பூகம்பம். இறுதியில் இருவரும் வீடுகளை விட்டு ஓடி கிளிநொச்சியில் ஓர் நண்பனின் வீட்டில் அடைக்கலம்.

காலப்போக்கில் சிறிது சிறிதாக சேர்த்துச் சேர்த்து காணி, வீடு, வாகனங்கள் என அவர்களுடைய வாழ்க்கை விருட்சமானது. ஆண், பெண் என இரண்டு குழந்தைகள். வாழ்க்கை வளமானது. எப்படி வந்ததுகள் இப்ப இப்பிடி இருக்குதுகள்? என அயலவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடப் பார்த்து பொறாமைப்பட்டார்கள்.

இந்த சுபீட்சமான வாழ்க்கையை கொடிய யுத்தம் பலி கொண்டது. எல்லாவற்றையும் இழந்து ஆக முப்பது பவுண் நகையுடன் நந்திக் கடலை கடந்து செட்டிக்குளத்தில் அகதி முகாமில் சில காலம். முப்பது பவுண் சிதைந்து அவர்கள் கிளிநொச்சியில் மீளக் குடியேறியபோது மிஞ்சியது பதினைந்து பவுண்தான். இப்ப அவர்களுக்கு இந்த நகைகளும் வீட்டுக்காணியும்தான் மிச்சம்.

தற்காலிக வீட்டில் மீளக் குடியமர்ந்தார்கள். பல நிறுவனங்கள் உதவி செய்தன. எவரும் அவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி செய்யவில்லை. இரண்டு ரக்டர், ஒரு லொறி, ஒரு டிப்பர் என பல மில்லியன்களை இழந்த ரவிக்கு துரித மீள் எழுச்சித் திட்டம் மண்வெட்டியையும், கோடரியையும், வாளியையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அழகான படத்தைத் தாங்கிய விதைப் பக்கற்றுக்களையும் ஊரிலேயே பெரிய மேளதாளங்களுடன் விழா எடுத்துக் கொடுத்தது. கொடுத்த விதைகளை வீட்டின் பின்புறத்தில் நட்டான். கொடுத்தவர்களால் கூறப்பட்ட பசுமை புரட்சியை எதிர்பார்த்தான். ஏற்படவில்லை. துளி கூட நன்மை இல்லை. எப்பிடி வாழ்க்கை நடத்துவது? தேறியது நட்டந்தான். பறுவாயில்லை. சிறிய முயற்சிதானே. தன்னைத் தானே சாந்தப்படுத்தினான்.

"ரவி! எப்பிடி இருந்தனி? இப்ப இப்பிடி இருக்கிறாய். நிறைய லீசிங் கம்பனிகள் முட்டி மோதிக் கொண்டு வாகனங்களுக்கு கடன் கொடுக்குதுகள். ஒண்ட எடுத்து விடன்" பென்சன் வாத்தியார் கனகசபையின் அறிவுரை.

"எடுத்து என்ன செய்யிறது?"

"யுத்தம் முடிந்துவிட்டது. இனி அபிவிருத்திதானே. கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் என பல திட்டங்கள் இருக்கு. லீசிங்கில் ஓர் டிப்பர் எடுத்தால் நல்ல உழைப்பு"

"இப்ப புதுக் கொன்ராக்ரர்மார். எனக்கு வேலை வர வேணுமே" ரவிக்கு இப்ப எதிலும் நிதானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பேப்பரில் பார்த்தனான் வன்னியில் செய்கின்ற எல்லா அபிவிருத்தித் திட்டங்களுக்கும் வன்னி மக்களிடம் இருந்து கிடைக்க கூடிய வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என இந்த திட்டங்களுக்கு உதவி வழங்குகின்ற உதவி நிறுவனங்கள் ஆணித்தரமாக சொல்லி இருக்கிறார்களாம். யார் செய்தாலும் எங்களுடைய தமிழ் அதிகாரிகள்தான் முடிவு எடுப்பார்கள். அவர்கள் அபிவிருத்தி திட்டங்களின் பலாபலன்களை, அது என்னவோ கீழ் நோக்கி பொசிந்து செல்லும் அபிவிருத்திக் கோட்பாடாம். அதன் வழி அவர்கள் செய்கின்ற செலவுகள் இப்பிராந்திய மக்களுக்கு வருமானமாக பொசிந்து செல்லுமாம். நீர் பழையபடி ஏன் வாகனங்கள் எடுக்கக் கூடாது. முன்பு எல்லாம் லீசிங் இல்லாமலே மூண்டு நான்கு வாகனங்கள் வைத்திருந்தனீங்கள். இப்ப பத்தாயிரம் ரூபாவுடன் ஒரு வாகனம் கொண்டு வரலாமாம்......" வாத்தியார் தொடர்ந்தார்.

செய்வதற்கு வழி இன்றி இருந்த ரவிக்கு வாத்தியாரின் அறிவுரை நன்றாகப்பட்டது. லீசிங் கம்பனியை அணுகினான்.

"நான் ஒரு டிப்பர் எடுக்கப் போறன். லீசிங் தருவியளே?" வினாவினான் முகாமையாளரை.

"எவ்வளவு வைத்து இருக்கிறீர்கள்?" முகாமையாளர்.

"ஒரு பத்தாயிரம் இருக்கு"

"பத்தாயிரத்துக்கு எல்லாம் லீசிங் தர மாட்டம். குறைந்தது நாலு இலட்சம் தேவை"

"விளம்பரத்தில அப்படி இருந்ததாக சொல்லிச்சினம்"

"அந்தப் பொலிசி இப்ப இல்லை. நாலு லட்சம் கொண்டு வந்தால் மிகுதிக்கு லீசிங் தருவம்"

மனைவியின் எஞ்சிய பதினைந்து பவுண் நகைகளையும் வங்கியில் நான்கு லட்சத்துக்கு அடைவு வைத்து ஓர் டிப்பர் வந்தது. மிகுதிக்கு லீசிங் கம்பனிக்கு ஐந்து வருடம் இன்ஸ்ரோல்மென்ற் கட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் பழைய தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தி சுமாரான உழைப்பு. அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களில் வேலை குறைவாகவே கிடைத்தது. தனியாரின் வேலைகள்தான் அதிகம். ரவிக்கு டிப்பர் லீசிங் அறுபது ஆயிரம். டிப்பர் உழைப்பு லீசிங் கட்டி வாழ்க்கைக்கும் உதவியது.

கனகசபை மீண்டும் "தம்பி என்ர அட்வைஸ் எப்பிடி? வியாபாரம் எப்பிடி போகுது?" என்றார்.

"சுமாராக போகுது வாத்தியார். நான் உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்"

"நான் என்ன சாதாரண வாத்தியாரா? எத்தனை பேரை உருவாக்கி இருக்கிறன். தம்பி இந்த டிப்பரில் சின்னச் சின்ன வேலை செய்ய முடியாது. நீர் ஓர் ரக்டரையும் எடும். சின்னச் சின்ன ஊர் வேலை செய்யலாம். இப்ப ரயில் றோட்டும் போடப்போறாங்களாம். அந்தக் கம்பனிகளுக்கு எங்கட பிரதேச ரக்டர்களைதான் வாடகைக்கு எடுக்க போகினமாம். இன்னொரு லீசிங் கம்பனியில் ஒரு ரக்டரை போடும். முதல் கட்ட பணம் இல்லை என்றால் என்ர மனிசியிட்ட இரண்டு லட்சம் இருக்குது. நான் கதைச்சு வாங்கித் தாறன்"

அன்று இரவு ரவிக்கு வாத்தியார் சொன்னது சரிபோல இருந்தது. டிப்பரும் வாத்தியாரின் ஆலோசனைதானே.

விடியற்காலை வாத்தியாரின் வீட்டில்.

"வாத்தியார்! நான் நீங்கள் சொன்னதுபோல ஒரு ரக்டர் எடுப்பம் எண்டு யோசிக்கிறேன். அந்த இரண்டு லட்சத்தை வேண்டி தாறியளோ?" என்றான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியாரின் மனைவி "தம்பி உந்த மனுசனை நம்பி நான் பணம் தரமாட்டேன். ஏதும் பொறுப்புத் தாரும்"

"நான் இருக்கிற வீட்டு உறுதியை தந்து ஓர் கைத்துண்டும் தாறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு லட்சம் உடனே கிடைத்தது.

அடுத்த வாரத்தில் நல்ல நாள் பார்த்து புதிய ரக்டர் ஒன்று ரவியின் முற்றத்தில். இதை எல்லாம் பார்த்து அயலவர்கள் லீசிங் வாகனங்கள் வாங்கியது வேறு கதை.

வியாபாரம் பரவாயில்லாமல் ஓடியது. பேப்பரில் தலைப்பு செய்தி "2010, 2011களில் இலங்கையில் அதிக வாகனங்கள் விற்கப்பட்ட மாகாணமாக வட மாகாணம்"

ரவிக்கு ரக்டர் லீசிங் நாற்பது ஆயிரம்.

ஒன்று, இரண்டு, மூன்று........... என கிளிநொச்சியில் வாகனங்களின் அளவு பெருக்கெடுத்தது. ரவிக்கு வந்த தனியார் ஒப்பந்தங்களையும் குறைந்த கூலியில் லீசிங் கட்ட முடியாத மற்றவர்கள் தட்டிப்பறித்தார்கள்.

வன்னியில் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் தென்பகுதி ஒப்பந்தகாரர்களுக்கு கொடுக்கப்பட்டன. அவர்கள் தென்பகுதியில் இருந்து டிப்பர்களையும், ரக்டர்களையும் ஏன் தேனீர் போடும் சாதாரண கூலியாட்களையும்கூட கொண்டு வந்தார்கள். கட்டிட நிர்மாண ஒப்பந்தகாரர்கள் அவர்களின் சொந்த வாகனங்களைப் பயன்படுத்தி தென்பகுதியில் இருந்து உள்ளீடுகளைக் கொண்டு வந்தார்கள். பல தனியார் ஒப்பந்தங்களையும் தென்பகுதி வாகன உரிமையாளர்கள் மிக குறைந்த விலையில் பெற்றுக் கொண்டார்கள்.

"இது திறந்த சந்தைப் பொருளாதாரம். இலங்கையில் எந்தப் பகுதியிலும் எவரும் எந்த ஒப்பந்தங்களையும் எடுக்கலாம். எந்த வாகனங்களையும் எங்கு வேண்டுமென்றாலும் வாடகைக்கு அமர்த்தலாம்"

இது தென் பகுதியில் இருந்து அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆலோசனை கூறும் ஓர் பொருளியல் பேராசிரியரின் போட்டிச் சந்தை பற்றிய விளக்கம்.

கேட்க நல்லாகத்தான் இருக்கிறது. ஒப்பந்தங்கள் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலா கொடுக்கப்படுவது? அதுவும் நாற்பது ஆண்டுகள் யுத்தத்தால் அழிந்த ஒரு பிரதேசத்துக்கு. இங்குள்ள புத்திஜீவிகள் கேட்கவில்லை. ஏதோ வருகிறார்கள், போகிறார்கள்.

பதினான்கு மாதங்கள் லீசிங் கட்டிய பின்னர் ரவிக்கு படிப்படியாக வருமானம் வீழ்ந்தது.

"பல மில்லியன்களை இழந்து எதுவித பொருளாதார ஆதரவும் இன்றி பல ஆண்டுகள் யுத்தத்தால் நொந்து இருக்கின்ற உள்ளூர் முயற்சியாளர்களை பாதுகாக்க எதுவித ஏற்பாடுகளும் இல்லாமல், ஏற்கனவே தென்பகுதியில் குறைந்த வட்டிக் கடன்களில் ஏனைய சலுகைகளில் வளர்ந்து கொழுத்து இருக்கிற முயற்சியாளர்களை இந்த வலுக்குன்றியவர்களுடன் போட்டியிட வைத்தால் என்ன நடக்கும்?" ரவிக்கு விளக்கினான் ஏ.எல் படித்த கண்ணன்.

அரசாங்கம் பிரச்சினை தொடர்பில் ஏதோ பெரிதாகச் செய்யும் என நம்பிய மக்களுக்கு பதின்மூன்று பிளஸ் மைனஸ் ஆனதைத் தொடர்ந்தும், முஸ்லீம்களுக்கு எதிரான இன வன்முறைகளைத் தொடர்ந்தும் உள்ளூர் முதலீடுகள் குறைந்தன. இதனால் பலர் வேலையை இழந்தனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்த பணத்தைக் கொண்டு, இனி என்ன சுபீட்சம்தான்! என வீடு, மதில் கட்டியவர்கள் நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்து குறைத்துக் கொண்டார்கள் அல்லது இருக்கிறதுகளை விற்று வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள்.

ரவி சில மாதங்கள் ஊரில் மீற்றர் வட்டிக்கு பணம் எடுத்து லீசிங் கட்டி வந்தான். ஓர் இலட்சத்துக்கு மாதம் ஐயாயிரம். எல்லாம் நம்பிக்கைதான்.

மாகாணசபைத் தேர்தலில் ரீ.என்.ஏ. வெற்றியைத் தொடர்ந்து அரசாங்கம் ஒன்றும் செய்யாது என விளங்கியது. மாகாணசபைக்கு உள்ள அதிகாரங்கள் பற்றி மக்கள் நடைமுறையில் கற்றுத் தெளிய தலைப்பட்டார்கள். வடபகுதியில் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கத் தொடங்கியது. பல நிகழ்வுகள் வடக்கில் தனியாரின் பொருளாதார நடவடிக்கைகளை வீழ்ச்சியடையச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவிக்கு டிப்பருக்கு 190,000 உம் ரக்டருக்கு 125,000 என லீசிங் கம்பனியில் கடந்த கால நிலுவை அதிகரித்தது. இதைவிட ஊரில் லீசிங் கட்ட கடன் கொடுத்தோரின் தொல்லைகள், வீட்டுச் சீவியம், சாப்பாட்டுக்கே தள்ளாடும் நிலை.

எத்தனை காலம் இப்படி லீசிங் கம்பனியை ஏமாற்றுவது? அவர்கள் இங்கு வந்தது எங்களுக்குச் செய்ய அல்ல. இங்கு யுத்தத்தால் அழிந்து மிச்சமாக இருப்பதையும் எடுப்பதற்குத்தான். இதுதான் வடக்கின் வசந்தமா? அலுத்துக் கொண்டான் ரவி.

போன கிழமை டிப்பரும் நேற்று முன்தினம் ரக்டரும் என லீசிங் கம்பனி பொலிஸாருடன் வந்து இரண்டு வாகனங்களையும் பறித்துச் சென்றுவிட்டது. மிச்சமாக இருந்த நகையும் போய்விட்டது. அழிக்க முடியாது என்று இருந்த அவனின் தேட்டமான வீட்டுக் காணியும் பொறுப்பில். எஞ்சியது வலிகளைச் சுமந்து இருக்கும் உயிர்கள்தான்.

கனகசபை வாத்தியார் வருகிறார்,

"தம்பி வீட்டில மனிசி இருக்க விடுகுதில்லை. காணியளும் இப்ப விழுந்திட்டுது. நீங்கள் உங்கள் வீட்டுக் காணியை ஓர் லோயரை பிடிச்சு எழுதித் தாங்கோ. மிச்சக் காசைத் தாறம்"

வாத்தியாருக்கு உதைக்க வேணும் போல இருந்தது. என்ன செய்வது? பழங்காலத்தில் படித்த வாத்தியாரின் இலவச ஆலோசனையைக் கேட்ட தன்னைத்தான் செருப்பால அடிக்க வேண்டும் என நொந்து கொண்டான் ரவி.

ஊரில் இவனைப் போல் எத்தனை நூறு பேர்? புதுமாத்தளன், அகதிமுகாம் எல்லாம் திரிந்தும் அழிக்காத சொத்துக்களை இந்த லீசிங் கம்பனிகள் சுலபமாக தன்வசமாக்கிக் கொள்கின்றன.

இவர்களை நெறிப்படுத்த வட மாகாணத்தில் மத்திய வங்கியின் அலுவலகம் வேறு. இவையெல்லாம் வடக்கின் வசந்தம் ஊடாக வடக்கில் மக்களுக்கு எப்பிடி கொடுக்கலாம் என்பதைவிட எப்படியெல்லாம் எடுக்கலாம் என்பதையே அரசுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்துகின்றன. பாவம் மக்கள். ஒரு இடி முடிந்து மறு இடியால் துடிக்கிறார்கள். எத்தனை ஆயிரம் ரவிகள்.

வாத்தியாரைத் தொடர்ந்து ஊரில் லீசிங் கட்ட கடன் கொடுத்தவர்கள் எல்லாம் ரவியின் வீட்டை முற்றுகையிட்டார்கள். ஊர்க்காரர்களுக்கு வட்டியுடன் சேர்த்து மொத்தமாக எட்டு லட்சம் கடன். முகாமில் இருந்து வந்த போது கடன் இல்லை. ஏதோ இருப்பதற்கு ஒரு நிலம்,ஆபத்துக்கு உதவ நகை என இருந்தது. இன்று எல்லாவற்றையும் இழந்து வழி இன்றி தவிக்கின்றது ரவியின் குடும்பம். இது வடக்குக்கு வசந்தமா? அல்லது தெற்குக்கு வசந்தமா? பதின்மூன்று இதை மீட்டுத் தருமா?

தெருவில் ஒலிபெருக்கியின் சத்தம். வெந்நீர் போத்தலை தவணை முறையில் விற்பனை செய்வதற்கு ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்து கொண்டு செல்கின்றது சிங்கர் கம்பனி.

உற்பத்திக் கலாச்சாரத்திலிருந்து விலகி நுகர்வுக் கலாசாரத்தால் வடக்கு திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. பாவம் ரவி. யுத்தம் அவர்களை நேரடியாக அழித்தது. வடக்கின் வசந்தம் இவர்களை மறைமுகமாக அழித்துக் கொண்டிருக்கின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சோந்திகள்

"ஆசிரியர்களை கை கூப்பித் தொழுவோம்
காம வெறியர்களை கை ஓங்கி எதிர்ப்போம்"

"ஆசிரியம் என்பது புனித தொழில்
அதை நாசம் செய்வதே உன் தொழில்"

"நிர்வாகமே குற்றமிழைத்த கயவனை
பரீட்சை விடயங்களில் இருந்து
உடன் விலக்கு"

"காமுகர்களைக் காக்கத் துடிக்கும்
கயவர்களே
நீங்களும் காமுகர்களே"

பதாகைகளை தாங்கிய கூட்டம் அறிவுச்சாலையில் ஆசிரியரின் உருவப் பொம்மையை எரிக்கிறது. மாணவர்களின் கோஷங்கள் வானை பிளக்கின்றன. சிலர் ஆசிரியரின் பிரத்தியேக அறையையும் தாக்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுச்சாலையில் மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆசிரியர் ஒருவருக்கு எதிராக கொடுத்த முறைப்பாட்டுக்கு கால இழுத்தடிப்பு செய்ததை கண்டித்து விசாரணையை விரைவுபடுத்தக் கோரி இப்போராட்டம்.

ஆசிரியர்களின் சிரேஷ்ட பொது அறை சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

"என்னதான் இருந்தாலும் ஆசிரியரின் உருவப் பொம்மையை எரிக்கக்கூடாது. இது ஆக ஓவராக போகுது" என்றார் ஒருவர்.

"இல்லை சேர் நிர்வாகம் இப்ப அல்ல இருபது வருடங்களுக்கு முன்னரே நாங்கள் மாணவராக இருந்தபோது சரியான வழியில் பக்கச்சார்பு இல்லாமல் இப்பிரச்சினைக்கு நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இது நடந்திருக்காது" என்றார் இளம் ஆசிரியர் ஒருவர்.

"சேர் மாணவர்களை வன்முறைக்கு தூண்டுவது நிர்வாகம்தான். இன்றைக்கு இவ்விடயத்தை நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து நான்கு மாதங்கள் கடந்து விட்டது. உள்ளக விசாரணை அறிக்கையில் ஆசிரியர் உள ரீதியான பாலியல் தொந்தரவுகள் மட்டுமல்ல உடல் ரீதியான தொந்தரவுகளையும் மாணவிகள் மீது செய்தார் என எடுத்துக் கூறியிருந்தும் ஆசிரியர் மீது எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இவ்விடயத்தை சாதாரணமாக பொலிசில் முறைப்பாடு செய்தாலே எதுவித விசாரணையும் இல்லாமல் உடனடியாக குற்றம் சுமத்தப்பட்டவரை சிறையில் அடைப்பார்கள். புத்திஜீவிகளின் நிர்வாகம் அதைவிட மோசமாக இருக்கிறது" என்றார் இன்னொருவர்.

"தம்பி இது இங்கு மட்டும் அல்ல இலங்கையில் எல்லா அறிவுக்கூடங்களிலும் நடைபெறுகின்றது. இந்த ஆசிரியர் மற்றவர்களை விட கொஞ்சம் கூட அவ்வளவுதான்" என்றார் மற்றவர்.

"யாரும் என்னவும் சம்பந்தபட்டவர்களின் விருப்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம். மற்றவர்களை பாதிக்கக்கூடிய வகையில் செய்வதுதான் பிரச்சினை" என்றார் வெளிநாட்டு புத்திஜீவி.

கதைகள் சுவாரஸ்யமாக சென்றன. சிலர் பேச்சுமூச்சு இல்லாமல் ரீயை குடித்துவிட்டு நகர்கின்றார்கள். "ஏன் எங்களுக்கு சோலி, சம்பளத்தை எடுத்தால் போதும்" என முணுமுணுப்பது தெரிகிறது.

பத்திரிகைகளை புரட்டினான் அவன். "காரைநகரில் சிறுமி பாலியல் வல்லுறவு: கடற்படையினர் அணிவகுப்பு.... பெரியப்பாவால் சிறுமி பாலியல் வல்லுறவு" அவனால் வாசிக்க முடியவில்லை.

இந்த ஆய்வுக் கழகம் சமூகத்துக்கு என்ன செய்கின்றது? பல இன்னல்களைச் சுமந்து வன்னியில் படாதபாடுபட்டு நொந்து வந்த இந்தப் பிள்ளைகள் இவர்கள் மீது நம்பிக்கை வைத்து செய்யப்பட்ட முறைப்பாட்டை தட்டிக்கழித்து இறுதியில் அவர்களை வன்முறைக்கு போக தூண்டுகிறார்களே! என்னப்பா இந்த படித்த சமூகம் என அலுத்துக் கொண்டவனுக்கு பத்திரிகையில் இன்னொரு செய்தி.

"உலக வங்கியின் இயக்குநர் அமெரிக்காவில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த அறையில் துப்பரவு தொழிலாளியாக தூய்மைப்படுத்திய பெண்ணை பாலியல் நோக்கில் கட்டிப் பிடித்தார் என்பதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்டார்"

நாம் எங்கே நிற்கிறோம்? தமிழ் இனம் சிங்களவர்களால் மட்டும்தானா ஒடுக்கப்படுகிறது? எங்களுடைய உரிமைகளை பாதுகாக்க எங்களுக்கு அதிகாரம் இல்லையா? இருக்கிற அதிகாரத்தை நாம் சரியாக பயன்படுத்துகின்றோமா? என பல கேள்விக் கணைகளுடன் அவன் இல்லத்தை அடைந்தான். கைத்தொலைபேசி அலறியது.

"மச்சான் என்னடா உங்கட கம்பசில இன்றைக்கு ஆர்ப்பாட்டமாம். இன்ரநெற் எல்லாம் கலக்குது. என்ன நடந்தது?" என்றான் தென் இலங்கை அறிவுக்கூடம் ஒன்றில் பணிபுரியும் அவனின் நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மச்சான் உனக்கு தெரியுந்தானே இது இன்று நேற்று அல்ல. இப்ப இருபது வருடங்களுக்கு மேலாக நடக்குது. மாணவர்கள் கொடுமை தாங்க முடியாமல் 1994, 2009களில் நிர்வாகத்துக்கு முறைப்பாடு செய்தவர்கள். இப்ப 2013இலும் முறைப்பாடு செய்கிறார்கள். என்ன முன்பு அப்பாக்களின் ஆட்சி. இப்ப அம்மாவின் ஆட்சி அவ்வளவுதான். வித்தியாசம் இருக்கும் போல இருக்கு. அம்மாவின் ஆட்சியை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்” என்றான் அவன்.

“மச்சான் 1997இல் இந்த அறிவுக்கூடத்திலும் சமூகவியலில் கல்வி கற்ற ஒரு மாணவி ஓர் விரிவுரையாளர் மீது இப்படியான குற்றச்சாட்டை எழுத்து மூலம் முறைப்பாடு செய்ததன் பிரகாரம் நிர்வாகம் எடுத்த விரைவான விசாரணை காரணமாக விரிவுரையாளரை பதவி நீக்கம் செய்யப்பட வேண்டிவரும் என்பதை முன்கூட்டியே அறிந்த அந்த விரிவுரையாளர் தானாகவே விசாரணை முடிவு வருவதற்கு முன்னர் இராஜிநாமா செய்தார்.

உங்கு குறித்த ஆசிரியர் மாணவர்களுக்கு அநீதி செய்தார் என்பதை பலமுறை கண்டறிந்தும் அவரை ஏன் நிர்வாகம் வைத்திருக்கிறது? ஏன் இழுத்தடிக்கிறது? அவர் என்ன உலக புகழ் பெற்ற ஆசிரியரா? அவர் இல்லை என்றால் அறிவுச்சாலையே அழிந்து விடுமா? இல்லாவிட்டால் உங்கு இருப்பவரகள் எல்லாரும் இப்படியான பெயர்வழிகளா?” என்றான் அவனின் நண்பன்.

இது அறிவுக்கூடத்தின் பேரவை அமர்வு. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத இக் குற்றம் புத்திஜீவிகளின் அதி உச்சமான பேரவைக்கு செல்கின்றது.

உள்ளக பன்னிரண்டு உறுப்பினர்களும் தங்களின் கதிரைகளை பாதுகாப்பதற்காக மௌனம் காக்கிறார்கள். அவர்களில் ஒருவர் “நீங்கள் அவரை இடைநிறுத்தக்கூடாது. அவர் நிறைய ஆராய்ச்சி செய்வதற்கு பல்கலைக்கழகத்துக்கு உள்ளே வர அனுமதிக்க வேண்டும். அவருடைய ஆராய்ச்சியால் இந்த சமூகமே அவரைப் பாராட்டுது” என்றார்.

பேரவையில் வெளியக உறுப்பினர்கள் சிலரும் இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை ஆதரித்து வாதிடுகின்றார்கள். இறுதியாக ஆசிரியரை பணியில் இருந்து நிறுத்தி வைத்துக் கொண்டு, அரைச் சம்பளம் வழங்கி நீதிக்கு அரசன் தலைமையில் விசாரணைக்கு பேரவை சிபார்சு செய்கின்றது.

விசாரணை ஆரம்பமாகிறது.

"என்னை விசாரணை செய்பவர் என்னை விட வயது குறைந்தவர். சட்டத்தின்படி இவர் என்னை விசாரிக்க முடியாது" என்றார் குற்றம்சாட்டப்பட்டவர். முதல் மாதம் முடிகிறது.

"எனக்கு இந்த மாதம் நேரம் இல்லை. நான் சமூகம் கொடுக்க முடியாது" சட்டத்தில் இடம் இருக்கிறது. இரண்டாம் மாதம் கழிகிறது.

"நான் எனது மகனுக்கு வெளிநாட்டில் கல்வி கற்க அனுமதி எடுக்க வேண்டும். ஒரு மாதம் வெளிநாடு செல்ல பயண லீவு தாருங்கள்" என்றார் குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர். சட்டத்தில் இடம் இருக்கிறது. மூன்றாவது மாதம் கழிகிறது.

"சேர் என்ன வேண்டுமென்றாலும் செய்கிறேன். இந்த வழக்கிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று காலில் விழுந்து மன்றாடினார் ஊத்தை குடியார்.

"ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் எழுத்து மூலம், ஒலிப்பதிவு மூலம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். இவைகளில் இரண்டு மாணவிகள் கொடுத்த வாக்குமூலங்கள் மிகவும் பாரதூரமானவை. அவைகளை விசாரணைக்கு வராமல் செய்தால் மிகுதியை நான் பார்த்துக் கொள்வேன்" என்றார் கொன்சல்றன்ற்.

ஊத்தை குடியாரின் கார் வன்னிக்கு பறக்கிறது.

"உங்களுடைய பிள்ளை சில விரிவுரையாளர்களுடன் சேர்ந்து எனக்கு எதிராக இப்படியான கேவலமான குற்றத்தை சுமத்தி இருக்கின்றா. நான் சும்மா விடமாட்டேன். இலங்கையில் உள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் உங்கள் பிள்ளையை அழைப்பன். அப்ப உங்களுடைய பிள்ளையின் மற்றும் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் மானம் கப்பல் ஏறும். ஒருதரும் உங்களுடைய பிள்ளையை திருமணம் செய்ய வரமாட்டினம். நிலைமையை புரிந்தால் சரி" என்றார்.

"எங்களுக்கு என்ன நடந்தது என தெரியாது. அவ இப்ப இங்கு இல்லை. வந்தவுடன் நாங்கள் அவவைக் கட்டுப்படுத்துகிறோம். அவ இனி படிக்க வரமாட்டா. இதை இப்படியே விட்டுவிடுங்கோ சேர். ஒருவருக்கும் சொல்லாதேங்கோ" என்றார் பாதிக்கப்பட்ட மாணவியின் அப்பா. அன்றுடன் அந்த மாணவியின் படிப்பு இடையில் நிறுத்தப்படுகின்றது.

"ஹலோ! பிள்ளைகளை விசாரணைக்கு அழைக்கும்போது எதுவித அழைப்பிதழ்களையும் எழுத்து மூலம் கொடுக்க வேண்டாம். அவர்களை அடிக்கடி கூப்பிட்டு அவமானப்படுத்தி இறுதியில் அவர்களாகவே வராமல் இதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுங்கோ" என்றார் அறிவுச்சாலையின் அபிவிருத்தி அதிகாரி ஒருவர்.

"ஹலோ! நான் எஸ்ராபிலிஸ்மென்ற் பிரான்சில் இருந்து கதைக்கிறன். வருகின்ற சனிக்கிழமை அந்த இரண்டு பிள்ளைகளையும் விசாரணைக்கு வரச் சொல்லுங்கோ" இது மாணவ ஆலோசகர்க்கான அழைப்பு.

"ஹலோ! நான் மாணவ ஆலோசகர் பேசுகிறேன். சனிக்கிழமை விசாரணைக்கு வருவீர்களா?"

"ஓம்! கட்டாயம் வருவம்... உயிர் போனாலும் வருவம். எங்களுடன் இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்" என்றனர்.

சனிக்கிழமை. பிள்ளைகள் வெளி மாவட்டத்திலிருந்து தங்களின் பயண செலவில் அறிவுக்கூடத்துக்கு வந்தனர்.

"பிள்ளை உந்த கதிரையில் இரும். விசாரணையாளர்கள் வருவார்கள் வந்தவுடன் கூப்பிடுகிறன்"

பல மணித்தியாலங்கள் கடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொறி பிள்ளைகள். ஓய்வுபெற்ற நீதியின் அரசனுக்கு கொழும்பில ஒரு முக்கிய மீற்றிங்காம். நீங்கள் போங்கள். நாங்கள் பின்பு அறிவிப்பம்." என்றார் அந்த துணை அதிகாரி.

சில கிழமைகளுக்கு பின்னர் மீண்டும், "ஹலோ! வருகின்ற சனிக்கிழமை அந்த பிள்ளைகளை விசாரணைக்கு அனுப்புங்கோ"

"பிள்ளை கதிரையில் இருங்கோ. நாங்கள் கூப்பிடுவம்"

சில மணித்தியாலங்கள் கடந்தன.

"இன்றைக்கு நீதியின் அரசனின் நாய்க்கு சுகம் இல்லையாம். அவர் மிருக வைத்தியரிடம் அதை எடுத்துக் கொண்டு போட்டாராம். நீங்கள் போங்கோ. நாங்கள் பின்னர் கூப்பிடுவம்.

வாரங்கள் கழிந்தன.

"ஹலோ! அந்தப் பிள்ளைகளை வருகின்ற சனிக்கிழமை விசாரணைக்கு வரச் சொல்லுங்கோ" என்றார் அதிகாரி.

"சேர். என்ன சேர் இப்படி ஒவ்வொருநாளும் எத்தனை தடவைகள் ஒரு வருடமாக அலைக்கிறியள். அவர்களுக்கு திங்கட்கிழமை பரீட்சை தொடங்குது. இந்த நிலையில் அவர்களை கூப்பிடுகின்றது பரீட்சையை பாதிக்கும் அல்லவோ? உங்கள் பிள்ளைகள் என்றால் இப்படி செய்வியளோ?" என்றார் மனம் பொறுக்க இயலாத அந்த மாணவ ஆலோசகர்.

சனிக்கிழமை.

"பிள்ளை கதிரையில் இருங்கோ. எல்லாரும் வந்தவுடன் கூப்பிடுகிறம்" என்றார் அதிகாரி.

சில மணித்தியாலத்துக்குப் பின்னர்.

"இப்பத்தான் நீதியின் அரசன் ஹோால் பண்ணினார். அவர் ஒரு அந்தியஷ்டியில் நிற்கிறாராம். வரமுடியாதாம். நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ. நாங்கள் பின்னர் சொல்லி அனுப்புகிறோம்"

சில வாரங்கள் கழிந்தன.

அதி மேன்மையான பேரவை உறுப்பினர்களின் காலம் முடிவடைந்து குழுப்படம் எடுத்து இறுதி அமர்வில் அமர்கிறார்கள்.

"ஆசிரியர் மீது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற விசாரணை எதிர்வரும் முதலாம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. பொதுச்சேவை சட்டத்தின் பிரகாரம் குற்ற விசாரணைக்காக இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தருக்கு ஒரு வருடத்துக்குள் விசாரணை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இல்லையேல் அவரை சேவையில் உள்வாங்க வேண்டும்" என்கிறார் 1997 இல் இதே காரணத்தை காட்டி குற்றம் சுமத்தப்பட்ட இதே ஆசிரியரை உள்ளுக்கு ஈர்த்த பேரவை உறுப்பினர் மேலும் தொடர்ந்தார்.

"இது ஓர் உயர் நிறுவனம். நாங்கள் சட்டதிட்டங்களுக்கு அமைவாகத்தான் நடவடிக்கைகளை எடுப்பம். குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியரை வெளியில் வைத்திருப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. குற்றம் நிகழ்ந்திருக்கலாம். குற்றத்தை நிரூபிப்பதற்கு தகுந்த ஆதாரங்களாக புகைப்படங்கள், ஒலிப் படங்கள், தகுந்த சாட்சிகள் தேவை. ஆனால் சட்டத்தின்படி ஒரு வருடம் கடந்து விட்டது. பேராசிரியரை உள்ளீர்க்கத்தான் வேண்டும்" என்றார்.

"சேர் நான் இந்த விடயத்தை அன்று உங்களுக்கு தெரியப்படுத்தியபோதே இந்த அறிவுக்கூடம் மிக மோசமான இடம். இதை நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தினால் கடந்த காலத்தைப் போன்று நிர்வாகம் ஒரு மண்ணாங்கட்டியும் செய்ய மாட்டினம். நீங்கள்தான் உபவேந்தர் பெண் எனக்கூறி ஒரு பெண்ணின் வேதனையை ஒரு பெண்ணே அறிவார் என முறையிடும்படி அறிவுறுத்தினீங்கள். இப்ப பார்த்தியளோ. எங்களுடைய மானந்தான் போனது. நாங்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிவிட்டோம். இனி அடுத்த பர்ச்சும் அடுத்த ஆண்டுடன் போய்விடும். இக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதற்கு இவ்வளவு தூரம் நாங்கள் கஷ்டப்பட்டது எல்லாம் வீணாகிப் போய்விட்டது. எங்களுடைய நிலைமையை பாருங்கோ. புத்திஜீவிகள் எப்படி புத்தியாக சீவிக்கிறார்கள்? நீங்களும் இதைப் பற்றி இப்ப பெரிதாக அக்கறை கொள்ளவில்லை. நீங்களும் புத்தியில ஜீவிக்கிறீர்கள் போல இருக்கு" என்றாள் அவள்.

"இல்லை பிள்ளை. இங்கு நான் மட்டுந்தான் இதை கதைத்து திரிகிறனாம். நான்தானாம் இந்த அறிவுச்சாலைக்கு பிரச்சினை. என்னாலதானாம் இந்த வடக்கின் வசந்தம் தடைப்படுகிறதாம். நானும் அடுத்த வருடம் பதவி உயர்வு ஒன்றுக்கு அப்பிளை பண்ணப்போகிறன். நிர்வாகத்துடன் வால் பிடிக்காவிட்டாலும் பறுவாயில்லை. தவறுகளை விமர்சிக்காமல் மௌமான இருக்க வேண்டும். அல்லவா? இதுக்கு பெயர்தான் புத்தியில சீவிப்பது. எனக்கும் குடும்பம் பிள்ளைகள் என்று ஒன்று இருக்குத்தானே. அதை இதை சொல்லி என்ர வேலைக்கும் ஆப்பு வைத்தால் நானும் எனது குடும்பமும் நடுத்தெருவில பிச்சைதான் எடுக்க வேண்டி வரும். அதுதான் இப்ப நான் பச்சோந்தி ஆகி விட்டேன்" என்றான் அவன்.

"அப்படி என்றால் எங்களுக்கு நீதியே கிடைக்காதா? ஏன் எங்களிடம் இவ்வளவு வாக்கு மூலங்களை எடுத்து மாணவ சமூகத்தை அசிங்கப் படுத்தினீங்கள்?" என்றாள் அவள்.

இவ்விடயங்களை நீங்கள் இரகசியமாக எனக்கு கூறியவுடன் நான் உபவேந்தருடன் கதைத்தனான். அவர்தான் எழுத்து மூலம் தரச் சொன்னார். இவர் பல்கலைக்கழகத்தில் ஓர் சிறந்த கல்விப்புலமையைக் கொண்ட துணைவேந்தர். சில அபிவிருத்திகள் செய்கிறார். மாற்றங்கள் வருகின்றன. இந்த விடயத்திலும் காத்திரமான நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால் இருபத்தேழு உறுப்பினர்கள் உள்ள பேரவையில் ஓர் உபவேந்தரால் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. எங்கள் கலாச்சாரம், சமூகம் மீது அக்கறையுள்ள அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும். வடக்கில் வசந்தம் ஒருவரால் மட்டும் வராது. அவருக்குப் பல பக்கங்களால் இடி வருகுது. அந்தக் கதிரையில் அமர்ந்தால்தான் அது உங்களுக்கு விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை உங்கள் மாணவர்களுக்கு கூறுங்கள். மாணவர் சக்தி என்னவென்று அவர்களுக்கு காட்டுங்கள். அப்போதுதான் முடிவு கிடைக்கும். எங்களை இடையீட்டாளர் ஆக்காதீர்கள். நாடு அல்ல இந்த உயர் கல்வி நிறுவனமும் மாணவர்களின் உரிமைகளை பறித்து அவற்றை பெறுவதற்கு மாணவர்களை போராட தூண்டுகின்றது. வடக்கில் வசந்தத்துக்கு பேரினவாதத்துடன் மட்டும் அல்ல எங்களுக்குள்ளும் போராட வேண்டி இருக்கிறது" என்றான்.

------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டத்தின் வலிகள்

"மூன்று குமர்கள் மூச்சு விடுதுகள். ஊரில எல்லாம் கடன், தோட்டத்தாலயும் ஒன்றும் இல்லை. நான்கு வருடம் ஆயிரம் ஆயிரமாய் பணம் இறைத்ததுதான் மிச்சம். ஓர் சூடுசுரணை ஒன்றும் இல்லாமல் எட்டு மணி வரை தூங்குது. உன்னை ஏன் பெத்தனான். ஏன் இவ்வளவு செலவழிச்சு படிப்பிச்சனான், சனியன். துலைந்து போவான். குமருக்கென தேடியதையும் தொலைத்து போட்டு எருமைமாடு போல படுக்குது பார்..............."

என்ற வழமையான துயில் பாட்டின் ஓசையால் கண் விழிக்கிறான் விமல். நன்றாக துளிர் விட்டுப் பரந்து இருந்த வேப்பமரத்துக்கு கீழே சாக்குக் கட்டிலில் விடிய விடிய உறங்கிய விமலை விளக்குமாற்றால் முற்றத்தை கூட்டிக் கொண்டு புறுபுறுத்த அவனின் அன்புத் தாய் மீனாட்சியின் வார்த்தைகள் அவனுக்கு புதியவையல்ல.

இவ்வார்த்தைகளைக் கேட்காமல் அவன் கண் விழித்த நாட்கள் சிலவே ஆகும். இவைகள் உள்ளத்தை சுட்டு பழக்கப்பட்டு விட்டன. இது போதாதென்று காலைக் கதிரவனும் தனது கதிர்களால் உடலைச் சுடுகிறான்.

விமல் அக்கிராமத்தில் முதலாம் ஆண்டு தொடங்கி ஏலெவல்வரை முதல்தர மாணவன். பாட்டனின் இரண்டு ஏக்கர் வயலும் கால் ஏக்கர் தோட்டத்திலும் உழைத்து உழைத்து ரீயுசன் செல்லாமல் படித்து மாவட்டத்தில் முதல் நிலையில் பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் புகுந்து நான்கு வருடம் படித்து முடித்து விட்டு பல வருடமாக வீட்டில் வேலையற்று இருக்கிறான். இவனுக்கு இரண்டு அக்காக்களும், ஒரு தங்கையும். அக்காக்கள் நிறைய படிக்கவில்லை. பொம்பிள்ளைகளுக்கு படிப்பு எதற்கு என அவனின் பாட்டன் நிறுத்தி விட்டார். இதை தடுப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் அப்பாவுக்கோ அம்மாவுக்கோ வலுவில்லை. தங்கை இப்ப ஓ.எல் படிக்கிறாள். மூத்தக்காவுக்கு முப்பது கடந்துவிட்டது. இளையக்காவுக்கு 29 நடக்குது. இவனுக்கு 28 ஆரம்பிக்குது.

விமலின் குடும்பம் உருத்திரபுரத்தில் சாதாரண குடும்பம். கொடிய யுத்தம் அவனின் தந்தையை இவ்வுலகிலிருந்து எடுத்து சில வருடங்கள்தான். அவர்களின் கடுமையான உழைப்பில் அவர்கள் தேடியவை எல்லாம் இடப்பெயர்வில் அழிவடைந்து விட்டன.

விமல் பாடசாலையில் படிக்கும்போது ஐநூறு பாகல்கொடி வைத்து நாலு பவுண் நகையை அக்காவுக்கு வாங்கியதும், ஒரு போக வயலில் ஒரு பவுணில் சங்கிலி வேண்டியதும், ஒரு போக மிளகாய் செய்கையில் அம்மாவுக்கு ஐந்து பவுணில் சங்கிலி வாங்கியதும், பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு இருபத்தைந்து ஆயிரத்துக்கு மேளம் பிடித்து விட்டது என பழையவற்றை நினைத்துப் பார்க்கிறான்.

எப்பிடியெல்லாம் உழைத்தோம் எப்பிடியெல்லாம் வாழ்ந்தம் எல்லாவற்றையும் இந்த கொடிய யுத்தம் அழித்துவிட்டது.

விமலை முகாமில் இருந்த கம்பஸ் நிர்வாகம் 2009 இலேயே எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயபீடத்துக்கு அழைத்துச் சென்றது.

பல்கலைக்கழக பட்டம் பெறவேண்டும் என்ற அவனின் தாயாரின் நீண்ட நாள் ஆசை நிறைவேறியது. எல்லாரையும்போல தனது மகனும் பட்டத்தால் தனது குடும்பத்தை காப்பாற்றுவான் என நம்பினாள் அந்த கிராமத்து ஏழைத் தாய். மீனாட்சிக்கு எதிர்பார்ப்பு அதிகமாகும்.

மீளக் குடியமர்ந்தவர்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்டத்தில் வீடு கட்ட பணம் கிடைத்தது. கையில் ஒன்றும் இல்லை. நாற்பது பவுண் நகையில் மிஞ்சியது இரண்டு சங்கிலி மட்டுந்தான். அதை மக்கள் வங்கியில் அடைவு வைத்து வீட்டின் அத்திவாரம் போடப்பட்டது. அவர்கள் ஐந்தரை லட்சம் தந்தார்கள். வீடு முடியவில்லை. அரைகுறையை முடிப்பதற்கு இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று லட்சம் வேண்டும். வீட்டு வேலைக்கு நில உறுதியை வைத்து கனடா கந்தையாவிடம் இரண்டு லட்சம் வாங்கியது. அது வட்டியுடன் இப்ப மூன்று லட்சமாம். அடைவு வைத்த நகை ஏல விற்பனை என்று கடந்த கிழமை வங்கி கடிதம் அனுப்பியது. கந்தையாண்ணை நேற்று வந்து வீட்டுக் காணியை முதலுக்கும் வட்டிக்கும் சேர்த்து எழுதச் சொன்னவர். போன வருடம் வயல் விதைத்து ஒரு இலட்சம் நட்டம். இருக்கிற வயலைச் செய்வதைவிட அரிசியை வாங்கிச் சாப்பிடலாம், சரியான செலவு. மிச்சம் இல்லை. இதை விட காலநிலை வேறு.

கட்டிலில் இருந்து இறங்கியவன் வேப்பங்குச்சியை எடுத்துக் கொண்டு கிணற்றடி நோக்கிச் சென்றான். மழை இல்லாமையால் கிணறு வரண்டு அடியில் கொஞ்ச தண்ணீர், இயற்கையும் சோதிக்குது. பல்லை விளக்கிக் கொண்டு நிற்கையில் அவனின் பள்ளித் தோழன் குமாரின் தம்பி கேற்றில்.

"எனக்கு பத்தாம் திகதி கீ பேத்டே. அண்ணன் ஒரு லட்சம் அனுப்பி இருக்கிறான். பெரிதாக கொண்டாடுறம். சாப்பாடும். நீங்கள் எல்லாம் குடும்பமா வாருங்கள்" என்றான்.

வகுப்பில் கடைசி மாணவர்களில் ஒருவன்தான் குமார். ஓ.எல்லில் பல பாடங்களில் எவ்தான். அவனை இலண்டனுக்கு அழைத்துச் சென்றது. விமலின் பாட்டனுக்கு கூலி வேலை செய்து கொண்டிருந்த குமாரின் அப்பா யுத்தத்தால் வவுனியாவில் குடியேறி கொழும்பில் ஒரு கடையில் வேலை செய்தார். அவரின் புதிய முதலாளியின் தயவில் குமார் முதலில் கட்டாருக்கு போய் பின்னர் இலண்டனுக்கு போய் விட்டான்.

குமார் தனது இரண்டு தங்கைகளுக்கும் இலண்டனில் மாப்பிள்ளை பார்த்து அவர்களை அங்கேயே செற்றிலாக்கிட்டான். கடைசித் தம்பி மட்டும் இங்கு தாய் தகப்பனுடன் வாழ்கிறான். அவர்களுக்கு அவன்தான் காவல். காவல் தெய்வத்துக்கு ஒரு இலட்சம் செலவில் பேத்டே.

"அண்ணை நான் மற்ற ஆக்களுக்கு சொல்ல வேணும் போட்டுவாறன்" என்று கூறிக் கொண்டு பல்ஸரில் பறந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமல் முகம் கழுவி விட்டு தலைவாயிலுக்கு வந்தபோது மூத்தக்கா தேனீர் நீட்டினா. தேனீரை அருந்தியவாறு வானொலியைத் திருப்பினான். அதில்.... எதிர்த்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். நேற்று வேலையில்லா பட்டதாரிகள் கூரைமீது ஏறி வேலை வழங்கக் கோரி போராட்டம் நடத்தினார்கள்..." என்று செய்தி தொடர்ந்தது.

அதை நிறுத்திவிட்டு ரீவியை அழுத்தினான். "இவ்வருடம் பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் எண்ணிக்கை பத்து வீதத்தால் அதிகரிக்கப்படும்". உயர்கல்வி அமைச்சர் பேசிக் கொண்டிருந்தார்..

"மீனாட்சியக்கா!"

கேற்றைத் திறந்துகொண்டு கல்யாண புரோக்கர் மணியண்ணை.

"வாங்கோ அண்ணை!" கதிரையை எடுத்துப் போட்டான்.

"சொல்லுங்கோ" மீனாட்சி

"அக்கா! உங்களுக்கு ஒரு தோதான இடம் மூத்த பிள்ளைக்கு இருக்கு. பெடியன் தோட்டம். ஒரு தமக்கையும் ஒரு தங்கச்சியும்தான். ரெண்டுக்கும் கட்டிக் கொடுத்தாச்சு. பத்து லட்சம் காசும் நகையும் கொடுத்தாக் காணும். என்ன".. பெடிக்கு ஒரு கண் கொஞ்சம் வாக்கு"

".பரவாயில்லைத்தான். ஆனா.. இப்ப"... அம்மாவின் குரலில் இயலாமை.

"எனக்கு உங்கட நிலமை தெரியாதே? அதுதான் தம்பிக்கும் ஒண்டு கொண்டு வந்திருக்கிறன். நல்ல இடம் ஒண்டு இருக்கு. ஐம்பது லட்சம் காசு, வீடுவளவு. சகோதரங்கள் எல்லாம் நல்ல நாட்டில நிக்குதுகள். தாய் தகப்பனுக்காக இந்தப் பிள்ளை மட்டும் இங்க. வேலை பிரச்சினை இல்லை. பட்டம் இருந்தால் போதும். அவர்கள் சயன்ஸ் பட்டதாரியைத்தான் பார்க்கினம். இங்க கிளிநொச்சியில தகப்பனுக்கு ஒரு பாமசி இருக்கு. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைக்கு பார்த்துக் கொள்ளலாம். ஆனா அது லண்டனில இருக்கிற தமையனுக்குத்தான். வீட்டோட மாப்பிள்ளையாய் போகலாம். தம்பின்ர குறிப்பைத் தாங்கோ. நான் முடித்து வைக்கிறன்"

"இல்லை அண்ணை. எனக்கு இப்ப" என்று தொடங்கியவனை இடை மறித்த மீனாட்சி,

"இந்த ரெண்டு இடத்தையும் விடாதையுங்கோ. வீட்டில கதைச்சிப்போட்டு நாளைக்கு முடிவு சொல்லிறன்" இப்போது அம்மாவின் குரலில் சுருதி ஏறியிருந்ததை அவதானித்தான்.

"சரி அப்ப நான் வாரன்" விலகினார் மணியண்ணை.

வீட்டில் இருந்தால் இந்த விசயத்தை அம்மா தொடங்குவா என அலுத்துக் கொண்டவன் வீட்டின் தட்டியுடன் சாய்த்து விட்டிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு நூல்நிலையத்தை நோக்கி சென்றவன் சைக்கிளின் ஒரு சில்லுக்கு காற்று நிரப்ப வழியில் நின்றான்.

வழியில் வந்த கனடா கந்தையாண்ணை "தம்பி உங்களுடைய அம்மாக்கு வீட்டு வேலை செய்ய இரண்டு லட்சம் கொடுத்தனான். அப்பவே அவ அந்த வீட்டுக்காணியை எழுதித்தாறன் என்று சொன்னவ. நான் குமர் இருக்குதுகள் தேவை இல்லை எண்டு ஆறு மாதத்தில் தரச் சொன்னான். இப்ப ரெண்டு வருசம். எனக்கு வாற கிழமை காசு தர வேண்டும். இல்லாட்டி காணியை எழுதுங்கோ" என்றார்.

"அம்மாவிடம் கதைக்கிறன்" கூறிக்கொண்டு நகர்ந்தான்.

பஸ்கோல்டில் சுவிஸ் தேவியக்கா பஸ்சுக்காக.

"மக்கள் வங்கியில் நகை ஏலம் போடுறாங்களாம். அதுதான் பாப்பம் எண்டு போறன்" தேவியக்கா

விமல் பயணத்தை தொடர்ந்தான்.

திடீரென விமலை விலகிச் சென்ற ஏ.சி.பிக்கப் வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றது.

அதில் இருந்து அவனுடைய ஓ.எல். நண்பன் சுரேஸ் ரையுடன் இறங்கினான். இவன் ஏலெவல் படிக்க கணிதம் இல்லாமையால் இன்சூரென்ஸ் கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தவன்.

"என்ன மச்சான் எப்பிடி இருக்கிறாய், நான்தான் எங்கள் கம்பனிக்கு இப்ப டிஸ்ரிக் மனேச்சர். ஒரு பொலிசி போடப் போறன்"

அவனுக்கு இரண்டு உதவியாளர்கள் பின் சீற்றில் அமர்ந்து இருந்தார்கள். சில நிமிட பேச்சு, விமல் பயணத்தை தொடர்ந்தான்.

ஊருக்கு புதிய ஓர் குடும்பம், நல்ல நிறமான இரண்டு பிள்ளைகள், கணவன், மனைவி வீதியோரத்தில் ஆட்டோவுக்கு காத்திருக்கிறார்கள். விமல் அவர்களை நெருங்கினான். அது அவனுடன் படித்த நண்பி. சுவிஸ்சில் இருந்து வந்திருந்தாள்.

துருப்பிடித்த சைக்கிள், பாத்றூமுக்கு போடும் சிலிப்பர், பல நாட்கள் முகச் சவரம் செய்யாத முகம், அயன்பொக்ஸ் படாத சேட்-ரவுசர், இவைகளுடன் இருந்த விமலை அவள் அடையாளம் காணவில்லை.

விமல் தானும் காணாதவன் போல் விலகிச் சென்றான்.

அவனின் உள்ளம் மட்டும் அல்ல சைக்கிளும் ஓட மறுக்கின்றது. நூல் நிலையத்தை அடைந்தான்.

பத்திரிகை பகுதி அது.

"நாடு யுத்தம் முடிந்து சுபீட்சத்தை நோக்கிச் செல்கிறது"

"தம்புள்ளையில் புத்த பிக்குகள் பள்ளிவாசல் மீது கல்வீசித் தாக்குதல்"

"இலங்கை இன, மத, மொழி வேறுபாடு இல்லாத நாடு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி

"இலங்கை தென்னாசியாவில் கல்வியறிவில் முதலிடம்" அமைச்சர்.

"இலங்கை ஆசியாவின் அதிசயம்" பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

"வடக்கில் வசந்தம் வீசுகின்றது" அமைச்சர்

"காரைநகரில் புலிகள்தான் புலி உடுப்புடன் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர். பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி.

இவைகள் நாளிதழ்களின் பிரதான செய்திகள்.

புரட்டுகிறான், வேலை வாய்ப்பு விளம்பரப் பகுதி. ஐந்து வருட அனுபவம், மூன்று வருட அனுபவம், நான்கு வருட அனுபவம், இரண்டு வருட அனுபவம்............. தொடர்கிறது.

அவன் நூல் நிலையத்தில் இருந்து வெளியேற.......போன் அலற "ஹலோ, ஹலோ,.................."

"அண்ணை நான் உங்கட பாடசாலையில் இந்த வருடம் திறீ ஏ எடுத்த ஆட்ஸ் ஸ்ருடன்ற் கோபி பேசுறன். எனக்கு பினான்ஸ் கம்பனி ஒன்றில் வேலை கிடைத்திருக்கு. கம்பஸ் படிக்கிறது நல்லதா? அல்லது வேலை செய்யிறது நல்லதா?................" மறுமுனையில்.

சயன்சுக்கே இந்த நிலைமை என்றால் ஆட்ஸ்க்கு............ யோசித்தான் விமல்.

"நீ வேலையை விடாதே" என்றான்.

திரும்பி வீட்டிற்கருகில் செல்லும்போது தெருவில் மீன் விற்பவன் மீனாட்சியின் குரலைப் பொருட்படுத்தாமல் வீட்டை விலக்கிச் செல்வது தெரிந்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலியும் பயிரும்

நேரம் பிற்பகல் இரண்டு மணி. பங்குனி வெயில் கொழுத்துகின்றது. கலகலவென இருக்கும் கம்பஸ் மயான அமைதி. ஓர் சிலர் அங்கும் இங்குமாக தங்கள் அலுவலகங்களில் இருக்கிறார்கள்.

முன்பெல்லாம் இரவு எட்டு மணிக்கும் களைகட்டிக் கொண்டிருந்த இந்த அறிவுச்சாலை இப்ப பிற்பகல் இரண்டு மணியுடன் உறங்கி விடுகின்றது.

ஆராய்ச்சிக் கூடங்களையும் ஆராய்ச்சியாளர்கள் வீட்டுடன் மட்டுப்படுத்தி விட்டார்கள். அவர்களும் அவர்களின் வேலைகளும் கம்பசில் கற்பித்தல் மட்டும்தான். வேறு ஒன்றும் இங்கு நடப்பது போல் தெரியவில்லை. சமூகத்துக்கும் நாட்டுக்கும் அவர்களின் ஆய்வுகள் பயன்படுகின்றது என அவர்கள்தான் கூறுகிறார்கள்.

இங்கு வருவது சம்பளம் எடுக்கத்தான் என்ற உளப்பாங்கில் சிலர் கம்பசுக்கு வெளியில பெரிய பிசினெஸ்சும் செய்கிறார்கள்.

புத்திஜீவிகள் புத்தியில் சீவிக்கின்றார்கள்.

இங்கு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை கொண்டாடுவதைத் தடுப்பதற்கு உயர்பாதுகாப்பு வலயத்து இராணுவ நகரத்துக்கு கூப்பிட்டு, ஏற்பாட்டாளர்கள் மாலையிட்டு வரவேற்று, சாப்பாடு கொடுத்து, மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் "யுத்தத்தால் இறந்தவர்களை நினைவுகூரக் கூடாது" என்ற ஒரு அன்பான மிரட்டலான வடக்கின் வசந்தகால அறிவிப்புக்களில் ஒன்றும் அண்மையில்தான் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மயானமாக்கப்பட்ட அறிவுச்சாலையில், மயான அமைதியில், அரைகுறையாக மூடியிருந்த பேராசிரியரின் றூமில் இருந்து பதறி அடித்து வெளியே வருகின்றாள் அவள். உடை அழகும் நேர்த்தியும் கலையவில்லை. முகம் மட்டும் இருண்டு இருந்தது.

“நான் ஏன் பிறந்தேன்?”

அவள் உள்ளத்தில் அடிக்கடி எழும் கேள்வி இந்த அறிவுச்சாலையில் இப்போதும் எழுந்தது.

கொடூர யுத்தத்தின் சாட்சி அவள்.

பீரங்கிச் சத்தங்கள் மட்டுமல்ல சன்னங்களின் சத்தம், யுத்த விமானங்கள், யு.என்.ஏச்.சி.ஆரின் தரப்பாள் வாழ்க்கை, பாலுக்கு அல்ல நீருக்கும் கதறும் குழந்தைகளின் அழுகை, மேலுக்கும் போகாமல் கீழும் விழாமல் குண்டுகள் பதம் பார்த்த உடல்கள், ஊனமுற்றவர்களின் முனகல்கள், விசாகக் காற்று அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கும் புழுதி மண்டலத்திற்கு மேலாக ஆட்லறிகளால் பற்றி எரியும் குடிசைகள், கருகிய உடல்களின் துர்நாற்றம், மனித அவலங்களின் ஒலிகள், பல நாட்கள் பட்டினியால் வாடி உடம்பு அசைவதற்கு வலுவின்றி உயிர்களைத் தாங்கிய உடல்கள், உறவுகளைப் பிரிந்து மனநோயால் வாடிய மனிதர்கள் என எல்லாவற்றிலும் ஊறிப்போய் உறவுகளையும் தொலைத்தவள் இவள்.

ஆனால் வன்னியின் இலட்சக் குண்டுகள், சன்னங்களில் ஒன்று கூட அவளைத் தொடவில்லை.

மக்கள் மீட்பு எனக் கூறி நடந்த முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு பின்பு மக்களோடு மக்களாக செட்டிக்குளம் அகதிகள் முகாமில் மாதக் கணக்கில் வாழ்ந்தவள் அவள். அங்கு விசாரணைகள், பேரம் பேசல்கள் பலவகை. பலர் முகாமுக்கு வெளியில் வர செல்வாக்கு, பணம் என்பதற்கு அப்பால் கற்பும் கூட உதவியது. இன்னல்களைச் சுமந்து வந்தவர்களுக்கு அகதி முகாமும் சொர்க்கமாக இருக்கவில்லை. ஆனால் புதுமாத்தாளனை விட மேலானது. குண்டுமணிகளுக்கு விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகள் நடந்தன. அவர்களில் இவளும் ஒருத்தி.

"உங்களை விசாரிக்கணும்" அவளுக்கு புலனாய்வுக் காரனின் தனிப்பட்ட அழைப்பு.

அது விசாரணை அல்ல. அரவணைக்கும் விசாரணை. அதிலும் அன்பு தெரிந்தது.

"நீங்கள் கம்பஸ்சுக்கு போகணும், மிக விரைவில் போகலாம், என்னுடன் ஒத்துழைக்கணும்"

எதில் ஒத்துழைக்கணும் என்பது தெரியாத ஒன்றல்ல. இதற்காகவா இவ்வளவு காலம் கட்டிக் காத்ததை இழப்பது?

அன்பும் அதிகாரமும் கலந்த பல அழைப்புக்கள் வந்தன. அவை இறுதியாக அதிகாரம் இன்றி அன்பான அழைப்புக்களாகவும் மாறின. அங்கு அவள் மனதுக்குள் அழுதபடி நகர்த்திய நாட்கள்தான் அதிகம். ஆனாலும் கண்களில் நீர் வழியவில்லை.

புலனாய்வுக்காரர் என்றாலும் கீழ்த்தரமானவர்கள் அல்ல. உளரீதியான பாலியல் தொந்தரவுகள் இருந்தன. பலாத்காரம் இல்லை.

புலனாய்வாளர்கள் நண்பர்கள் ஆனார்கள். அவர்கள் பருந்துகளோ, பூனைகளோ அல்ல கிளிகளை வேட்டையாட! சாதாரண மனிதர்கள்தான். அங்கிருந்த ஆயிரம் கரங்களில் ஒன்று கூட அவளைத் தீண்டவில்லை.

அறிவுக்கூட புத்திஜீவிகள் முகாமிலிருந்த மாணவர் களை மிக விரைவாக மீட்டனர். ஒரே இனம் அல்லவா! அக்கறைதான்.

அவளுக்கு முதலாம் வருடம் ஆரம்பமானது.

புதுமுக மாணவர்களை வரவேற்க பழைய மாணவர்கள் ராக்கிங், கலை நிகழ்வுகள், விருந்து உபசாரங்கள், ஆற்றுப்படுத்தல்கள் என பல வந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அவர்களை மாற்ற முயன்றனர். மறப்பதற்கு ஒன்றா? இரண்டா? வீரச்சாவு அடைந்த சகோதர சகோதரிகள், காணாமல் போனோர் பட்டியலில் குடும்ப உறுப்பினர்கள், கைகள் கால்கள் துண்டிக்கப்பட்ட உறவினர்கள், முகாமில் முகவரியே இல்லாது குடும்பங்கள், கணவன் இன்றி பிள்ளைகளுடன் சோற்றுப் பார்சலுக்கு அலையும் அக்காக்கள், தடுப்பு முகாமில் உள்ள சித்தப்பா, மாமா, பெரியண்ணை......,பலரின் மனங்கள் மாற மறுத்தன. மன உளைச்சல் அல்ல மனவடுக்கள் அவை. இலகுவாக நீங்குமா? சிலர் தற்கொலைக்கும் சென்றனர்.

எப்பிடிப் படிப்பது அவர்கள்?. ஆனாலும் படித்தார்கள்.

அந்த ஆசிரியர் ஊத்தை குடியார், அழகாக இருந்தார். டை அடித்து, நேர்த்தியாக உடுத்து ஐம்பதிலும் முப்பது போன்று தோன்ற முயற்சி. நல்ல ரீச்சர். கலைத்துறைக்கு முண்டு கொடுக்க கணிதமும் விஞ்ஞானமும்.

எது படித்தாலும் ஏ எடுத்தாலும் சுயமுயற்சி இல்லையேல் பட்டம் பெற்றவுடன் உண்ணாவிரதம் இருந்து, சில பல வருடங்களுக்குப் பின்னர் முதலாம் வகுப்பில் சித்தியெய்தியவர்களுக்கும் சாதாரண சித்திக்கும் ஒரே வேலை ஒரே சம்பளம்தான் என அறியாதவர் பலர் இங்கு. அவர்களை ருசித்த ருசி அவருக்கு.

கணிதம், விஞ்ஞானம் என்றால் சிலருக்கு சுத்த சூனியம். வன்னியில பலருக்கு பாடசாலையில் இப்பாடங்கள் சாதாரண சித்திதான். இவள் ஏலெவல் படித்த போதுதான் கணிதம் கிளியர் பண்ணியது. அதை கடக்கப் பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும். இங்கும் சிலரால் முடியவில்லை. கலைப் பீடத்துக்கு ஏன் கணிதமும் விஞ்ஞானமும்? கான மயில் ஆட கண்டிருந்த வான் கோழியும் தானும் தன் இறகு விரித்து ஆடலாமா? என அலுத்துக் கொண்டவர்களும் உண்டு.

இது கம்பஸ்தானே. எல்லாம் அவர்கள் கையில்தான் என்பதையும் அவர்தான் வகுப்பில் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் ரியூட்டுக்கள் என்னிடம்தான் நேரடியாகக் கொண்டு வந்து தர வேண்டும். எனது தனி றூமிலதான் தர வேண்டும். அதுவும் தனித்தனியாகத்தான் வரவேண்டும். தனித்தனியாகத்தான் திருப்பி எடுக்கவும் வேண்டும்" இது அவருடைய சட்டம். வளைத்துப் பார்ப்பதற்கு.

சேர்ந்து போனால் டீசன்ற் இல்லையாம். டீசன்ற் வாத்தியார்.

இது முன்னர் சாதாரணமாக இருந்து பின்னர் கட்டளைத் தொனியில் வந்தது. படித்தவர்கள் நாகரீகமானவர்கள். சமூகத்தின் உயர் நிறுவனத்தில் வேலை செய்கிறவர்கள், அதிகாரம் உள்ளவர்கள் எனக் கூறப்படுபவர்கள், டீசன்றைப் பற்றியும் கதைப்பவர்கள் பிழை விடமாட்டினம் என்பது எங்களின் நம்பிக்கை.

தனித்தனியாக போய் வந்தார்கள். தனித்தனி என்றபடியால் சம்பவங்களும் தனித்தனியாகவே இருந்தன. யார் பூனைக்கு மணி கட்டுவது? இருபது வருடத்துக்கு முன்னரும் சில மாணவர்கள் கட்டினவர்களாம். ஆனால் ஊத்தையை அவரைப் போன்ற சிலர் காப்பாற்றிப் போட்டுதுகள் என அறிவுச் சமூகத்துக்கே தெரியும். நடுச்சாமத்திலும் நலம் விசாரிக்கும் பேராசிரியர் இவர்.

இவளுக்கு ரெலிபோன் அழைப்புக்கள். எஸ்.எம்.எஸ் செய்தி வேறு. தொந்தரவுகள் தொடர்ந்தன.

"இது பற்றி யாரிடம் ஏதாவது சொன்னால் எல்லா ஆசிரியர்களும் சேர்ந்து என் மீதே பழி போட்டு தன்னை அறுத்துக் கொட்டி பட்டம் கொடுக்காமல் செய்து விடுவார்களோ?

இதை எனது சக நண்பர்களுக்கு சென்னால் அவர்கள் வால் தலை கால் மூக்கு வைத்து கதைப்பார்களோ? இதனால் படிப்பு முடிந்தவுடன் எனக்கு திருமணம் பேசேக்க.." எங்கள் சமூகம் வேறு, கலாச்சாரம் வேறு. என்ன செய்வது? என்ன உலகம்! படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில். பேராசிரியர் ஊத்தை குடியாரை விட இராணுவப் புலனாய்வுக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கப்பதக்கம்" எல்லாரும் அல்ல. சிலர்தான். ஆனால் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம் போதும். அவள் மனதில் எண்ணங்கள் சுற்றிச் சுழன்றன.

இப்படியே தொடர்பாடல் துன்புறுத்தல்கள் தொடர்ந்தாலும் அவள் படித்தாள்.

இடையிடையே பேராசிரியர் வகுப்பறையில் பரீட்சையை சைகை காட்டுவது மனதில் வந்து போனாலும் எதையும் யாரிடமும் சொல்ல முடியவில்லை. இதுவும் பல்கலையோ! அவளுக்கு குழப்பமாக இருந்தது. வெளியில சொன்னால், படிப்பை இடையில் நிறுத்தவேண்டி வரும்.

பரீட்சைக்கு சில வாரங்கள் மட்டும்தான் இருந்தன. ரியூட் எடுக்க வேண்டும். தனியாகச் சென்று அவரின் றூமில் எடுக்க வேண்டும்.

அவளுக்கு கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. றூம் என்ன அலம்பில் காட்டின் நடுவிலா? புலிகள் பூதாகரமாகக் காட்டிய சிங்கள இராணுவத்திடம் சிக்கியே பல தடைகளைத் தாண்டி வந்தாகி விட்டது.

இவர் படித்தவர்.

டீசன்றைப் பற்றியெல்லாம் கதைக்கிறார்.

பார்ப்பம். சென்றாள்.

கதிரையில் அழகாக கம்பீரமாக வீற்று இருந்தார். காரிருளில் மின்னல் போன்ற அழகான மன்மதச் சிரிப்பு வேறு. அவருடைய பாடம் சித்தி எய்தினால் என்னவோ உலக சாதனை என தன்னைத் தானே பறை அடிக்கிறார். நடிக்கிறார். எங்களுக்கு ஒரு மன்மதன் அல்ல பல மன்மதன்கள் சிரித்தாலும் உணர்வற்ற மரக் கட்டைகளாக ஆக்கப்பட்டு விட்டோம்.

"சேர் ரியூட் எடுக்கணும்"

"நீர் ரெலிபோன் எடுத்தால் ஏன் எடுக்கிறது இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சேர்,.... அது சேர்" தயங்கினாள்

"ஓகே. பிரச்சினை இல்லை. எனக்கு குடும்பத்தில கொஞ்சம் பிரச்சினை. என்ர குடும்ப உறவு நல்லாய் இல்லை. நீர் என்னுடன் ஒத்துழைக்கணும்"

என்ன ஒத்துழைப்பு? விளங்கியது. அங்கு புலனாய் வாளர்கள் கேட்டது. இங்கு பேராசிரியர். படித்தவர்கள்....... நாகரீகமானவர்கள் ................ ஒத்துழைக்கிறதுதான் கம்பஸில டீசன்றா? புரியவில்லை.

"நீர் இந்த மாக்ஸ் எடுத்தால் பைனல் எக்சாமில் பாஸ் பண்ண முடியாது. நான் நல்லவன். பிரச்சினை இல்லை. நீர் பைனல் எக்சாம் எழுதும் போது ஐந்து ஆறு வெற்று தாள்களை இடையில் சேர்த்துக் கட்டும். பின்னர் நான் கூப்பிடுகின்ற போது எனது தனி அறையில் வந்து எழுதும்........"

முதலாம் வருடந்தானே. கொஞ்சம் விளங்கியது. இப்படியும் பரீட்சை எழுதுகின்ற முறை இருக்கோ? எங்கள் ஒருவருக்கும் தெரியாதே. சீனியர்ஸ் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. அடுத்தடுத்த வருடங்களில் மேலும் பல முறைகள் பற்றி தெரிய வருமோ? என்ற சந்தேகம் எழுந்தது. வன்னிதானே. ரவுனில டீசன்ரானவர்கள் டீசன்ராக நடப்பது தெரியாது.

"இந்தப் பையிலுக்குள் உமது ரியூட்டை தேடி எடும்" என்றவாறு மேசையின் மூலையில் மைல்களை பிடிக்க வைத்திருந்த பையிலைக் காட்டினார்.

அவள் ரியூட்டை தேடினாள். உண்மையில் இது அலம்பில் காட்டை விட மோசமானது.

கதிரையை விட்டு எழும்பியவர் நேராக கதவு பக்கம் சென்று, அரை குறையாக மூடியிருந்ததை முழுமையாக்கி, திரும்பி அவளது பின் பக்கத்தில் வந்து "நல்ல நீண்ட மயிர்" என தலையைத் தடவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது எல்லா நரம்புகளும் கடுப்படைய கதவைத் திறந்து கொண்டு வெருண்டு ஓடி வெளியே வந்தாள். கண்களில் நீர் நிறைந்து வழிந்தோட..!

"ஏன் பிள்ளை அழுகிறீர்?" வராந்தாவில் அவசரமாக விலகிச் சென்ற நாஸா விஞ்ஞானியின் கேள்வி இது.

"ரீயூட்டில் மாக்ஸ் குறைவாம். சேர் பேசிப் போட்டார்" அவளுக்கு குரல் தளுதளுத்தது.

நாட்கள் நகர்ந்தன.

ஒருவாறு இன்று பரீட்சைப் பெறுபேறு வந்தது.

ஏ,ஏ,ஏ. இறுதியில் எவ் ஒன்று நீண்டு முழித்துக் கொண்டு இருந்தது. அதுதான் அந்தப் பேராசிரியரின் அடிப்படை கணிதமும் விஞ்ஞானமும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

"ஆய் போவன்!. அத்துலத்த யன்ட" வரவேற்பாளர்.

உள்ளுக்கு நுழைகின்றோம். ஏ.சி ஹோல் அழகாக வர்ணம் தீட்டப்பட்டு அறிவாளிகள் விவாதிக்கின்ற உபகரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுழல் கதிரையில் அந்த பெரிய மனிதர் வீற்றிருந்தார். இக் கதிரை பல இலட்சம் சம்பளம் பெறும் தனியார் வங்கி முகாமையாளருக்குத்தான் முன்னொருபோது சொந்தமாக இருந்தது. ஹோல் ஏசியுடன் சுவர்களில் கமராக்களையும் தாங்கி இருந்தது. அதிகாரம் உள்ளவர்களின் அலுவலகம் அது. சில வருடங்களுக்கு முன்னர் விசாரணைக்கு என்று இந்த அலுவலகத்துக்கு வந்தவர்கள் பின்னர் வீடு போய் சேரவில்லை. அவர்களை வழியில் இடைமறித்தவர்களின் துப்பாக்கிக் குண்டுகள் பதம் பார்த்து இருந்தன. பெயர் சிவில் ஒப்பீஸ். ஆனால் அது இராணுவ அலுவலகந்தான்.

தோளில் பல நட்சத்திர பதக்கங்கள் மிளிர்கின்றன. கம்பீரமான உடல் கட்டமைப்பு. இராணுவம் ஆயினும் மக்களை மயக்கும் வசீகரமான புன்னகை. சரளமான ஆங்கில பேச்சு இவைகளுடன் எங்களை கைகுலுக்கி வரவேற்கிறார் அந்த பிரிகேடியர். இவருடன் இன்னும் சிலர். வெண்ணிற ஆடையில் அமைதியின் சின்னமாகவும் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர்தான் இலங்கை இராணுவத்தின் யாழ் மாவட்டத்துக்கான சிவில் நிர்வாக சேவை அதிகாரி. பல சிவில் பிரமுகர்களை சந்தித்த இவர்கள் இன்று உயர்கல்விச்சாலை புத்திஜீவிகளின் சங்கப் பிரதிநிதிகளை சந்திக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் உங்களை பலாலிக்கு அழைத்து மே மாதத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூடாது. பாடசாலை கல்விச் செயற்பாடுகளுடன் தங்களை மட்டுப்படுத்த வேண்டும். இதற்கு எல்லாம் உபவேந்தரும் நீங்கள் ஓம் என்று கூறிவிட்டு இங்கு வந்துவிட்டு நாளைக்கு ஆசிரியர் சங்க தலைமையில் நினைவேந்தல் செய்கிறீர்களாமே? ஏன் இப்படி செய்கிறீர்கள்? இதை தவிர்க்கக் கூடாதா? இது எங்களுடைய கட்டளை அல்ல. அன்பான சினேகிதபூர்வமான ஓர் வேண்டுகோள்" என அழகான ஆங்கிலத்தில் எடுத்து இயம்பினார் அந்த பிரிகேடியர்.

சிறிது நேரம் மயான அமைதி. இந்த அமைதியை குலைத்தது தலைவரின் பதில்.

"இது ஓர் பொது நிகழ்வு அல்ல. இந்த அறிவுச்சாலையின் சமூகம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக இறுதிப் போரில் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு நாளைக்கு ஒன்று கூடுகின்றோம். இறந்தவர்களுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்வது பயங்கரவாதம் அல்ல. நாங்கள், நீங்கள் பயங்கரவாதிகள் தினம் எனக் கூறுகின்ற மாவீரர் தினத்துக்கோ அல்லது புலிகளின் தலைவரின் இறந்த தினத்துக்கோ விளக்கு கொழுத்தவில்லை. போரில் மே மாதத்தில் பல ஆயிரக்கணக்கில் இறந்த மக்களுக்கு அஞ்சலி மட்டும்தான் செலுத்துகின்றோம். இது எவ்விதத்திலும் பயங்கரவாதமோ அல்லது புலிகளை நினைவு கூர்வதோ அல்ல" என்றார் சங்கத்தின் தலைவர்.

"நினைவு கூர்வது பிரச்சினை இல்லை பொது இடத்தில் நினைவு கூருதல் கூடாது, ஏன் இதை இந்த அறிவுச்சாலையில் செய்கிறீர்கள்" என்றார் பிரிகேடியர்.

"இந்த அறிவுச்சாலை ஓர் பெரிய சமூகம். இது சிறப்பான ஒன்று கூடல் அல்ல. வழமையாக நாங்கள் ஒன்று கூடுகின்ற இடத்தில்தான் ஒன்று கூடுகின்றோம். இது பயங்கரவாதம் என்றால் இலங்கைச் சட்டம் மீறப்பட்டால் நீங்கள் எங்களை கைது செய்யலாம் என்றார்" இன்னொரு பிரதிநிதி.

"இல்லை நீங்கள் ஆசிரியர்கள். நீங்கள் இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினால் மாணவர்களை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது. எனவே உங்களை நாங்கள் சினேகிதபூர்வமாக இதை கைவிடச் சொல்லி கேட்கிறோம். இந்த ஹோலுக்குள் படை அதிகாரிகளே செல்போனுடன் வருவதில்லை. நாங்கள் உங்களை போனுடன் அனுமதித்தது மட்டும் அல்ல. சிலர் இப்போது போனும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இராணுவத்துக்கும் உங்களுக்கும் இடையில் உறவைப் பலப்படுத்த வேண்டும். ஏன் நீங்கள் ஒத்துழைக்க கூடாது" என்றார் பிரிகேடியர்.

"நாங்கள் கடந்த காலம் எல்லாவற்றையும் மறப்போம். ஒன்றையும் ஒருவருக்கும் ஞாபகப்படுத்த வேண்டாம். அமைதியான இலங்கையை கட்டியெழுப்ப துணைநிற்போம். ஆனால் முப்பது ஆண்டு யுத்தத்துக்கு பின்னரும் இங்கு என்ன நடக்குது? யுத்தம் முடிந்து ஐந்து வருடம் கழிந்தும் இந்த வடக்கின் வசந்தத்தில் மக்கள் மீளக் குடியமரவில்லை. இன நல்லிணக்கம் என்ற போர்வையில் இன முரண்பாட்டு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. கிராண்ட்பாஸ்சிலும், தம்புள்ளவிலும் இராணுவம் மற்றும் பொலிஸ் முன்னிலையில் பள்ளிவாசல்களை பௌத்த மதவாதிகள் கூட்டமாக சென்று உடைத்து அழிக்கின்றார்கள். இவர்கள் பயங்கரவாதிகள் இல்லையா? இன நல்லிணக்கம் என்பது இதுவா? இவர்களுக்கு வெலிகந்த முகாமில் புனர்வாழ்வு கொடுக்காமல் இறந்த ஆத்மாவின் சாந்திக்கு தீபம் ஏற்றி வழிபட்டவர்களை புனர்வாழ்வு முகாம்களில் அடைத்து வைத்திருக்கிறீர்கள் இதுவா, சமாதானத்தை கட்டி எழுப்பும் இலட்சணம்" என்றார் இன்னொரு பிரதிநிதி.

"இது ஓர் சில பௌத்த அடிப்படைவாதிகள் செய்வது. அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்ததாக எனக்கு தெரியவில்லை. வடக்கு மற்றும் கிழக்கை பங்கரவாத பிடியில் இருந்து மீட்டுவிட்டோம். கார்பெற் வீதி, புகையிரத வீதி என எல்லாம் உங்களுக்கு கிடைக்குது. ஏன் இந்த அபிவிருத்தியை அதுவும் படித்த நீங்கள் குழப்புகிறீர்கள்"? என்றார் பிரிகேடியர்.

பிரச்சினை கொஞ்சம் வில்லங்கமாக போகுது. எல்லோருக்கும் கடுப்பேறியது. வந்து விட்டோம். எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை சொல்லத்தான் வேண்டும். கதைக்க வேண்டியவர்கள் பல சந்தர்ப்பங்களில் கதைக்காமல் இருந்தபடியால்தான் நாம் இன்று அடக்கப்படுகிறோம்.

"புகையிரத வீதியும், பெருந்தெருவும் யாழ்ப்பாணத்துக்கு வெள்ளைக்காரன் இருந்த காலத்திலேயே வந்துவிட்டது. புகையிரத வீதியில் அரசுக்கு வருமானத்தை பெருக்கும் அரச புகையிரதம் ஓடப் போகுது. கார்பெற் வீதியில் அரசியல் வாதிகளின் ஆதரவில் அரசுக்கு வரி செலுத்தி வீதி அனுமதிப் பத்திரத்தை பெற்ற பஸ்கள் ஓடுகின்றன. இவற்றால் இங்கு உள்ள சாதாரண மக்களின் வாழ்வு எப்படி வளமாகப் போகின்றது? பொருளாதார அபிவிருத்திக்கு முன்னர் அரசியல் உரிமை எமக்கு தேவை. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கே உரிமை இல்லாத இந்த பிரதேசத்தில் இவையெல்லாம் இருந்து என்ன பயன்? இப்படி ஒரு வசந்தம் எமக்கு தேவையா? நீங்கள் எங்கள் நிலையில் இருந்து உங்களை ஆட்சி செய்கிறவர்கள் இப்படி அஞ்சலி செலுத்தும் உரிமையை தடுத்தால் உங்கள் மன இயல்பு எப்படி இருக்கும்? தயவுசெய்து உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். ஜே.வி.பி இறந்த தங்கள் உறுப்பினர்களுக்கு போஸ்டர் ஒட்டி ஆடம்பர விழாக்களை எடுத்து அவர்களை வருடாவருடம் நினைவு கூருகிறார்கள். அவர்களும் ஓர் காலத்தில் பயங்கரவாதிகளாக அரசால் கூறப்பட்டார்கள். நாங்கள் அரசால் பயங்கரவாதி என கூறப்பட்ட புலிகளுக்கு அஞ்சலி செலுத்தவில்லை. மக்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம். இதை ஏன் நீங்கள் தடுக்கிறீர்கள்" என காரசாரமாக எடுத்து இயம்பினார் இன்னொருவர்.

"நான் உங்களை விளங்கிக் கொள்கின்றேன். எனக்கு இந்த இராணுவ உடை இல்லையாயின் உங்கள் கருத்துகளுடன் நான் முழுமையாக உடன்படுகின்றேன். நாங்கள் மேல் இடத்தில் இருந்து வரும் கட்டளைக்கு கீழ்படிய வேண்டும்" என்றார் அந்த மாமனிதர். அவர் எங்களை புரிந்து கொண்டார். நாங்கள் அவரை புரிந்து கொண்டோம்.

"நாங்கள் வரலாற்றை மறந்து வாழ்கின்றோம். துட்டகைமுனு எல்லாளனை வென்றபோது யானையில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கி இறந்த எல்லாளனை வணங்கியுள்ளான். அவன் இறந்த இடத்தில் அவனுக்கு சமாதி அமைத்து அவ்விடத்தை தாண்டி செல்பவர்கள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறங்கி எல்லாளனுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என கட்டளை இட்டுள்ளதாக மகாவம்சம் கூறுகின்றது. இந்த உயர்ந்த வீரனுக்குரிய பண்புகளைக் கொண்டுள்ள வரலாற்றை கொண்ட இலங்கையில் வீரனுக்கு அல்ல. போரில் இறந்த அப்பாவி மக்களுக்கு கூட அஞ்சலி செலுத்த வடக்கில் வசந்தகால உரிமை இல்லையா? இதுவா ஐந்து வருட வசந்தத்தின் வாசனை. இது அநீதி. எல்லாற்றிற்கும் ஓர் எல்லை இருக்கிறது. இது எல்லை மீறிய அடக்குமுறை" என்றார். ஆசிரிய சங்கப் பிரதிநிதி ஒருவர்.

"ஓகே நான் உங்கள் உணர்வுகளை மதிக்கின்றேன். எதுவும் பிரச்சினை ஏற்படாத வகையில் இந்நிகழ்வை கொண்டாடுங்கள். பிரச்சினை ஏற்பட்டால் பொலீஸ் மற்றும் இராணுவம் தலையிட வேண்டி இருக்கும்" என்றார் அந்த உயர்ந்த மனிதன்.

"நாங்கள் பிரச்சினைகளை உருவாக்க மாட்டோம் கடந்த காலத்தில் தமிழர்களின் ஊர்வலங்களில் இராணுவம் மற்றும் பொலிஸ் முன்னிலையில் புலிக்கொடியுடன் மோட்டார் சைக்கிளில் பலர் திரிந்துள்ளனர். இப்படி பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் நாங்கள் அல்ல. யார் என்பது உங்களுக்கு தெரியும்" என விளக்கமளித்தனர் சங்கப் பிரதிநிதிகள்.

இறுதியாக கை குலுக்கலுடன் விடைபெற்றுக் கொண்டு சிவில் அலுவலகத்தில் இருந்து நீங்கியது ஆசிரியர் சங்க குழு.

எங்களை அழைத்து செல்வதற்கு தயாராக இருந்த வாகனத்தில் வளாகத்தை அடைந்தோம். சந்திப்பு விபரம் முழுவதும் பரவியது. மறுநாள் நினைவேந்தலை கொண்டாடுவது உறுதியானது.

பிற்பகல் ஐந்தரை மணி தலைவரின் வீட்டு வாசலில் பொலீஸ் ஜீப் ஆனால் சிவில் உடையில்.

"நாங்கள் ரீ.ஐ.டீ இல் இருந்து வருகின்றோம். உங்களை நாளைக்கு பத்து மணிக்கு கொழும்பு தலைமை அலுவலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரிக்க வேண்டும். உடனடியாக நீங்கள் கொழும்புக்கு போக வேண்டும்" என்றனர்.

"நான் தனிமையில் பத்து வயது பெண் குழந்தையுடன் இருக்கின்றேன். எனக்கு மனைவி இல்லை. அயலில் சொந்தம் இல்லை. பெண் குழந்தையை எல்லா வீட்டிலும் விட்டுவிட்டு செல்ல முடியாது. இப்ப நேரம் இரவு ஆகிறது. இந்நிலையில் இப்ப என்னால் கொழும்புக்கு செல்ல முடியாது. உங்களுடைய அழைப்பை ஏற்கின்றேன். நாளை மறுதினம் சமூகம் தருகின்றேன்" என கேட்டார் தலைவர்.

"மறுவார்த்தை கூறக் கூடாது. இது எங்கள் கட்டளை. மீறினால் உங்களை இங்கு இப்பவே கைது செய்ய வேண்டிய நிலை வரும்" என்றனர்.

எல்லா ஆயத்தங்களையும் செய்து இரவு பதினொரு மணிக்கு தலைவர் கொழும்புக்கு பயணமானார். மறுநாள் நிகழ்வுக்கு தலைமை தாங்க இருப்பவருக்கு அவருடைய சக விரிவுரையாளரிடம் இருந்து அழைப்பு.

"நீங்கள் தேவை இல்லாமல் உந்த விளக்கு கொழுத்துற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். எப்படியாவது மானத்தை விற்றாவது உயர் பதவிக்கு வர முதலில் கற்றுக் கொள்ளும். தேவை இல்லாமல் உங்களுடைய எதிர்காலத்தை வீணாக்காதே" என்றார்.

அவர் கலக்கமடைந்து நிர்வாக சபையில் இன்னொருவரை போனில் அழைக்கின்றார்.

"இப்படி ஓர் நிலையிலை எப்படி அஞ்சலி நிகழ்வை செய்வது. எல்லாரும் பேசினம். ஒருவரும் வரமாட்டார்கள் போல இருக்கு. ஒரு பொதுக் கூட்டம் ஒன்றை அழைத்து அதில் முடிவு எடுத்தால் என்ன? எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இப்படி ஓர் நிலையில் நான் இதை தலைமை தாங்கி செய்யமாட்டேன்" என்றார்.

"இந்த நிகழ்வு நடத்துவது பொதுக் கூட்டத்திலதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தது. பிரிகேடியரே நடத்தும்படி கூறிவிட்டார்கள். நீங்கள் ஏன் இப்ப குழம்பிறியள். பிரச்சினை இல்லை. காலை நிர்வாக சபைக் கூட்டத்தில யார் தலைமை தாங்குவது என முடிவு எடுப்பம்.

சிறிது நேரத்தில் மீண்டும் அழைப்பு "நான் தலைமை தாங்கி செய்கின்றேன்" என்றார் அவர்.

"உது என்ன திருவிழா, யாரை கேட்டுச் செய்கிறியள் ஒருதரும் வரமாட்டார்கள்" என்றார் ஒரு பெண்மணி.

மறுநாள் அஞ்சலி நிகழ்வு திட்டமிட்ட இடத்தில் திட்டமிடப்பட்ட நேரத்தில் நடைபெற்றது. மண்டபம் நிரம்பி வழிந்தது. ஆனால் புத்திஜீவிகள் விரல்விட்டு எண்ணும் அளவுதான் வந்தனர்.

"எனக்கு எந்த இடம் என்று தெரியாது" என்றார். நிகழ்வு நடைபெற்ற மண்டபத்திற்கு அருகில் விரிவுரை எடுத்த இன்னொரு புத்திசீவி.

"எனக்கு எந்த இடம் என்று தெரியாது" என்றார் நேரத்துக்கு வந்து சிரேஸ்ட பொது அறையில் இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இன்னொரு புத்திசீவி.

"நான் அடுத்த மாதம் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க போகின்றேன். ஏன் நிர்வாகத்துடன் சோலி" என்றார் இன்னொரு புத்திசீவி.

"இணைப்பாளர் பதவி ஒன்று காலியாக இருக்கு. என்ர பெயரும் அடிபடுது போல இருக்கு. அதுதான் தவிர்த்தனான்" என்றார் அடுத்த புத்திசீவி.

"நான் வந்து பங்கு கொண்டால் டீனுக்கு பிடிக்காது. என்ர தலைவர் பதவி அடுத்த மாதத்துடன் முடியுது. டீன்தான் தொடர்ந்து இருக்க சிபார்சு செய்ய வேண்டும்" என்றார் இன்னொருவர்.

"உந்த அஞ்சலி நிகழ்வு எல்லாம் வேலை இல்லாதவர்கள் செய்கிற வேலை. வன்னியில சனம் படுகின்றபாடு இவர்களுக்கு தெரியுமா? ஏதாவது செய்வது என்றால் அதுகளுக்கு உவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம் தானே" என்றார் ஒருவர்.

"நாங்கள் உங்களை எதையும் வற்புறுத்தவில்லை. எங்களால் முடிந்தவற்றைத்தான் நாங்கள் செய்ய முடியும். முப்பது ஆண்டு யுத்தத்துக்கு பின்னரும் ஐந்து ஆண்டு வடக்கின் வசந்தத்திலும் இங்கு உள்ள மக்களுக்கு இறந்தவர்களுக்கு கூட அஞ்சலி செலுத்த உரிமை இல்லை என்பதை இந்த அறிவுச்சாலை வெளியில கொண்டு வராவிட்டால் வேறுயார் இந்த அடக்கு முறையை வெளியில் கொண்டுவருவது? இது கூட செய்யாத நீங்கள் சமூகத்துக்கு என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள்?" என்றார் நிர்வாக சபை அங்கத்தவர் ஒருவர்.

"உங்களுக்கு வாழத் தெரியாது போல இருக்கு. ஒரு நாளைக்கு விரிவுரையாளர் டிப்பரில் மோதி மரணம் என்ற செய்தி வரும். நாட்டில என்ன மாதிரியான கொலைகள் நடக்குது என்று தெரியாது போல இருக்கு. முன்னாள் நீதியரசர் சிராணிக்கு நடப்பது தெரியாது போல இருக்கு" என்றார் மீண்டும் அவர்..

"எனக்கு அப்படித்தான் மரணம் என்றால் அதை யாராலும் தடுக்க முடியாது. அநீதிக்கு எதிராக எனது உயிரை ஏன் தியாகம் செய்யக் கூடாது? எப்பவோ ஒரு நாள் போற உயிருக்காக மானம் கெட்டு வாழக்கூடாது" எனறார் அந்த அங்கத்தவர்.

"கொழும்பில என்னுடைய தங்கையின் குடும்பம் வந்து நிற்குது, அதுதான் அவர்களை பார்க்கப் போன காரணத்தால் அன்று நிகழ்வுக்கு வரமுடியவில்லை ............"

"எனக்கு அன்றைய தினம் சரியான காய்ச்சல் தலையிடி எழும்பி நடக்கவே முடியவில்லை"

"நான் ஒருவரின் இறந்த வீட்டுக்கிரியை ஒன்றுக்கு போகவேண்டி இருந்தது....."

"நான் அன்றைய தினம் எங்கள் வீட்டு பக்கத்து கோயிலுக்கு அன்னதானம் கொடுத்தனான். இந்த பாவ நீக்கம் என்ர அப்பா கோப்பிரட்டியில இருக்கும்போதே தொடங்கியது. அது தான் அன்றைய தினம் வரமுடியவில்லை....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பலர் பல பல காரணங்கள்

"நான் கெட்டோ, டீனோ, வீசியோ ஆக மாட்டேன். எனக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். சராசரி மனிதனாக வாழ்வோம்" என்றார் அந்த அங்கத்தவர்.

--------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப் பற்றி..



பொருளியலில் பல நூல்களை வெளியிட்டுள்ள கலாநிதி செ. சந்திரசேகரம் அவர்கள் பொருளியலுக்கு வெளியே 'தமிழ் இலக்கியங்களில் பெண்களின் குணங்கள்" என்ற ஒரு நூலையும் வெளியிட்டு உள்ளார்.

நூலாசிரியர் இந்நூலை தனது சிறுகதைத் தொகுப்பு எனக் கூறியுள்ளார். 'சிறுகதை' என்றவுடன் வாசகர்கள் மனதில் அது ஒரு 'புனைவு (fiction) என்ற பதிலவயே ஏற்படுத்தும். புலனவு என்பது வெறும் கற்பனையானது. உண்மையற்ற சம்பவங்களுடன் deal பண்ணுவது. அச் சம்பவங்களைக் கற்பனை பண்ணி கதை பண்ணுவது. ஆனால் இவரது கதைகள் வாழ்வின் உண்மையான சம்பவங்களை அடியொற்றி எழுந்தவை. புனைவு அல்லாதது (non-fiction) தன்னைச் சூழ நடந்த சம்பவங்கள் தன்னைத் தூண்டியதாக இவர் கூறுகிறார். அச் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்தபோது தன் மனக் கண்ணில் 'தோன்றிய' அல்லது தான் கண்ட கற்பனைகளை கதைகளாக வடித்துள்ளார். இது ஒரு தன்னெழுச்சியான (Spontaneous) செயற்பாடு. தமது மனங்களுக்குள் புழுங்கிக்கொண்டு ஆனால் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் தவித்தவர்களுக்கு இக்கதைகள் ஒத்தடம் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை. தாம் பேச விரும்பினாலும் பேச முடியாத விடயங்களை ஒரு துணிவுள்ள இலக்கியகாரன் பேசுகிறானே என்பது பாதிக்கப்பட்டவர்களின் மனதுக்கு இதமாக இருக்கும். இதுதான் இச் சிறுநூலின் வலு.

கலாநிதி கே.சிதம்பரநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலை துறை
யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

விலை:200/-

ISBN : 978-955-44890-3-5

அபி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org